திருச்சிற்றம்பலம்.

வித்தியாபிமானிகளுக்கு

விக்ஞாபன நிரசனம்.

இஃது

சென்னைப்பாலசுப்பிரமணியபக்தஜனசபை

காரியதரிசியும், சைவப்பிரசாரகருமாகிய

வித்துவான்

திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரால்

இயற்றப்பட்டு,

சென்னைபட்டணம்

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

விரோதகிருது ஆவணி மீ

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வித்தியாபிமானிகளுக்கு

விக்யாபன நிரசனம்.

"ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தருமசிந்தனை" என்னும் பத்திரிகை ம-௱-௱-ஸ்ரீ சுவாமிநாதபண்டிதரால் வெளிப்படுத்தப்பட்டமை பலாறிவர். அதற்குப்பிரதியாக ஒருபத்திரிகை, "வித்தியாபிமானிகளுக்கு விக்யாபனம்" என்னும் மகுடத்தோடு, சிவபுரி ஸ்ரீ கலியாணசுந்தரம் என்னுங் கைச்சாத்திடப்பட்டு வெளிவந்துலவக் கண்டனம். அதிலுள்ள வாக்கியப்போக்குக்கள் ம-௱-௱-ஸ்ரீ பொன்னம்பலபிள்ளையைப் புலப்படுத்துகின்றன என்று கூறுவார் கூறுக. யாம் கைச்சாத்தளவிற் சம்பந்தமுற்ற கலியாணசுந்தரத்தையும் வித்தைவிரும்பும் உத்தமசீலரையும் இவைபுநோக்கி முன்னிலைப்படுத்தி யாவுங்கூறுவாம். ஆயினும் எங்கேதான்செல்லும்? "எய்தவனிருக்க அம்பைநோகலாமா?"

வித்தைவிரும்பும் உத்தமசீலர்காள்! மேலேசுட்டிய இருபத்திரிகைகளும் உங்களெதிரே இருக்கின்றன. பண்டிதர் பத்திரிகைக்கு விக்கியாபனப்பத்திரிகை விடைபகர்கின்றதா அன்றி அழுக்காறுதியவற்றைப் புலப்படுத்தும் நடைபகர்கின்றதா என்பதனையுற்றுநோக்கி உண்மைகடைப்பிடித்துக் கொள்ளுங்கள்.

பண்டிதர் இந்தியாவிற்கு வருதற்கு முன்னரும் தமது காலத்தையும் கருத்தையும் பொருளையும் சைவசமயாபிவிருத்தியின் பொருட்டும் தமிழ்க்கல்வியின்பொருட்டுஞ்செலவழித்துவந்தா ரென்பது, அவர் பரிசோதித்து அச்சிடுவித்த திருக்கோவையாருண்மைக்கு அவராசிரியரும், யாழ்ப்பாணத்து வித்துவான்களும் கொடுத்த சிறப்புப்பாயிரங்களாலும், "ஆரியஜனப்பிரியன்" முதலிய பத்திரிகைகளாலும் யாவருமறிந்தவிஷயமே. அப்பாயிரங்களிவை:—

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் மருகரும் மாணாக்கருமாகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள் இயற்றிய நிலைமண்டலவாசிரியப்பா:—

"சீரார் கொன்றை திகழ்ந்திடு சென்னி
யோரார் சங்கர னின்னருள் பெற்ற
திருவாத வூரடிச் செல்வர் செப்பிய
திருக்கோ வையாரின் செவ்விய வுண்மையைத்
தருக்கோ டிருவினை தமைப்புரிந் திடவரு

கருக்கோ டியினிற் றிருக்கா சறவே
பக்குவ ருணர்ந்து நெக்குள முருக
வக்கு மாலையு மருட்டிரு நீறு
மிக்கன வென்று மேற்கொளு மன்பன்
றக்கநல் லறத்துறை தானறிந் தொழுகுவோன்
வண்ணைவாழ் சின்னத் தம்பிவேள் வயக்க
நண்ணிய தவப்பய னாகிநன் குதித்தோ
னிலக்கண விலக்கிய மியல்பெறக் கற்றோன்
புலக்குரி மாந்தர் நலக்குரி பண்பாற்
றம்பைய னென்றித் தலத்தோர் சாற்றுஞ்
சுவாமி நாதனும் சொல்பெயர்த் தோன்ற
லெழுதா வெழுத்தி னியைத்துவழு நீக்கி
வெளிப்படுத் தினனிம் மேதினி தனிலே."

சைவபரிபாலனசபையின் கௌரவப் பிரசாரகர் பிரமஸ்ரீ வாம்பைய ரவர்கள் இயற்றிய நேரிசையாசிரியப்பா:—

"நாவலர் புகழுறு நாவல னென்றே
பூவல களவோ தேவல களவும்
பொங்கிய சீர்த்தி யங்கவன் மருகாய்த்
தங்கியு மக்குருத் தண்ணளி பெற்றுங்
கலைக்கட லனைத்து நிலைத்திடக் கொண்டே
மலைத்திடா தெவருந் தலைப்படப் புகட்டிப்
பயன்மிகும் பொன்னம் பலவப் பிள்ளை
வியனுறுஞ் சிரேட்ட வித்துவச் சிரோமணி
தன்னிடத் தன்பு மன்னிட நெடுநா
ளன்னிய மின்றி யமைதரக் கற்றோன்
றன்று சிரியன் றன்னைப் போல
வுன்னரு நூல்க ளுறுநர்க் குரைப்போ
னல்லூர் மாவை சொல்லூர் மருதடி
பல்லூ ராலயம் பணிந்திடச் சாரு
மடியவர் முன்ன ரடர்ந்து பலவாய்க்
குடில வார்த்தைகள் கூறி நிற்கும்
விவிலியர் தூடணம் வினவ றீதென
நவிலரு மோர்சபை நண்ணிடக் கூட்டியும்
பத்திரப் புத்தகம் பரிவொடு பதிப்பித்
தெத்திசை தனிலு மெண்ணில பரப்பியுங்
கண்டன மியற்றி மிண்டிடா தோட்டி
யெண்டகு கீர்த்தி பண்டையிற் படைத்தோன்
கொச்சைச் சமயக் குழியில் வீழ
வச்செழு வூரி லடர்ந்த வெழுவரின்
முன்னர்ச் சென்று முதல்வன் மேன்மையைப்
பன்னிச் சைவப் பண்பைத் தேற்றித்
திருத்திய கருணை திகழ்ந்த வறிஞ
னுருத்த லில்லா வுயர்குண சீலன்

சிவனடி யவரைச் சிவனெனப் பேணிப்
பவவினை கெடுக்கும் பத்திமிக் குடையோன்
றுர்க்குணத் தவரைத் தூரத் தகற்றி
நற்குணத் தவரை நண்ணுறும் பெரியன்
றாளாண் முயற்சி தன்னொளி யுற்ற
வேளாண் குலத்தில் விளங்க வந்தோன்
சைவ தீக்கை யுய்வரப் பெற்று
மெய்திகழ் நூல்கள் விழைபவன் வண்ணைச்
சின்னத் தம்பி செய்த தவத்தான்
முன்ன வந்த முழுத்தவ முடையோன்
றம்பையா பிள்ளை யென்பதோர் பெயரை
யம்புவி யேத்திட வாண்டநற்
சுவாமி நாத சுகுண பண்டிதனே.''

ஸ்ரீமத். வித்துவசிரோமணி அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் இயற்றிய நேரிசையாசிரியப்பா.

''திருவளர் தில்லைச் சிதம்பர மன்றத்
தருள்வளர் காரண மாகிய நடனத்
தற்புத மூர்த்தி யதிபர மாப்தன்
சிற்பர வஸ்து தேவர்கள் பெருமான்
வேதிய வடிவம் விளங்குறப் பூண்டு
வாதவூ ரடிகண் மாமருங் கணவிப்
பேதை பாகனைப் பேரம் பலவனை
யோதியா மெல்லா முய்யும் வண்ணம்
நாடருந் தமிழி னலமுறக் கோவை
பாடுக வென்னப் பரிவொடு பாடிய
வப்பெருங் கோவையு ளமைந்து கிடந்த
மெய்ப்பொரு ளிதுவென விளங்கத் திரட்டிக்
கொண்டதோ ரமுதாங் கோவையா ருண்மையை
மண்டலத் தறிஞர் மகிழ்ந்துகைக் கொள்ள
வச்சிற் பதிப்பித் தரும்புகழ் கொண்டா
னிச்சகத் தீழ மெய்தியாழ்ப் பாணமேற்
றீதகல் வண்ணைச் சின்னத் தம்பி
மாதவத் துதித்த வரம்பெறு கான்முளை
நல்லூ ரென்னு நகரியி லுறையுஞ்
சொல்லூர் வித்துவ சூளா மணியாம்
பொன்னம் பலவப் புலவன் மாட்டுப்
பன்னும் பலநூல் பயின்றுள வறிஞன்
நச்சுறு சிவமத நாட்டி யெங்கணுங்
குச்சித பரமதக் கோளரி வாளரி
சிவனடி யாரைச் சிவனென மதிப்போ
னுவமையில் தம்பைய வுத்தம னென்று
நிலங்கொள வழங்கு நீதி
நலங்கொளுஞ் சுவாமி நாத விற்பனனே.''

யாழ்ப்பாணத்தைவிட்டு இந்தியாவுக்கு வந்தபின்னும் கல்விகற்பித்துப்பொருளீட்டி மேற்கூறிய தருமங்களை விருத்திசெய்தற்காகத் திருச்செந்தூரிற் சுப்பிரமணியவித்தியாசாலையெனப் பெயரிய கழகமொன்று தாபித்தும், சென்னபட்டணத்தில் சைவவித்தியாநுபாலனயந்திரசாலையெனப் பெயரிய அச்சுக்கூடமொன்று தாபித்தும் நடத்திவருகின்றார். அன்றியும் ஆங்காங்கே சைவப்பிரசாரணஞ்செய்தும், மாணுக்கர்க்கு வித்தை கற்பித்தும், பிறர்மேற்கொள்ளுந் தருமங்கட்கும் பொருள்கொடுத்து ஊக்கியும் வருகின்றார்.

கடவுளில்லை, புண்ணியபாவமில்லை, சுவர்க்கநரகமில்லை யென்னுங் கொள்கைகளும், வேறு பல கொள்கைகளுமே பரந்துவரும் இக்காலத்துப் பண்டிதர் தமது சத்திக்கிசைய இத்துணைப் புண்ணியஞ்செய்தல் எத்துணைவிசேடமென்பது சொல்லவும் வேண்டுமோ?

பலரும் பலபடக்கருதி வெளிப்படுத்தாது வைத்திருந்த திராவிடமாபாடியமெனப் பெயரியசிவஞானபோதமாபாடியத்தைப் பண்டிதர்மிகுபிரயாசைப்பட்டுத்தேடிப்பரிசோதித்துப் பெரும்பொருள்செலவழித்து அச்சிட்டுமிகக்குறைந்தவிலைக்கு உபகரித்தமைக்குத் தமிழுலகஞ்செய்யுங் கைம்மாறு யாது? இப்பொழுது தேவாரத் திருமுறையை முப்பது பழைய பிரதிரூபங்கள்தேடிப் பரிசோதித்து, முன்னுள்ள அச்சுப்புத்தகங்களிலே காணப்பட்ட ஏறக்குறைய ஆயிரத்தைஞ்ஞூறு பிழைகளை ஏட்டுப்பிரதிகளிற் காணப்பட்ட திருத்தங்களால் மாற்றி, திருமுறைப்பெருமைமுதலிய அரிய பெரியவிஷயங்களுஞ் சேர்த்து, அச்சிடுவித்து வெளிப்படுத்தியிருக்கின்றார். "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற் கோடாமை"யைத் தமக்கணிகலமாகக் கொண்டு பார்த்த பெரியாருள் அத்திருமுறைப் பதிப்பைப் பாராட்டாதார் இல்லையே! இராமநாதபுர ஸேதுசமஸ்தான மகா வித்துவான் பிரமஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்களும் "தங்களரியபெரிய தேவாரப்பதிப்பு" என்றும், "தங்கள் அச்சுப்பதிப்புகளெல்லாம் எல்லாநெறியாலும் வனப்புமிக்குள்ளன" என்றும் பாராட்டி எழுதியிருக்கின்றார்கள்.

இன்னும் பௌஷ்கராகமவிருத்தி, வடமொழிச் சிவஞானபோதத்திற்குச் சிவாக்கிரயோகிகள் இயற்றியருளிய மாபாஷியம் முதலிய பேருரைகளையும் வேறு பல தமிழ்நூல்களையும் அச்சிட்டு உலகத்திற்குப் பயன்படும்படி வெளிப்படுத்துதற்குரிய பெருமுயற்சிகள் செய்துகொண்டிருக்கின்றார். இத்துணைப் பரோபகாரஞ் செய்யும் பண்டிதர்மீது சுந்தரரே! நீரும் உம்மைக்கைச்சாத்தளவிற் பிரேரித்துநிற்போரும் நுங்கள்மனச்சான்றிற்கு விரோதமாக அழுக்காறுற்று மனம்புழுங்கி அவர் பொருளாசையினுலே நாவலரவர்கள் புத்தகங்களை அச்சிட்டு விற்று அவர்கள் தருமத்துக்குக் கேடு செய்கிறுரென்று கூறி, அங்ஙனஞ் செய்யும் நும்மியல்பை உலகத்திற்கு நீவிரே வெளிப்படுத்தி என் அவமானமடைகின்றீர்கள்.

பண்டிதரைப்போலப் பந்துக்களைத்துறந்து தனிவந்து தம்முயற்சியாற் பொருள் தேடி இவ்வாறு தருமஞ்செய்வார் இந்நாளில் ஒருவரையுங் காணவில்லையே. அங்ஙனமாகவும் நுங்களியல்பை அவர்மீது ஏற்றி, அவருக்குக் கேடுசெய்பவர்போல அவர் உலகத்திற்குச்செய்யும் அரும்பெரும்நன்மைகளுக்கெல்லாம் கேடு செய்ய முயலுகின்றீர்கள். அப்படிச் செய்தலால் வரும் பழியும் பாவமும் யாரைச்

சாரும் என்பது நுங்கள்மனச்சான்றுக்கு நன்கு விளங்குமே. நாவலரவர்கள்கருதிய தருமங்களைச் செய்பவர்களிடத்து உங்களுக்குச் சந்தோஷமின்மையும் அந்நாவலரவர்கள் கருத்திற்கு மாறுசெய்பவர்களிடத்துச் சந்தோஷமுண்மையுங் கலிகால விசேஷமே.

"உலகம்பிசாசு உலகந்தராசு" ஆதலால் நீவிர் கூறுங் கற்பனையை முன்னர் விசாரணைக்குறைவினால் உலகம் மெய்யெனக்கருதினும் முற்றும் விசாரித்தறிந்த பின்னர்ப் பொய்யென்பதுணர்ந்து நுங்கள் தகைமையை நிறுத்து அளவிட்டறிந்துகொள்ளும். அது நிற்க.

க. நும்பத்திரிகையின் முதற்பக்கத்தில், திருச்செந்தூர்ச் சுப்பிரமணியவித்தியாசாலையை நடத்துதற்கு நாவலரவர்கள் தருமத்தை நடத்துபவராவது பிறராவது வரவேண்டுமென்று "........தருமசிந்தனைப்பத்திரிகையில்" பண்டிதர் எழுதியிருப்பதாக வரைந்திருக்கின்றீர்.

அங்ஙனமெழுதவில்லையே. "வருவார்களாயின் கொடுக்கச்சித்தமாயிருக்கின்றேன்" என்று எழுதியிருக்கின்றார். வருவார்களாயின்கொடுக்கச்சித்தமெனவே வராவிடில் செய்யக்கிடந்ததொன்றுமில்லை யென்பது கருத்தன்றோ? இவ்வுண்மையர்த்தத்தைவிட்டு அநர்த்தங்கொள்ளுதலினால் நுமக்கெய்தும் பயனென்னை? "வருவார்களாயின்கொடுக்கச்சித்தமாயிருக்கிறேன்" என்பதைப் பரியாலோசிக்கில் திருச்செந்தூர்ச்சுப்பிரமணியவித்தியாசாலையைப் பண்டிதர் நடத்துதற்கண் சிலர் அழுக்காறடைந்து அவ்வித்தியாசாலைக்கு இடையூறுசெய்யக் கங்கணங்கட்டி நிற்கின்றார்களென்பதும் அவர்களால் அது நிகழாமைப்பொருட்டு நாவலரவர்கள் தருமபரிபாலகர் முதலாயினோர் நடாத்துதற்கு முன்வருவார்களாயின் கொடுத்துவிடுதல் அவருக்கு உடன்பாடென்பதும் பெறப்படுகின்றன. ஆதலால் நடத்தமுடியாமல் வலிந்திழுத்ததாகப் பொருள்பண்ணுதல் சாலாது.

உ. "அநுமதியின்றி" என்றீர்.

ம-ா-ா-ஸ்ரீ பொன்னம்பலபிள்ளை புத்தகவிஷயத்தைக்குறித்துப் பண்டிதருக்கு அனுப்பிய கடிதத்தில் ஸ்ரீமத் சதாசிவப்பிள்ளையவர்கள் அநுமதிகொடுத்தார்கள் என்பது புலப்படும்படி எழுதியிருக்கின்றார். அவரிடம் கேட்டறியும். அவருக்கு ஞாபகமின்றேல், அக்கடிதம் எவ்விடத்தும் சாட்சிபகரக் காப்போடிருக்கின்றது.

இனி அநுமதிகொடுக்கற்பாலராகிய சதாசிவப்பிள்ளையவர்கள் பண்டிதர் ஐந்துவருடங்காறும் நாவலரவர்கள்புத்தகங்களை அச்சிட்டு விக்கிரயஞ் செய்துவந்தமை கண்டும் தமக்குரிய உரிமையையும் அதிகாரத்தையும் காட்டிக் கோர்ட்டு மூலமாய்த் தடைசெய்யாது விடுத்தமை யாதுகாரணம் பற்றியோ? வயோதிகமிக்குறுதலிற் கோர்ட்டுக்குப்போக வர முடியாமையாலெனின், பண்டிதர் நாவலரவர்கள் புத்தகத்தை அச்சிடவாரம்பித்தபின் பலமுறை ஒவ்வோர் காரணம்பற்றிச் சாட்சிசொல்லக் கோர்ட்டுக்குப்போய் வந்திருக்கின்றார்கள். அவ்வழக்குப்புத்தகங்களும் அதற்குச் சான்றாகும். ஆதலால் வயோதிகம்பற்றி வாளாவிருந்துவிட்டார் என்றல் பொருந்தாது. ஒருநாள் கோர்ட்டுக்குப்போய்த் திரும்பும்போது பண்டிதர்

இருந்த ஜாகைக்குமுன் வண்டியை நிறுத்தி அவருடன் சிலவிஷயம் கலந்து பேசிக்கொண்டு போயினார்கள். அது, அப்போது கூடவிருந்த திருச்செந்தூர்ப் பிள்ளையொருவருக்குத்தெரியும். அவரும் ஓர் சான்றுவார் வேண்டியகாலத்து. சதாசிவப்பிள்ளையவர்கள் தம்மாலியலாமை காரணமாக விடுப்பினும், தமக்குப்பின் தமது தருமத்தைப் பரிபாலித்தற்காகத் தம்மாற் கருதப்பட்டவர்க்குத் தமது தத்துவத்தைக்கொடுத்து அவர் மூலம் வழக்குத் தொடுப்பித்து நிறுத்திவிடலாமே. அதுவுஞ் செய்யாமைக்குக் காரணமென்னையோ? அவர்கள் அப்படிச்செய்யாது விடினும், அவர்களுக்குப்பின் அத்தருமச்சொத்தைத் தனக்காக்கி நடாத்தக் காத்திருந்த ஆசையம்பலத்தெய்வமாவது அவர்களுக்குப் புத்திபுகட்டி நாவலரவர்கள் சிதம்பர வித்தியாசாலை வரும்படிக்குக் கேடுவரச் சுவாமிநாதபண்டிதர் பொருளாசையாலே அவர்கள் புத்தகங்களை அச்சிட்டு விற்றுத் தமது தமையன் வாங்கிய கடன்களைத் தீர்த்துவருகின்றார்; இக்கேட்டிற்குத் தாங்கள் உடன்பட்டிருக்கலாமாவென்று சொல்லி அவர்களிடத்துத் தத்துவம் பெற்றுத் தானே வழக்குத் தொடுத்துத் தடுத்துத் தருமத்திற்கு ஆக்கஞ் செய்துவிடலாமே. அங்ஙனஞ் செய்யாததென்னையோ? எது எப்படிப் போனாலும் போகட்டும், எனக்கு வேண்டிய பாகத்திற்கு என்னகுறையிருக்கின்றது, ௲௧000 ரூபாவுக்குச் சொத்திருக்கின்றதே, இதைக்கொண்டு எத்தனை காரியங்கள் செய்யலாம், வழக்குவிஷயத்திற் பிரவேசித்தால் நான் காத்திருக்குங்காப்புக்கும் பழுதுவந்துவிடுமே என்று பயந்து மௌனமாயிருந்துவிட்டதோ? அல்லது, உண்மையாக நோக்குங்கால், திருச்செந்தூர்ச் சுப்பிரமணியவித்தியாசாலைத்தருமம் நாவலரவர்கள் கருத்துக்கியைந்த விசேடதருமந்தானே அதுவும் விருத்தியடைதல் நன்றென்று கருதி வாளா விருந்துவிட்டதோ? அல்லது, தனக்குத் தான், இச்சொத்துத்தான் புதையருன் காப்புத்தான் அகப்படுகிறதுதான் என்னநிச்சயம். ரிஜிஸ்டர் செய்யப்பட்ட உயிலும் தள்ளப்பட்டதே. சுப்ரமணியவித்தியாசாலைக்கு இப்பொழுது இடையூறு செய்யாதிருந்தால் பின் அதற்கதிபதியாகிய பண்டிதர் எடுத்த புதையற்பொருளிற் பங்காயினும் நயந்துபெறலாமே. இடையூறு செய்தால் அதுவும் போய்விடுமே என்று கருதி அது செய்யாதிருந்துவிட்டதோ? அல்லது, தனக்கு இப்புதையற்பொருள் கிடைத்தற்குமுன்னின்று முயன்று முதலில் உயிலை எழுதுவித்து நிறைவேற்றித் தானும் ஒரு சாட்சியாக அதிற்கைச்சாத்திட்டு றிச்சிஸ்டர்செய்வித்தவர் பண்டிதரன்றோ! அந்நன்றியைமறந்தால், "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை—செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னுந் தோலா நாவின் மேலோர்திருவாக்கின்படி உய்தியில்லதோர் நரகெய்துமென்றஞ்சி அடங்கியிருந்துவிட்டதோ? எப்படியாவது நாவலரவர்கள் புதையற்பொருளிற் கைவைத்துக்கொண்டு காத்திருந்த பழந்தெய்வமாவது புதிதாய்க் கைவைத்துக் காக்குந் தெய்வமாவது அக்காலத்திலேதானே சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைக்குக் கேடுவராமல் தடுக்காதுவிட்டது குற்றம் குற்றம் முக்காலுங் குற்றமே. தடுப்பினுந் தடையுறுமெனக் கருதி விடுத்தனபோலும். அப்படியானாற் புதுத்தெய்வம் இப்பொழுதுதடுக்கமுயன்று அங்குமிங்கு முலைந்து திரிந்ததென்னையோ?

௯. "சிலகாலமாகத் தாம் அச்சிட்டு விற்று அவர்களுடைய வித்தியாசாலை வரும்படிக்குக் கெடுதிசெய்துகொண்டு வருகின்றார்" என்றீர்.

பராபவஞூ முதல் சாதாரணவருஷம்வரை ஐந்துவருஷகாலம் பண்டிதர் நாவலரவர்கள் பாலபாடம் முதலியனவற்றைப் பதிப்பித்து வந்தாராகவும், சிலகாலம் என்றது என்பயன்கருதியோ? யாழ்ப்பாணத்திலே ம-m-m-ஸ்ரீ வை. ஆறுமுகப்பிள்ளையவர்களும், விவேகானந்தப் பிரஸ்காரரும், சைவசமயபரிபாலனசபையார் முதலியோரும் நாவலரவர்களுடையபுத்தகங்களை அச்சிட்டார்களே, அச்சிடுகின்றார்களே. இவர்களெல்லாரும் இப்படிச் செய்தமை செய்கின்றமை சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலை வரும்படிக்குக் கெடுதிசெய்யவில்லைபோலும்? இவர்கள் கேடுசெய்கிறார்களென்று இதுவரை எவரேனும் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தியதுண்டா? இல்லையே! பண்டிதர் அச்சிட்டு நாவலரவர்கள் கருதிய தருமத்திற்கு உபயோகப்படுத்துவதை மாத்திரம் குற்றமாகக்கருதிப் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தியபுதுமை கலிகாலப்புதுமையாக வியக்கற்பாலதே.

ச. "தம்மை ஆட்சேபித்தவர்களுக்கு இவர் நியாயமானமறுமொழி சொல்ல இயலாமல்" என்றீர்.

தாமே ஆட்சேபித்தவரொருவருமிலர். பிள்ளையாலே அனுப்பப்பட்டவர்கள் பண்டிதரிடம் வந்துகேட்டபோது அவர்களுக்குத்தகுந்தபதில்கள் அளிக்கப்பட்டன.

ரு. "பொருளாசையினாலே கைவிடமனமில்லாமல்" என்றீர்.

சுந்தரரே! சதாசிவப்பிள்ளையவர்களுக்குப்பின் சிதம்பரவித்தியாசாலையை நடத்துபவர் என்று நும்மாலே சுட்டப்பட்ட பொன்னம்பலபிள்ளையவர்களோ பண்டிதரோ பொருளாசையுடையார் என்பதை அப்பிள்ளையவர்கள் பண்டிதர்க்கனுப்பிய கடிதங்களாலுஞ்சிறிது ஆராய்ச்சிசெய்து உண்மையை அவர்க்கும் நுமக்கும் பிறர்தமக்குங் காட்டுதும். அவர் கடிதவாக்கியங்களில் ஈண்டைக்குவேண்டும் பாகங்களைமாத்திரம் எடுத்துக் காட்டுகின்றாம். அவற்றைப் பாரும் பாரும்! அவ்வரையுங் கேளும் கேளும்! நுமது ஐயந் தீரும் தீரும்.

முதலாங்கடிதம்:—"பள்ளிவாசலுக்கானபடியால் என் பண அவா காதறுமெய்யதீனிலும் சந்தேகத்தைக்கொடுக்கிறது. இதைக்காதறு மெய்யதீனுக்குச் சொல்லவேண்டாம். கைலாசபிள்ளையிடம் நான் வாங்கியிருக்கிற ரூபா சுக0 இத்தொகையைக் காதறுமெய்யதீனுக்குத் தெரிவித்துக் கணக்கைப் பார்க்கச்சொல்லவும். இந்த உறுதியைப்பற்றி எனக்கும் கைலாசபிள்ளைக்கும் உள்ள கொடுக்கல் வாங்கல் தொகையைப் புறத்தியாருக்குச் சொல்லவேண்டாமென்று கைலாசபிள்ளையிடம் சொல்லுக. காதறுமெய்யதீனுக்குஞ் சொல்லுக."

இரண்டாங்கடிதம்:—"பின்னாலே நானெழுதுகிறவைகளைத் தனியேயோசித்துத் தோன்றியகருத்துக்களையும் நானெப்படிச் செய்கிறது நல்லதென்பதையும் எழுதவும். செட்டிப்பிள்ளைகளுடைய வித்தியாசாலையிலே ஐயா அவர்கள் (நாவலரவர்கள்)சொந்தக்காரன் என்ற பேரோடும் நொத்தாரிசு (நாவலரவர்கள் மருகரும் மாணாக்கரும் வித்துவசிரோமணியுமாகிய ந. ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள்) மருமகன் என்ற பேரோடும் நானிருக்கிறது நல்லமரியாதையாயிராதென்று எண்ணுகிறேன். ஆனால் யாழ்ப்பாணத்தில் வந்து சும்மாவிருக்கவும் எனக்குப் பிரிய

யில்லை. யாழ்ப்பாணத்து வித்தியாசாலையிலிருக்க வென்றால்*அதில் எனக்கிருக்கிற பிரியந்தான் தெரியுமே. அதுவுமல்லாமல் மாரிமுத்து அண்ணன் இருக்கிறபடியால் அவரையும் அதிலில்லாமல் எடுக்கிறது நல்லாயில்லை. இவ்விடத்தில் வித்தியாசாலையில் நெடுக உபாத்தியாயராயிருக்கிறது நல்லதல்ல என்ற எண்ணத்திலேதான் ஆனிமீ நான்வருகிறேனென்று எழுதியது. இதுதப்பினால் சிதம்பர வித்தியாசாலையில் இருக்கலாமென்ற எண்ணமும் இருக்கிறது இப்படியே என் மனம் ஒன்றிலும் துணிவுபெறாமல் தள்ளாடுகின்றது. என்ன இருந்தாலும் யாழ்ப்பாணம்வந்து முயற்சியில்லாமல் சும்மாவிருக்கப் பிரியமில்லை"

மூன்றாங்கடிதம்:—"ஞானப்பிரகாசக் கீழ்கரைக்குச் சாப்பாட்டுக்குப்போகிறதும் சுவாமிதரிசனமுஞ் செய்யவுந்தான் நேரஞ் சரியாக இருக்கிறது. மிக வசதிக்குறைவாயிருக்கிறது. எல்லாம் அளந்தபடிதான் ஆகும். சமயலாள் இந்தவூரில் பிடித்து வைக்கிறதென்றால் என்னாற்சாத்தியப்படுகிற காரியமல்ல வென்று தோன்றுகிறது. ஏதோ உழன்று கழிக்கிறேன்."

நாலாங்கடிதம்:—"இப்பொழுது தாழங்காயெண்ணெய் நெடுகத்தேய்த்துமுழுகும்படியானதாக ஒன்று வைப்பிக்கும்படி அண்ணனிடஞ் சொல்லி அதற்காகச் செல்லுகிற செலவையும் வேறும் ஆச்சிக்குவேண்டிய மருந்துச்செலவையும் அண்ணனிடங்கேட்டு அவர்கேட்கிற தொகையை அவரிடங்கொடுத்து ஆச்சியை மிகக் கவனிக்கும்படி செய்யவும்."

ஐந்தாங்கடிதம்:—"கைலாசபிள்ளையுடைய பணத்தில் ௫0 ரூபா அருணாசல ஐயருக்குக் கொடுக்கும்படி அண்ணனுக்கு எழுதினேன். ஐயரவர்களைக்கண்டால் அந்தரூபா௫0 தையும் வாங்கிக்கொண்டு அடைவைக் கொடுக்கும்படிக்கும் மிகுதிக் காசு வட்டியோடு தருகிறேனென்றும் சொல்லுக."

ஆறாங்கடிதம்:—"வித்தியாசாலையில் பணமுடை மிக அதிகம் ஒருகாலத்தும் இப்படியிருந்ததில்லை. முடியுமானால் வித்தியாசாலைக்கணக்கில் இயன்றதொகை உடனே அனுப்பவும். இப்போ அனுப்பினால் நல்ல தருணம்."

ஏழாங்கடிதம்:—"ஐப்பசி மாதத்தில் கடன்தீர்க்கும் விஷயமாக ஊர்போய் வர எண்ணியிருக்கின்றேன். கூடவந்தால் கடு நாள் போய் நின்றுவரலாமே அப்படிக்கருத்துண்டா!"

எட்டாங்கடிதம்:—"செட்டியாரவீட்டுச்சங்கதிகள் எப்படியிருக்கிறது? அண்ணனிடம் புகையிலைக்கன்றைக் கவனமாய்ப் பார்க்கும்படிசொல்லவும். நான் முன் எழுதினவைகளைத் தனியேயோசித்து எழுதுக. கைலாசபிள்ளைக்குப் பணவிஷயத்தைப்பற்றி மெத்தக்கண்டிப்பா யெழுதிப்போட்டேன். அவருக்குத்திருத்தியினந்தானோ? ஒன்றுஞ் சொல்லவில்லையா? அவருக்கும் பசுபதிச்செட்டியாருக்கும் இப்போ எப்படி?"

---

* யாழ்ப்பாணவித்தியாசாலையில் பொன்னம்பலபிள்ளையவர்களுக்குப் பிரியமில்லாமைக்குக்காரணம் என்னையென்பது இங்கே சிந்திக்கற்பாலது. சுந்தரரே! இவ்வியல்புடையார்தாமே "குருவாக்கிய பரிபாலனம்பண்ணி நாவலரவர்கள்செயலை அநுகரிக்கச் சிஷ்யராய் அவதரித்த" மூர்த்தி!

ஒன்பதாங்கடிதம்:—"சரவணப்பெருமாளுக்கு அமரப்புத்தகம் வாங்கிக் கொடுக்கவும். கந்தப்பசேகரரிடம் * சரவணப்பெருமாளையும் தம்பியையும் கவனிக்கச் சொல்லுக. † நான்வந்ததைக்குறித்து அம்மானவர்கள் என்னசொன்னார்கள். நான் வித்தியாசாலை உபாத்தியாயராகவே யிருக்கின்றேன். இங்கே ‡ அம்பலவாணன் முதலானவர்கள் இருந்த முறுக்குக்கு நான் உபாத்தியாயராக இருக்கிறது கொஞ்சங் குறைவுதான். என்னசெய்கிறது. எனக்கு மாசம் வரும்படி இருபது ரூபாவுக்குக் குறையாது. நான் எழுதின சீதனவுறுதி நிறைவேறினதா? இறையத்துல்லா காசுகேட்டதா? சைவசமயபரிபாலன சபைக்கு இப்போ ௨ மாசக்காசு கொடுக்கவும். நிகண்டு நல்லாய்விற்றால் எனக்காகச்சிவகுருவுக்கு அல்லது சின்னையாவுக்கு ௬0 ரூபா கொடுக்கவும். மற்றவிஷயங்கள் வேறொருவருக்குந் தெரியப்படாது.

---

* சரவணப்பெருமாளும் தம்பியும் பொன்னம்பலபிள்ளையவர்கள் மூத்ததமையனார் புத்திரர்கள். † பொன்னம்பலபிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்து வித்தியாசாலையிற் படிப்பித்துக்கொண்டிருந்தவர்கள்; காரைக்குடி வித்தியாசாலைக்குப் போகும்போது தமது மாமனாரும் ஆசிரியருமாகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத் ந. ச. பொன்னம்பலப்பிள்ளையவர்களுக்குச் சொல்லாமற்போய்விட்டார்கள். அதனாலே தான் 'நான்வந்ததைக்குறித்து அம்மானவர்கள் என்னசொன்னார்கள்' என்றுகேட்டார்கள். சுந்தரரே! "குருவாக்கியபரிபாலனம்பண்ணி நாவலரவர்கள் செயலை அநுகரிக்கச் சிஷ்யராய் வந்தவதரித்த" மூர்த்தி, யாழ்ப்பாணத்து வித்தியாசாலையை விடுத்துக் காரைக்குடி வித்தியாசாலைக்குப்போன தென்பயன் கருதியோ? போகுங்காலத்து அவ்வித்தியாசாலையை நடாத்திவந்த நமது ஆசிரியரும் மாதுலருமாகிய வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளையவர்களுக்குச்சொல்லாமற் போனதென்னையோ? சற்றேசிந்தித்துப்பாரும். பார்த்தால் பொருளவாவுடையார் பொன்னம்பலபிள்ளையவர்களோ பண்டிதரோ என்பது புலப்படும். புலப்பட்டாலும் சார்புபற்றி மறைப்பீர்போலும். நீர்மறைப்பினும் பிள்ளையவர்கள் தாமே தம்மைப் பொருளவாவுடையாரென்றெழுதியிருத்தற்கென்செய்வீர்? பெரும்பாலும் கடிதபாகங்களெல்லாம் பொருளாசையுடையார் இவர் என்பதைப் புலப்படுத்தற்கே எழுந்தனவாயினும் ஈண்டு விளங்குதற்பொருட்டு இதனை விரித்துக்காட்டினும்.

"கீழோராயினுந் தாழவுரை" என்று பெரியார் ஆணைதந்து போயினராகவும், பொன்னம்பலபிள்ளையவர்கள் கற்ற மேலோராகிய ஸ்ரீமத் அம்பலவாணநாவலரவர்களை அம்பலவாணர் என்னாது அம்பலவாணன் என்றது அவர்கட்கிருந்த மேம்பாடு தமக்கிருக்கவில்லை என்ற அழுக்காறுபற்றியன்றிப் பிறிதின்றென்பது வெள்ளிடை. தாமும் பிரசாரகராகப்போயிருந்து முறுக்காது "சணப்பன்வீட்டுக்கோழி தானே விலங்குமாட்டிக்கொண்டாற் போல" தாமே உபாத்தியாயராகப்போயிருந்துகொண்டு பிறர் வாழ்வைப் பொறாமைப்பட்டு அக்கினியினாலே பதர் எரிவதுபோல மனமெரிதற்கு அவரென்செய்வார்? "எழுதியவாறே காணிரங்குமட நெஞ்சே—கருதியவா றாமோ கருமங் கருதிப்போய்க்—கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல்—முற்பவத்திற் செய்த வினை." "தாந்தாமுன் செய்த வினை தாமே யநுபவிப்பார்—பூந்தா மரையோன் பொறிவழியே" "செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கா—லெய்த வருமோ விருநிதியம்" தாம் கஷ்டப்பட்டகாலத்து "எல்லாம் அளந்தபடிதான் ஆகும்" என்று பண்டிதருக்கு வரைந்து சாந்தியடைந்தவிவர் அம்பலவாணநாவலர் முதலியோர் இருந்த முறுக்கிற்கும் அவ்வளப்பே காரணம் என்று சாந்திபெறாத தென்னையோ? "தமக்கொருநியாயம் பிறர்க்கொருநியாயமா"? இவர் தாமும் முறுக்குகிறதுதானே. யார் தடைசெய்தவர்? அது செய்ய வியலாதவர் பிறராக்கங்கண்டு பொறாமையுறலாமா? அது பின்னும் பின்னுங் கேட்டைத் தருமன்றோ! இவருக்குப் பிறராக்கங்கண்டுழியும் கோபம் வந்துழியும் பலரையும் இழித்துரையாடல் இயற்கைபோலும். அதனாற்றான் ஸ்ரீமத் கைலாசபிள்ளையவர்களையும் கோபம்வந்த ஓர்காலத்து அவனோடு இனிப்பேச்சில்லை என்று பண்டிதருக்கு அனுப்பிய கடிதமொன்றில் எழுதியிருக்கின்றார். அதனைக் கைலாசபிள்ளையவர்களுங் குறித்துவைத்துக்கொண்டார்கள். இப்பொழுது எப்படிப் பேசுகின்றாரோ? இவ்வியல்புடையோர், தம்மாற் கோபிக்கப்பட்டும் ஆக்கமுற்றும் இருக்கும் பண்டிதர்மீது என்னகுறைதான் சொல்லவும் எழுதவும் வல்லுநராகார்.

பத்தாங்கடிதம்:—"அம்மானவர்கள் கடிதம் எழுதியிருந்தார்கள். அதில் நான் சொல்லிக்கொண்டுவொாதது தன்மனசை ஈருகின்றது என்றும் எழுதியிருந் தார்கள்."

பதினொராங்கடிதம்:—"ஆறுமுகத்தின் பணத்துக்காகச் சின்னையாவிடம் கட்டாயம் வேண்டிய நிகண்டுப்புத்தகம் கொடுத்துவிடுக. மிகுதிக்கு உமக்குப்ப ணங் கொடுக்கிறேன்."

பன்னிரண்டாங்கடிதம்:—"௩ ரூபாவும் மேற்படி சபைக்குக் கொடுக்கவும்."

பதின்மூன்றாங்கடிதம்:—இனயத்துல்லாவுடைய கணக்கு எப்படித்தீர்த்தது. இனயத்துல்லாவுக்கு இலேசிலே காசுகொடுக்க உடன்படவேண்டாம். வித்தியா சாலையார் என்காசை ஒத்துக்கொள்ளாவிட்டால் எனக்கெழுதுக."

பதினாலாங்கடிதம்:—"வெந்நீசுக் (ஏலம்) காரியம் எப்படியிருக்கிறது? தவ ணை எப்போ?"

பதினைந்தாங்கடிதம்:—"கிட்டங்கிவெந்நீசை (ஏலத்தை) க்கைலாசபிள்ளை மாரிமுத்து அண்ணன் காதறுமெய்யதீன் இவர்களிடம் சொல்லிப் பணம்மிஞ்சும் படி கூடியமுயற்சிசெய்யவும்."

பதினாறாங்கடிதம்:—"தைமீ ௩ௗ வெற்றிவேலுவுக்குக் கடிதம் எழுதி யிருந்தேன். வெற்றிவேலு என்னசொன்னது. அதில் என்*வயிற்றெரிச்சலாய் மாமனாரவர்கள்மீது ஆத்திரமாக எழுதிப்போட்டேன்." (மாமனார் பொன்னம்பல பிள்ளையவர்கள் ஆசிரியராகிய வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை யவர்கள்.)

பதினேழாங்கடிதம்:—"கோப்பாயில் என்தாயாருக்கும் மருமகள் பொன்னுவுக் கும் ஏதோ சுகமில்லை என்றதாகக் காதறுமெய்யதீனும் எழுதியிருந்தது. அதைப் பற்றி உடனே தயவுசெய்து விசாரித்து எழுதுக. என் தமையனார் பலசோலிக்கா ரர். அவருக்கு இனிப் புகையிலைத்தோட்டவேலை மிகுதி. கொஞ்சமும் நேரங் கிடையாது. ஆதலால் அங்கேயும் விசேஷங்களிருந்தால் விசாரித்தெழுதவும்."

பதினெட்டாங்கடிதம்:—"வித்தியாசாலை இப்போ நல்லாய் நடக்கிறதா? தமையனாரிடம் இனயத்துல்லாவுடைய கணக்கைக்கொடுத்து அதின்படிகாசுவாங் கச் சொல்லுக. மானேசர் சிவகுருவிடம் அதை ஒத்துக்கொள்ளும்படி சொல்லுக. சிவகுரு ஒத்துக்கொள்ளமாட்டேன் என்றால் தயவுசெய்து அனுப்பைப்பாராமல் எனக்கு எழுதவேண்டும்."

பத்தொன்பதாங்கடிதம்:—"அருணசல ஐயரைக்கண்டால் கைலாசபிள்ளை பணம் வந்தவுடன் பணம் தரலாம் என்று சொல்லுக."

இருபதாங்கடிதம்:—"அம்மானவர்கள் சென்னபட்டணம் புறப்படுகிற கருத்தில்லையா? எனது மைத்துனர் சுந்தரத்துக்குப் பயித்தியம் எப்படி? கைலாசபிள்ளை ௫0 ரூபாவும் எனக்குத் தருகிற எண்ணமா அல்லது எடுத்துக் கொள்ளுகிற எண்ணமா?என்தமையனார் இனயத்துல்லாவிடம் பணம்வாங்கினாரா?

---

* வயிற்றெரிச்சல்வந்தால், மாமனார்மீதும் ஆத்திரமாக எழுதுபவர் பணவா சையால் வயிறெரியும் போது பண்டிதரை விடுவாரா?

செல்லப்பாவுக்கும் தம்புவுக்குங் கொடுக்கவேண்டிய பணம் கொடுத்தாரா? சிவகுருவைப் பற்றுச்சீட்டுக்கொடுத்து மேற்படி பணத்தை இறையத்துல்லாவிடம் ஒத்துக்கொள்ளும்படி எழுதியிருந்தேன். சிவகுரு ஒத்துக்கொண்டு பற்றுச்சீட்டுக்கொடுத்ததா? இல்லையா? புகையிலைச்செய்கை எப்படி? விலை எப்படி?

இருபத்தொராங்கடிதம்:—*"இராமன்செட்டி என்னிடம் வந்து மகேந்திரகாண்டத்திற் சந்தேகம் கேட்டான். கேட்டபொழுதெல்லாம்நான்சொல்லும் ஒவ்வொன்றும் தனக்குத்தெரிந்ததாகவே காட்டிக்கொண்டு வந்தான். நான் இதைப் பலமுறையில் அவருக்குக்காட்டிக் கடைசியாய்ப் "படிக்கப் பழகிக்கொள்ளும்" என்றுஞ் சொன்னேன். பின்னும் அதைக் கவனியாமல் நான் சொன்ன பாட்டுக்களின் அர்த்தத்தைத் தானுந் தெரிந்தவன்போலக் கடைசியாய்க் காட்டி நான்சொல்லி முடிந்த இறுதியில் இதுதானே என்றும் இரண்டொருமுறை சொன்னான். இறுதியாய் நல்லமருந்துகொடுத்துவிட்டேன். அவனுக்கு நான் அடிமாத்திரம் கொடுக்கவில்லை. என்னோடு பேசவேண்டாம் என்றுங் கடைசியாய்ச் சொல்லிவிட்டேன். நீ முட்டாள் மடையன் என்பது முதலிய பலவார்த்தைகளால் வைதுபோட்டேன். அவன் மாதிரிக்கு நான்செய்த இதுவும் போதாது. சிதம்பரத்தில் ஒன்றுமறியாத இரண்டொருவருக்கு என்னவோ சொல்லிக்கொடுத்ததில் ஏதோ நினைத்துக்கொண்டான். இப்போதுதான் புத்திகொஞ்சம் வந்திருக்கிறது. செட்டிகாரியத்தைப்பற்றி வருத்தமிருக்குமென்றெண்ணுகிறேன். எனக்குவருத்தங் கொஞ்சமுமில்லை."

இக்கடித சாரங்களினாலும் பொன்னம்பலபிள்ளையே பொருளவாவுடையர் என்பதும், பண்டிதர் யாழ்ப்பாணத்திருந்து ஆசிரியரிடம் படித்த சிறுபிராயந்தொடங்கி இதுகாறும் தாம் பிறருக்கு உபகாரியாய் விளங்கினரென்பதும், பொருளவாவுடையராய்ப் பிறர்பொருளை அபகரித்துத் தாமும் தம்சுற்றமும் அநுபவிக்க எட்டுணையும் விரும்பினவரல்லரென்பதும், பிறவுஞ் செவ்விதினுணர்க. இவ்வியல்புடைய பண்டிதரை மனங்கூசாது பொருளாசையுடையரென்று அநியாயமாகக் கூறி உமது கருத்து இன்னதென்பதை உலகத்திற்கு வெளிப்படுத்தி விட்டீரே. இனியாயினும் நீர் சத்தியபுத்தியுடன் தருமஞ்செய்வார்மீது வாளா குற்றமேற்றிப் பழிபாவங்களையீட்டிச் சிவகோபத்திற்காளாய்த் துன்புறாது விலகி உய்யும்.

௬. "ஆட்சேபிப்பவர்களுக்கு ஒருவாறு சமாதானமாகுமென்றெண்ணி ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் தருமசிந்தனை யென்று இதனை இப்பொழுது எழுதி வெளிப்படுத்தியிருக்கின்றார்" என்றீர்.

பண்டிதரிடம் இதுவரை தாமே ஆட்சேபித்தவர் ஒருவருமில்லை. அவர்கள் பொருட்டு ஒருவாறு சமாதானமாகுமென்று எழுதவுமில்லை. பண்டிதருடைய சுதந்திரத்தலைமையையும், அவர் கல்வி முயற்சியால் பொருளீட்டிச்செய்யும் சைவசம

* செட்டியார் என்ன தீங்கு செய்தார். பிள்ளையவர்கள் இவ்வளவு கோபங்கொண்டு முட்டாள் மடையன் என்பனமுதலிய வார்த்தைகளால் வைதமை நீதிதானோ? அறிவுள்ளவர் நீதியுள்ளவர் இங்ஙனஞ் செய்வாரா? இத்தகையார் பண்டிதர் மீது குற்றஞ்சுமத்தித் தாம்பொய்ப்புகழ்பெற மறைந்துநிற்பினும் முற்றுப்பெறாது.

யாபிவிருத்தி தமிழ்க்கல்வி விருத்தி முதலிய விசேடபுண்ணியங்களையும், அவை காரணமாக உலகத்தார் பண்டிதர்மீது வைத்திருக்கும் அன்பையும் அபிமானத்தையும், இன்னோன்ன பிறவற்றையும் நோக்கி அவரிடத்துப் பொறாமையுற்று நும்மை முன்விட்டுத் தாம் பின்னால் மறைந்து நிற்பவர்யாவரோ அவரே, நாவலரவர்கள் உண்மைக்கருத்துணர்ந்து பண்டிதர்மீது கொண்ட பொறாமை யொழிந்து செந்நெறிபுக்கு மன்னறம் ஓம்புக என்னும் கருத்தானே எழுதப்பட்டதென்னுந் துணிபேமன்னுக.

எ. "இவர்செய்கை அறிஞர்கள் நன்குமதிக்கத்தக்கதன்று என்பதனை இவருக்கும் உலகத்தாருக்குந் தெரிவிக்கவேண்டி" என்றீர்.

பண்டிதர்செய்கை நாவலரவர்கள் கருத்திற்கும் அறிஞர்கருத்திற்கும் ஒப்ப முடிந்த நற்செய்கையென்பது பிரத்தியக்கப்பிரமாணத்தால் அறிந்துகொண்டு உலகத்தார் பண்டிதரிடம் அன்புபாராட்டி வருகின்றார்களே. உமது வெற்றுரவாரப் பொய்யுரையினால் அவர் மயங்குவாரல்லர். அது நிற்க.

நும்மாற் சுட்டப்பட்ட வறிஞர் யாவர்? பொன்னம்பலபிள்ளையும் நீரும் அவரைச்சார்ந்த ஒரு சிலருமேயோ? நன்று நன்று! பண்டிதரை நன்குமதியா வறிஞர் பிறரைக்கண்டிலேம் கண்டிலேம். காண்பேமாயின் அவர்மாட்டிங்ஙனம் வினவுதும். ஐயன்மீர்! பண்டிதர்செய்கையை நீவிர்மதியாதது யாதுகாரணம் பற்றியோ? பண்டிதர் சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைப் பணத்தில் ௩000, ௬000 ரூபா வரை எடுத்துக்கொண்டு யாழ்ப்பாணஞ்சென்று தமது தமையனார் ஈடுவைத்த விளைநிலந் தோட்டம் வீடுமுதலியவைகளை மீட்டுக்கொண்டாரா என்பேம். ஆயிரம்ரூபாவரை யெடுத்துக்கொண்டு சென்று அருங்கடிமணம்புரிந்துகொண்டாரா என்பேம். ஆயிரம்ரூபாவிலையுள்ள வயிரமோதிரத்தை அங்கே கொண்டுபோய்விட்டாரா என்பேம். வெள்ளிப்பாத்திரங்களை வெளிப்படுத்தாது விட்டாரா என்பேம். பித்தளைப்பாத்திரங்களைப் பிரித்துவிட்டாரா என்பேம். தாமிரப்பாத்திரத்தைத் தாங்கொடுசென்றாரா என்பேம். வெண்கலப்பாத்திரத்தை விற்றுவிட்டாரா என்பேம். இரத்திநாபரணங்களை எடுத்தாரா என்பேம். கண்ணுப்படையாச்சி நம்பிக்கைக்கு எழுதிவைத்த வீட்டுநிலத்தைக் கொடுத்தபொருளைவாங்கிக்கொண்டு கொடுக்கமாட்டேன் என்றாரா என்பேம். அம்பட்டனெல்லைக்கு அநியாயஞ்செய்தாரா என்பேம். பொறாமைக்காரர் மேலும் பொறாமைகொண்டாரா என்பேம். நாவலரவர்களை மேவலர் விட்டாரா பண்டிதரை விண்டவர் விடுவாரா என்பேம். "அல்லவை புரியாரேனும் அறிவினிற் சிறந்தாரேனும்— எல்லவர் தமக்கு நண்பாய் இனியவே நடத்தற் பாற்றே—பல்லுயிர்த் தொகைக்குமின்பம் பயந்திடு மதிகண்டு****—புல்லிய கமலமெல்லாம் பொலிவழிந் தொடுங்க"வில்லையா? என்பேம். மதுரைமடத்து நிலத்தைப் பண்டிதர் தமது வித்தியாசாலை நிலத்தோடு சேர்த்துச் சுவர்வைப்பித்தாரா என்பேம். மடத்தார் அதனையறிந்து அச்சுவரை இடிக்கும்படி செய்யத் தாம் தலைகுனிந்து வெள்கினரா என்பேம். பின்னுங் கிழக்குச்சுவரெல்லையில் மடத்தார்க்கு வழக்குக்கிடங்கொடுத்து நிற்கின்றனரா என்பேம். "செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்—சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்—வெல்வதே நினைவதல்

லால் வெம்பகை வலிதென் ஞேரார்—வல்வினை விளைவு மோரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்'' என்பதற்கிலக்காயினுரா என்பேம். இன்னேரன்னபல இன்னுமு ளவாயினும் விரிவஞ்சி இவ்வளவில் நிறுத்தி அப்பாற்செல்லுதும்.

அ. ''நாவலரவர்கள் உலோகோபகாரமாகவும் தமது வித்தியாசாலை நயத்துக் காகவும் பாலபாடங்களையும் வேறுசில நூல்களையும் அச்சிட்டு விற்று அவ்வரும்படி கொண்டு தமது வித்தியாசாலைத்தருமத்தை நடாத்திவந்தார்கள்'' என்றீர்.

நாவலரவர்கள், ஆவேதனங்களில், பிடியரிசி முதலிய வருவாய்கொண்டு வித்தியாசாலைகளை நடத்திவந்ததாக எழுதியிருக்கின்ருர்கள். தாங்கள் புத்தகவரு வாயால் நடத்திஞர்கள் என்கிறீர்கள். எது சரி? எது பிழை? தயைகூர்ந்து சொல் லுங்கள்.

புத்தகங்களை அச்சிட்டு அவற்றின் வருவாய்கொண்டு வித்தியாசாலைகளைத் தாபித்தார்களா வித்தியாசாலைகளைத்தாபித்து அவற்றின் வருவாய்கொண்டு புத்த கங்களை அச்சிட்டார்களா என்பது ஆவேதனங்களை நோக்குவோர்க்கு நன்குவிளங் கும். எங்ஙனமாயினுமாகுக, புத்தகவருவாயால் வித்தியாசாலைகளை நடத்தியதாக மறந்தும் ஆவேதனங்களில் எழுதவில்லை. உலகத்தார்கொடுத்த பொருள்கொண்டு நடத்தப்பட்ட வித்தியாசாலைகளைப் புத்தகவருவாய்கொண்டு நடத்தப்பட்டதென்று ''பட்டப்பகலை யிரவென்றுகூறிடும் பாதகர்'' போல யார்தான் சொல்லுவார்கள் எழுதுவார்கள்! அங்ஙனஞ் சொல்லவும் எழுதவும் தலைப்பட்டவர் வேறென்ன தான் சொல்லவும் எழுதவும் தலைப்படமாட்டார்.

இங்கிலிஷ் ராச்சியத்துட்பட்ட எச்சமயத்தாரும் எவ்வருணத்தாரும் யாரி டம் உத்தியோகம் பெற்றுச் சீவிக்கின்ருர்கள்? இங்கிலிஷ் அரசினரிடத்தன்ருே? அதனுல் அவர்களுக்கு என்னகுறை வந்துவிட்டது? அங்ஙனஞ்செய்தலை யார்தாம் குறைகூறுவர்? அங்ஙனமாகவும், சிவதீக்ஷைபெற்றுச் சிவனுக்கடிமைபூண்டு விபூதி உருத்திராக்கந்தரித்துச் சிவகைங்கரியஞ்செய்யுஞ் சிவஞானச்செல்வராகிய நகரத் தாருடைய வித்தியாசாலையிலிருந்து படிப்பித்துச் சீவனஞ்செய்தல் அவமானமாயி ருக்கின்றதெனக் கடிதமூலமாகப் பண்டிதர்க்குத்தெரிவித்த மகாஞற்பிரேரிக்கப் பட்ட மகாஞதலால் உலகத்தார் பொருள்கொண்டு வித்தியாசாலைகள் நடத்தப்பட் டன என்று கூறல் அவமானமாகுமெனக்கருதிப் புத்தகவருவாய்கொண்டு நடத் தப்பட்டது என்று கூறினீர் போலும். அப்படியாஞற் சரிதான்.

நாவலரவர்கள் தாம் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலிஷ் வித்தியாசா லையில் இங்கிலிஷ் கற்றதாகவும், பார்சிவல் துரைக்குத் தமிழ்ப்பண்டிதராய் இரு ந்ததாகவும், வித்தியாசாலைகட்கு நகரத்தாரிடத்தும் பொருள் வாங்கினதாகவும் ஆவேதனங்களில் எழுதியிருக்கின்ருர்களே. இவையெல்லாங் குறையுடையனவா யின் எழுதுவார்களா?

இவையெல்லாமிங்ஙனமாக, நகரத்தார் வித்தியாசாலையிற் படிப்பித்தல் அவ மானமென்று கருதினதுபோல உலகத்தார் பொருள்கொண்டு வித்தியாசாலைகள் நடத்தப்பட்டனவென்றல் அவமானமெனக் கருதியோ அல்லது பண்டிதர்மீது

குற்றமேற்றற்கருதியோ? புத்தகவருவாய்கொண்டு நடத்தப்பட்டன என்று எழுதி நாவலரவர்கள் எழுதிய ஆவேதனங்களை மறுத்ததுமன்றி, அவர்கள் புத்தகவருவாய்க்குக் கணக்குக்காட்டாததென்னையென உலகத்தார் கருதவுஞ் செய்து "தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாயிருக்கட்டும்" என்று மூக்கை அரிந்துகொண்டவனைப்போலாயினீரே.

நீர் இந்த உண்மையையும் உமது சாமர்த்தியத்தால் மறைக்கப்புகின் ஆவேதனங்களை இரண்டாமுறை பதிப்பித்து உலகத்தார்களுக்கு நாம் கூறிய உண்மையைக் காட்டி நாட்டுவேம்.

"இவ்வித்தியாசாலையிலே நியோகிக்கப்பட்ட உபாத்தியாயர்கள் என் மாணாக்கரேயாதலால் அவர்களுள்ளே சிலர் பிடியரிசி வரவினால் அற்பவேதனம்பெற்றும், மற்றவர்கள் வேதனஞ் சிறிதும் பெறாமலும், நான்குவருஷம் படிப்பித்து வந்தார்கள். பின் பிடியரிசி வரவு தண்டற்கூலிக்குத்தானும் போதாமைகண்டு விடப்பட்டமையால் சில உபாத்தியாயர்கள் நீங்கிவிட, சிலர், வேதனமில்லாமலே ஏறக்குறைய ஐந்துவருஷம் படிப்பித்துவந்தார்கள்." என்றும்,

"ஔதாரியகுணத்திற் சிறப்புற்றோங்கிய இ. நன்னித்தம்பிமுதலியார் கொழும்பிலிருந்து நளவரு பங்குனிமீ ௨00 ரூபா அனுப்பினார். அதனை அறிந்த வண்ணார்பண்ணை வர்த்தகர்களில் இருவர் தனித்தனி ௫0 ரூபா உபகரித்தார்கள்" என்றும்,

"பிங்களவரு மாசிமீ ௩௨௨ இராத்திரியில் இவ்வித்தியாசாலையிலே ஒருசபை கூட்டி, இதன் வரலாற்றைப் பிரசங்கித்தேன். அச்சபையிலே கு. கதிர்வேற்பிள்ளை தாம் சௌமியவரு வைகாசிமீ சேர்த்த விதரணத்தை வட்டியோடு என்னிடத்தில் ஒப்பித்தனர். சபையாருள்ளே பலர் உபகரித்த விதரணம் ரூபா ௩௨அ-அணா ௩." என்றும்,

"காலயுக்திவரு சித்திரைமீ முதலாக உபாத்தியாயர்கள் வேதனம்பெற்றுக் கொண்டு கல்விகற்பிக்கின்றார்கள்" என்றும்,

நாவலரவர்கள் தமது ஆவேதனத்தில் எழுதியிருக்கின்றார்களே அதனால் உபாத்தியாயர்கள் ஏறக்குறைய பத்துவருஷம் சம்பளமின்றிப் படிப்பித்தார்கள் என்று தெரிகின்றது. இக்காலத்திலாயினும் புத்தகவருவாயால் வேதனங்கொடுத்தேன் என்று தமது ஆவேதனத்தில் எழுதினார்களா? இல்லையே. அப்படியிருக்கவும், பண்டிதருடைய பொதுநலத்தின் மிகுதிப்பாட்டை எவ்வாற்றானுங் கெடுக்கவேண்டும் என்ற தீச்சிந்தையினாலே, புத்தகவருவாயால் நாவலரவர்கள் வித்தியாசாலைகளை நடத்தினார்கள் என்றும் பண்டிதர் அவைகளைப் பதிப்பித்துச் சிதம்பரவித்தியாசாலைக்குக் கேடுசெய்கின்றார் என்றுங் கூறி உலகத்தைவஞ்சிக்கப்புகுந்த உமது கருத்து, நீர் வேறு விஷயங்குறித்து உண்மையாகச் சொல்லுவனவும் எழுதுவனவும் இதுபோலவே பொய்யென்று கருத இடந்தந்து நும்மியல்பு இத்தன்மையதென்பதைப் பொள்ளெனயார்க்கும் புலப்படுத்தி "பிள்ளையார்பிடிக்கப் பெருங்குரங்கானாற்" போன்றதே.

க. "அவர்கள் கருத்துக்குத் தாங்கள் *விரோதஞ் செய்வதைக் குறித்துமே உலகம் பலவிதமாய்ப் பேசுகின்றது" என்றீர்.

அவர்கள் கருத்தையே பண்டிதர் நிறைவேற்றுகின்றார் என்று உலகம் பேசுகின்றது. அவ்வாறிருக்க உலகம் உலகம் என்று நீர் நுங்கருத்தை உலகத்தின்மீது ஏற்றிக் கூறுதல், ஒருகாலத்திலே தருமரையுந் துரியோதனனையும் உலகத்திலே நல்லவர்களையுந் தீயவர்களையும் பார்த்து வாருங்கள் என்று பெரியோர் பணித்தபொழுது தருமர் தன்னைப்போலவே எல்லாரும் இருப்பரெனக்கருதி உலகரெல்லோரும் நல்லோரென்றும், துரியோதனன் தன்னைபபோலவே எல்லாரும் இருப்பரெனக்கருதி உலகரெல்லாரும் தீயோரென்றுஞ் சொன்னதை ஒக்கும்.

இனி உலகத்தார்கள் பேசிக்கொள்ளுகின்றார்கள் என்று நீர் கூறியனவெல்லாம் நுங்கற்பனையென்பது நமக்கும் அவர்க்கும் நன்குதெரியும். உலகத்தார்பேசுமாறு பின்னர் யாங்ஙனமெனின், யாங்கூறுதும். சித்தசமாதானத்தோடு கேட்டு உய்த்துணர்ந்து கொள்ளும்.

பொன்னம்பலபிள்ளையவர்கள் தம்மை நாவலரவர்கள் சொந்தக்காரன் என்றும் மாணாக்கன் என்றும் சொல்லிக்கொண்டும் எழுதுவித்துக்கொண்டும் யாழ்ப்பாணத்திலும், இந்தியாவிலும் நெடுங்காலமாக நாவலரவர்கள் புத்தகங்களைப் பலர் பதிப்பித்துத் தங்கட்குபயோகப்படுத்தக் கண்டும் அதுபற்றி இதுகாறும் யாதொன்றும் பேசாமலிருந்து, பண்டிதர் தமது கல்விகற்பித்தற்றொழிலினாற் சம்பாதித்த பொருள்கொண்டு தாபித்த திருச்செந்தூர்ச் சுப்பிரமணியவித்தியாசாலையின்பொருட்டு அப்புத்தகங்களைப் பதிப்பித்தல் குற்றமென்று கூறலாமா? இது எவ்வளவு அநீதி. சதாசிவப்பிள்ளையவர்கள், பண்டிதர் ரு வருடகாலம் பதிப்பித்துவர அதனைப் பார்த்திருந்தும் பண்டிதர் தருமத்தைப் பாராட்டிவந்தாரே! அவர் இறந்தவுடன் பொன்னம்பலபிள்ளையவர்கள் கேட்பார் இனியார்? என்று கருதித் தாம் பண்டிதர்மீது நெடுங்காலங்கொண்ட வைரத்தைச் சாதிக்க இது தருணம் என்று இவ்வீண் எடுப்புகள் எடுக்கின்றார். அவைகள் அவருக்கேகேட்டைத்தருவன, பண்டிதர்க்கு நன்மையைதருவனவாகும் என்றும், பண்டிதர் சைவவித்தியாநுபாலன யந்திரசாலை தாபித்தற்பொருட்டுச் சென்னைக்குச் சென்றகாலத்து, சதாசிவப்பிள்ளையவர்கள் தமது ஆபீசில் இருந்துகொண்டு நுமது ஆபீசுக்கு வேண்டிய யாவுஞ் செய்து முடிக்குதிர் என்று பண்டிதருக்குச் சொன்னமையை யறிந்த பொன்னம்பலபிள்ளை சதாசிவப்பிள்ளையவர்களைநோக்கித் தாங்கள் பண்டிதருக்கு இடங்கொடுத்தால் உலகத்தவர்கள் யான் செய்வனவெல்லாந்தவறென்றும், பண்டிதர் செய்வனவெல்லாம் சரியென்றும் சொல்லுவார்கள். ஆதலால் தங்கள் ஆபீசில் இருந்து தமது ஆபீசுக்குவேண்டுங் கருமம் முடிக்க இடங்கொடுக்கப்படாதென்று தடுத்தபோது அதனைப் பொருட்படுத்தாது பண்டிதருக்கு இடங்கொடுத்தமையாலும், பின் சென்னையிலிருந்த பண்டிதரைச் சிதம்பரத்தில் நடத்திய நாவலரவர்கள் குருபூசைக்குச் சதாசிவப்பிள்ளையவர்கள் அழைத்தபோது அப்படிச்செய்யின் யான் வித்தியாசாலையிற்போய் இருந்துவிடுவேன் என்று சொல்லித் தடுத்தபொழுதும் அதனையும்பொருட்படுத்தாதுபண்டிதரை அழைத்தமையாலும், சதாசிவப்பிள்ளையவர்கள் பண்டிதர்பக்ஷமாயிருக்கின்றாரெனக்கருதி அவர்காலத்தில் நமதெடுப்புப்பலி

க்காதென்று ஓங்கியிருந்து இப்பொழுதுகிளம்பினார்;பண்டிதர் அதற்கு அஞ்சுபவ ரல்லர் என்றும், தக்கமனுஷர் ஒருவரிடத்தில் சதாசிவப்பிள்ளையவர்கள்,பொன்னம் பலம் பண்டிதரைப்போலத் தனியே தன்முயற்சியாற்பொருள் சம்பாதித்து ஒருத ருமத்தை நடத்தினாலன்றோ அருமைதெரியும். நான்கஷ்டப்பட்டுச் சம்பாதித்து வைக்க வயல்வரம்பிற்போய் நின்று எல்லாந்தன்னாலாயது போலத் தலையாட்டிச் சாமர்த்தியம்பேசி வருதலாற் பயனென்னை! பொன்னம்பலத்தைப்போலப் பத்துப் பொன்னம்பலத்தைச்சம்பாதிப்பேன்.எனக்குக்கோபம்வந்தால் அடக்குவார் யாவர்? எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு கோபத்தை யடக்கியிருக்கின்றேன். யாழ்ப் பாணத்திருந்து வந்த வித்துவான்களுள்ளே யார் பண்டிதரைப்போலத் தம்முயற்சி யாற் பொருள்தேடிச் சமயவிருத்திப்பொருட்டு வித்தியாசாலைதாபித்துத் தங்கருத் தையுங் காலத்தையும் பொருளையும் அதற்கே செலவழித்தவர்? அப்படிச்செய்கின் றவரோடு நாம் பகைக்கப்படாது; என்று சொல்லினார்களன்றோ? அதைக்கேட்ட அத்தக்கவர் பண்டிதரிடம் வந்து சொன்னமை பலர்க்குத் தெரியுமே. கேட்டவ ருஞ் சாக்ஷிசொல்ல இப்போதும் முந்தி நிற்கின்றாரே. அங்ஙனஞ் சதாசிவப்பிள் ளையவர்கள் தம்முண்மையுந் பண்டிதர் தருமத்தினுண்மையும் அறிந்து தக்கபடி தங் காலங்கழித்தாராகவும்,பொன்னம்பலபிள்ளையும் தம்முண்மையும் பண்டிதர் தருமத் தினுண்மையும் நோக்கித் தாம் அவர்தருமத்துக்குக் கேடுசெய்ய நினையாமல் தங்கா லத்தைக் கழித்தலே நன்மை என்றும், உலகத்தார்கொடுத்த பொதுப்பொருள் கொண்டு நடத்தப்படும் தருமத்துக்குத் தலைமைவகித்து அதனை நடத்துபவர் தஞ் சுற்றத்தாருட் சிலர் அத்தருமப்பொருளை எடுத்துத் தாம் நினைத்தபடி செலவுசெய் யக் கண்டிருந்தும் அதுபற்றிக் குறைகூறாமல் அன்னியர் ஒருவர் அத்தருமப்பொ ருளிற் சிறிது எடுத்து அதனையுடையார்கருத்துக்கியைந்த தருமத்தை நடத்துதற் கண் குற்றங்கூறல் சுற்றப்பாதுகாப்பிற்குச் சேர்க்கக்கருதியபொருள் வாஞ்சைபற் றியே என்றும், தமிழ்க்கல்வி சிறிதுகற்ற சிறுவர்களும் நாளுக்குநாள் பலவிதமா கப் பல பாலபாடங்கள் செய்துவரும் இக்காலத்திலே நூதனமாகப் பாலபாடம் செய்தல் அவசியமன்றென்றும், பழைய நூல்களையும் உரைகளையும் அழிந்து போகாவண்ணம் பரிசோதித்தச்சிடுதலே இக்காலத்தில் அவசியம் செயற்பாலதா கிய நன்மையென்றும், பண்டிதருக்குப் பொருளும் புகழும் புத்தகம் அச்சிடுதற்கு முன்னுமுள்ளன என்றும், அது அவர் *ஆசிரியர் அவருக்கு எழுதிய கடிதத்தா லும் மேற்போந்த பாயிரங்களாலும் பொன்னம்பலபிள்ளையவர்கள் எழுதிய கடி தங்களாலும் நன்குணரலாம் என்றும், காரைக்கால் துலுக்கன் காரைக்காலில் அச்சிட்ட புத்தகமுகப்பில் "சென்னபட்டணம் வித்தியாநுபாலனயந்திரசாலையில் சதாசிவப்பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டது"என்று அச்சிட்டதற்காகக் குற்றமிறுத் தானேயன்றிப் பாலபாடத்தை அச்சிட்டதற்காகக் குற்றமிறுக்கவில்லை என்றும், புத்தகம் வாங்கிவிற்றவர் குற்றமிறுத்தார் என்றல் பொய்யென்றும்,அது அவ்வழக் குப்புத்தகத்தால் இன்றும் அறிந்து கொள்ளலாமென்றும், இக்குற்றத்திற்கு இத் தண்டனை உண்டு,இக்குற்றத்திற்கு இத்தண்டனையில்லை, என்னும் பாகுபாடுணரா மல் வாங்கிவிற்றவரும் குற்றமிறுத்தார் என்று கூறி நகைக்கப்படுகிறாரென்றும், பண்டிதர் தம்பெயர் யந்திரசாலைப்பெயர் உண்மையாகப் பதிப்பித்திருத்தலா

* ஆசிரியர் எழுதியகடிதவாசகம் இவ்விஷய முடிவில் காட்டப்படும்.

லும் சதாசிவப்பிள்ளையவர்கள் இந்நுவருஷகாலம் உடன்பட்டுப்பார்த்துக்கொண்டி ருந்தபடியாலும் காப்பிரைட் சுதந்தரம் இத்தனைவருடத்துக்குமேல் இல்லையெனச் சட்டமிருத்தலாலும் பண்டிதர் நாவலரவர்கள் மாணுக்கபரம்பரையிலுள்ளவராதலா லும் நாவலரவர்கள் மேற்கொண்ட தருமங்களையே நடத்துபவராதலாலும் முதற்பா லபாடம் அச்சிட்டகாலத்திலே பொன்னம்பலபிள்ளை பண்டிதருக்கு அனுப்பிய கடிதம் அவர்க்குப் போதியசான்றுதலாலும். பண்டிதர்பால் காரைக்கால் துலுக் கன் குற்றம் எக்காலத்தும் பற்றுதென்றும், வாங்கிவிற்றவன் தண்டிக்கப் பட்டான் என்று கூறிவிட்டால் பண்டிதரிடம் ஒருவரும் புத்தகம் வாங்க மாட்டார்கள் என்று கருதினமை எவ்வளவு அறியாமை என்றும், இச்செயல்கள் “வாழப்போகும்பெண்ணுக்குச் சீப்பெடுத்தொளித்தவர்” சீலம்போலு மெனவும், நாவலரவர்கள்புத்தகங்களைப் பலர் அச்சிட்டுத் தங்கட்குபயோகப்படுத்தப்பண்டிதர் அச்சிட்டு நாவலரவர்கள் கருதிய தருமத்திற்குபயோகப்படுத்தல் எவ்வாற்றானும் விசேடபுண்ணியமே என்றும், பொன்னம்பலபிள்ளையவர்கள் இரண்டுமாதகாலம் வக்கீல்களிடம் திரிந்து பண்டிதர்மீது வழக்குத்தொடுக்க யோசனைபண்ணியும் சட்டம் இடங்கொடாமையால் சும்மாவிருந்துவிட்டார்களேயன்றி முயற்சிசெய்யா திருக்கவில்லை என்றும், நாவலரவர்கள் சிதம்பர வித்தியாசாலை, பண்டிதர் பிள்ளை யோடு கோபமாயிருந்தாற்றான் அதுபற்றி நன்றுகநடத்தப்படும்; ஆதலால் பண்டி தர் பகைமையும் பிள்ளைக்கு நன்மைபயப்பதேயென்றும், காப்பிரைட் காலம்கழிந் தமையாலும் சதாசிவப்பிள்ளையவர்கள் பண்டிதருக்கு அனுமதிகொடுத்து அளவளா வியிருந்தமையாலும் சட்டவிரோதமாகாதென்றும், குருவின்பொருளை எடுத்துத் தமது கடனுக்கும் பந்துவர்க்கத்தை ஓம்புதற்கும் செலவழித்தலே குருத்துரோகம் குருக்கருதிய தருமத்தின்பொருட்டுச் செலவழிப்பது குருத்துரோகமாகாதென் றும், நாவலரவர்கள் பள்ளிக்கூடத்தார் வழக்குக்கொண்டுபோக இடமில்லாமை யால் வீணே பிதற்றித் திரிகிறார் என்றும், நாவலர் மாணுக்கர் அல்லாத பிறரும் பண்டிதர்போல வித்தியாசாலை தாபித்து நாம் நாவலர் மாணுக்கர் என்று சொல்லி நாவலர்புத்தகங்களை அச்சிட்டு உண்மையாக அதற்கேயுபயோகப்படுத்துவாராயின் அது விசேடத்தில் விசேடமாமென்றும், அவ்வாறு சொல்லிக்கொண்டும் சொந்த க்காரர் என்று சொல்லிக்கொண்டும் அப்பொருளிற் பரமாணுப்பிரமாணமாயினும் தாம் எடுப்பின் அதுவே பெருங்குற்றமாமென்றும், முக்கியஸ்தலந்தோறும் வித் தியாசாலை தாபித்தல் வேண்டும் என்று நாவலரவர்கள் தமது ஆவேதனத்தில் எழு தியிருக்கிறபடியால், அதற்கிசையப் பண்டிதர், “நஞ்செந்தின்மேய—வள்ளிமணு ளற்குத்தாதைகண்டாய்” எனத் திருநாவுக்கரசுசுவாமிகளால் விதந்து திருவாய் மலர்ந்தருளப்பெற்ற மிக முக்கியஸ்தலமாகிய திருச்செந்தூரில் நாலாயிரம் ரூபா முதற்பொருள் கொண்டு தாபித்த சுப்பிரமணியவித்தியாசாலைக்கு ௩௪000 ரூபா முதற்பொருள் உள்ள சிதம்பரவித்தியாசாலை மானேசர் உபகாரராயிருத்தல்வேண் டும்; அது செய்யாவிடினும் அபகாரஞ்செய்தல் அந்தோ பாவம்! பாவம்!! என்றும், ஒருவர்க்கு ஒருமுறை தாம்சொன்ன விஷயத்தையே அவரைக்காணுந்தோறும்சொ ல்லப்புகுதலால் இவர் இங்ஙனம் பலமுறையும் கூறியதுகூறுதற்குக் காரணம் இது வென நன்குணர்ந்தசைவாபிமானிகள் பின்னும் பின்னும் இவரைக்காணப்பெறின் தங்கள் காலத்தை இவர்வீணே கொள்ளைகொள்ளுவார் எனக்கருதி அவரைக்காண

டற்குமஞ்சி மறைகின்றார்களே; இவருக்கு இந்தவீண் வேலை ஏன் என்றும், பண்டிதர் செயலும் பொன்னம்பலபிள்ளைசெயலும் இவ்வியல்பின என்று பிரத்தியக்ஷத்திலறிந்த எமக்குப் பின் புதிதாகப் பொன்னம்பலபிள்ளை சொல்வனயாவையோ என்றும், ம-ா-ா-ஸ்ரீ தர்க்ககுடாரதாலுதாரியவர்கள் சிவபதமடைந்தபின் அவர்கள் மாணாக்கரும் நண்பரும் அவர்கட்குக்கொடுத்த பொருள்களை எடுத்துக் கொண்டபின்னர் மிஞ்சியபொருளைப் பண்டிதர் உ00 ரூபா வாக நாம் எடுத்துக்கொள்ளுகின்றோம் என்று சொல்ல,விற்கவேண்டியதின்று; தர்க்ககுடாரதாலுதாரியவர்கள் மருகருக்கு நாமே சேர்ப்பித்துவிடுவேமென்று சொல்லி அப்பொருளை எடுத்துச்சென்ற ஒருவர் அவ்வாறு செய்தாரா? அப்படிப்பட்டவர் வித்தியாசாலைப்பொருள் வித்தியாசாலைக்குச் சேர்வதில் வருத்தப்படுவார்தாமே என்றும், விருத்தாசலத்திலே, பெருஞ்சாந்தியாகிய மகாகும்பாபிஷேகம் நடந்தகாலத்திலே திருச்செந்தூர்ச் சுப்பிரமணியவித்தியாசாலை மாணாக்கர் பத்துப்பேர் உபாத்தியாயரோடு தருமகர்த்தர்களால் அழைக்கப்பட்டுத் தேவார திருவாசக முதலிய திருமுறைகளும், திருப்புகழ் திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பாமுதலிய திருப்பாக்களும் ஓதியசிறப்பைக்கண்டவருள் பாராட்டாதவர் யார்? அபிடேகமுடிந்தபின் தருமகர்த்தர்கள் மகிழ்ந்து கொடுத்த பரிசு பெற்றுத்திரும்பிச் சிதம்பரம்வந்து நடேசர்சந்நிதியில் தேவாரபாராயணஞ்செய்து, மீண்டு சீர்காழிக்குச்சென்று சமணரைக்கழுவேற்றிய திருவிழாவினன்று சுவாமிக்குப்பின் தேவாரபாராயணஞ்செய்து, திராவிடவேதசபையாரால் உபசரிக்கப்பெற்றுத் திருவாவடுதுறைசேர்ந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைத்தரிசித்துத் தேவாரம் ஓதிப் பரிசுபெற்று, பின் கும்பகோணத்துச் சைவசமயாபிமானிகளால் கும்பேசுரருக்கு நடத்தப்பட்ட சப்தஸ்தானவுற்சவத்தின்பொருட்டு அழைக்கப்பட்டு உற்சவதினத்திற்சுவாமிக்குப்பின் தேவாரமோதி உபசரிக்கப்பெற்று,மீண்டு மதுரைமாநகர்க்குப்போய்த்திருஞானசம்பந்தசுவாமிகளாதீனத்துஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைத்தரிசித்துத் தேவாரமோதிப்பரிசுபெற்று,மீண்டு திருநெல்வேலியையடைந்து நெல்லையப்பர் சந்நிதியில் தேவாரம் ஓதி,தருமகர்த்தரால் உபசரிக்கப்பெற்று, பின்கலியுகவரதராகிய ஆறுமுகநயினர் சாந்நித்தியராக வீற்றிருந்தருள் புரியும் திருச்செந்தூரையடைந்தார்களே இவ்வியல்புடைய இம்மாணாக்கரை ஒவ்வோரிடங்களிலும் நடத்தப்படும் உற்சவகாலந்தோறும் அழைப்பித்துத் தேவாரபாராயணஞ் செய்வித்தல்வேண்டும் என்று பலரும் விரும்புகின்றார்களே! இவ்வாறு தேவாரபாராயணம் எல்லாத்தலங்களிலும் நடைபெறச்செய்ய வேண்டும் என்பது, நாவலரவர்கள் செய்யக்கருதிய முக்கிய சிவபுண்ணியங்களுள் ஒன்றன்றோ? அது அவர்கள் ஆவேதனத்தாலும் திருக்கைலாசபரம்பரைத்திருவாவடுதுறையாதீனத்து ம-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணிய ஓதுவாரவர்களை யாழ்ப்பாணத்துக்கழைத்துத் தமதுவித்தியாசாலைப்பிள்ளைகட்குத் தேவாரமோதுவித்து நல்லூர்க் கந்தசுவாமிகோயிலுற்சவகாலத்திற் பாராயணம்பண்ணுவித்தமையாலும் யாவரும் அறிவார்களே. அவர்கள் முக்கியமாகக் கருதிய சிவபுண்ணியங்களுள் ஒன்றாகிய இத்தருமத்தை விருத்திசெய்தல் நோக்கியாயினும் பொன்னம்பலபிள்ளை மனச்சமாதானம்பெற்றிருக்கப்படாதா வென்றும், நாவலரவர்கள் தருமபரிபாலகர் என்று தம்மை உயர்த்திச்சொல்லிக்கொள்ளும் பொன்னம்பலபிள்ளை சிதம்பரவித்தியாசாலைப் பிள்ளைகளைக்கொண்டு ஏன் தேவாரபாராயணம் செய்விக்கப்படாதென்றும், வேறு பலவிதமாகவும் பேசிக்கொள்ளுகின்றார்கள்.

ஆசிரியர்கடிதம்:—"செல்வச்சிரஞ்சீவி தம்பி தம்பையா அறிவது எனக்கு இக்கோரஞ் செய்வதே எனக்கு ஆன உதவி. ஆனால் அந்த உதவியைச் சும்மாசெய்யும்படி கேட்கவில்லை. தம்பீ நீ சற்குணனும் என்மீது பேரன்புடையையுமாயிருத்தலினாற்றான் நான் ஒன்று கேட்கிறேன். இதனை உனக்கு என்னசங்கடம் இருப்பினும் செய்யில் ஸ்ரீ நல்லூர்க் கந்தசாய என்குலதெய்வம் உனக்கு மேன்மேலும் ஆக்கந்தருவர். என்னிடம் ௬00 இரகுவமிசக்காப்பியுள்ளன. அவற்றைத் தம்பீ உனக்குத்தந்துவிடுகிறேன். எனக்குத் தம்பீ ௩00, ரூபாவரையில் பொருளுதவி செய்தல்வேண்டும். இதனால் விசிட்டதருமமாகிய ஒரு கன்னிகாதானம் நடைபெறும். அப்புண்ணியத்திற் பாதி உனக்கும் உண்டு. குறித்தகாப்பிகளை வடதேயம் போம்போது நான்கொண்டுபோவேன் ஆனால், ரூபா அ00 கொண்டுவருவேன்.

இக்கொப்பிகளைத் தம்பீ நீயே ஏற்று விற்றுக்கொள். எனக்குத்தொடர்பில்லை. அதைப்பற்றி நானும் அநுசரணையாக விற்றுத்தருவேன். தம்பீ உன்னிடம் இருப்பில் முன்னரே பணம் ஆக்கி விடுவாய். தமக்கையார்கேட்டதற்குத் தடைசொன்னதாம். நினைத்தால் அருமையல்ல. ஒருபுத்தகம் ரூபா முக்கால் வீதம் உனக்குத்தரினும் எனக்குச் சந்தோஷம். என்சோம்பலால் இப்படியாகியது. கடைசியாகத்தம்பீ உற்றவிடத்தெனக்கு உதவும் உதவி இதுவே. சும்மா ரூபா தரவேண்டாம். உன்பணத்திற்கும் மோசம் இல்லை. எனக்கு நயமுமாகும். தம்பீ மனதை அமைத்து என்மீதுதயைவைத்து இதற்கு நல்விடை தருக தருக. பணத்தைத்தந்தரமாய் ஒருவரிடம் அபகரிக்கிறகுணம் எனக்கில்லை. தம்பீ அதனை நீயும் ஒத்துக்கொள்வாய். "காலத்தினாற் செய்த நன்றி"என்றகுறட்பாவை நினைந்து தயைசெய்க. ச. பொன்னம்பலம்.

ரகுவமிசம் அர்த்தஞ்சொல்ல நான் வைப்பினும் இப்போ ௫0 காப்பி விலையாம். உனக்குந்தெரியும். ஆனால் கிடையாக இருந்துவிடும் என்ற அச்சம் இருக்கலாம் கிடையாகாது கிரயப்படுத்த என்னாலியலும். ௨0௦, ரூபா உதவினாலும் ௬00 காப்பியும் தருவேன். நீ விற்பாய். என்னால்முயன்று விற்றலரிது. தமக்கையாருக்குமறுத்ததுபோல மறாது நீ சங்கடப்பட்டுஞ் செய்யவேண்டும். அப்பால் நாமென்னசெய்வோம். எட்டும்வரையும் பார்க்கலாம் முடியாதெனில் அதிட்டம் இப்படியாவென்று ஒழிவதே. ச. பொ.

௧0. "அவர்களுக்குப் பிற்காலத்திலும் அப்புத்தகங்களின் வரும்படியினால் அவர்கள் வித்தியாசாலைகள் நடைபெற்று வருகின்றன" என்றீர்.

அவர்களுக்குப பிற்காலத்திலே யாழ்பபாண வித்தியாசாலை நாவலரவர்களால் அதற்கு மூலதனமாக வாங்கி விடப்பட்ட வர்த்தகசாலைகளின் வரும்படிகொண்டும், கிராண்டுப்பணங்கொண்டும், நவராத்திரிவரும்படிகொண்டும் நடைபெற்று வருகின்றது. இது ந. க. சதாசிவப்பிள்ளையவர்கள் முதலில் எழுதிய உயிலினாலும் நன்கறிந்துகொள்ளலாம். அன்றி யாழ்ப்பாணத்தார் எல்லார்க்கும்நன்றாகத்தெரியும். சதாசிவப்பிள்ளையவர்கள் தாம் அச்சிட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிய புத்தகங்களை வித்தியாசாலை மானேசருக்கு அனுப்பி விற்பித்துஅதனால் வரும் பொருளை அவ்வித்தியாசாலைக்கேசெலவுசெய்வியாது பிறருக்கனுப்பி விற்பித்து அப்பொரு

ளைத்தாமே பெற்றுக்கொண்டமையும் அவ்வித்தியாசாலைக்குப் புத்தகவருவாய் சிறிதும் உபயோகப்பட்டிலதென்பதை நன்கு வலியுறுத்தும். சிதம்பரவித்தியாசாலையோவென்றால், நாவலரவர்கள் சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலையைக் குறித்து வெளிப்படுத்திய கடைசி ஆவேதனத்தில் மகமை முதலியவற்றின் வருவாய் இருப்பு ரூபா ௪௧௯௬-௮-௫ என்று காட்டியிருக்கிறார்கள். அதுகொண்டும், கிராண்டுப்பணங் கொண்டும், மார்கழி ஆனி மாதங்களில் தரிசனத்திற்குவந்த ஜமீன்தார் பிரபுக்கள் முதலியோர் கொடுத்த நன்கொடைப்பணங்கொண்டும், சிவநேயச் செல்வராகிய ஸ்ரீமான் காரைதீவு ஆறுமுகப்பிள்ளையவர்கள் சிவபதமடைந்தகாலத்தில் சமர்ப்பித்த ௬000 ரூபா விலைமதிப்புள்ள நன்செய் புன்செய் வரும்படிகளைக் கொண்டும் நடத்தப்பட்டு வருகின்றது.

௧௧. ''இந்தவியாச்சியத்துக்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் சிலர் எவ்வளவு செலவு வந்தாலும் எனக்காகச்செலவழிக்கக் காத்திருக்கிறார்கள் என்று சொல்லுகின்றீர்களாமே'' என்றீர்.

சைவசமயசம்பந்தம்பற்றிப் பிறர்மேல் தொடுக்கப்பட்ட வியாச்சியங்களுக்குப் பண்டிதர் ௧000 ரூபா ௫00 ரூபா என்னும் தொகைகள் கொடுத்து உதவிபுரிந்தது உலகறிந்ததொன்றேயாகவும், தமது வியாச்சியத்துக்கு நகரத்தார் செலவுசெய்யக் காத்திருக்கிறார் என்று பண்டிதர் சொல்வாராமே. "சொல்லுவார் சொன்னாற் கேட்பாருக்கு மதியென்ன" என்றபடி சொல்லுவார் சொன்னால் உமக்குப் புத்தி எங்கேபோயிற்று. "பொய்சொன்னாலும் பொருந்தச்சொல்லவேண்டாமா" பண்டிதர் சம்பாதித்த பொருளைத் தமது வழக்கிற்குச் செலவுசெய்யாமல் வைத்துவிட்டுப் பிறரை ஏன் எதிர்பார்த்திருக்கிறார்? எதிர்பார்த்தால் அவர்கள் பண்டிதரை நோக்கி நமது பொருளிற் செலவுசெய்யலாமே என்றால் பண்டிதர்சொல்லும் பதில்யாது? இப்படிப் பொருந்தாதகதைகளைச் சொல்லுகிற புத்திமான்களும் அதனைக்கேட்டு விசாரமின்றிப் பொருந்தாத எழுத்துக்களை எழுதும் புத்திமான்களும் வேறென்னதான் சொல்லமாட்டார்கள் எழுதமாட்டார்கள். பொன்னம்பலபிள்ளை எச்செலவுக்கானாலும் வித்தியாசாலைப் பொருளைத்தான் செலவழிக்கவேண்டும். தம்பொருளைச் செலவழிக்கமாட்டாரா வென்னில், அதனை, பண்டிதருக்கு அவர் எழுதிய கடிதங்களை நோக்கித் தெரிந்துகொள்ளும். இப்பொழுது வித்தியாசாலைப் பணம் பெருக்கந்தான்.

௧௨. "குருவாக்கியபரிபாலனம் பண்ணி நாவலரவர்கள்செயலை அநுகரிக்கச் சிஷ்யராய் வந்தவதரித்த தாங்கள்" என்றீர்.

பண்டிதர் அவதாரம் யார்வாக்கியபரிபாலனம் பண்ணுதற்காயினுமாகுக. உலகம் பிரத்தியக்கத்திற்கண்டு தெளிந்துகொள்ளும். * தங்கள் திருவவதாரத்தைச் சற்றே ஆராய்வாம்.

தாங்கள் இப்பொழுது அடைந்திருக்கும் பதத்தையடைதற்கு முன்னம் வித்தியாசாலையில் இரண்டாம் உபாத்தியாயராக இருந்தபோது தங்களுக்கும் முதலு

* முன்னிலை பிரேரக பிரேரிய ஒற்றுமைபற்றி மாறியும் வரும். அதுபற்றி வழுவெனக் கொள்ளற்க.

பாத்தியாயராக விருந்த தங்கள் மாதுலர் ம-ள-ள-ஸ்ரீ தர்க்ககுடாரதாலுதாரியவர்களுக்கும் வேதனவிஷயத்திலும் பிள்ளைகளைப் படிப்பிக்கும் விஷயத்திலும் பிறகாரணங்களாலும் பகைமையுண்டாயிற்றன்றோ? அதுகாரணமாக அவர்கள் வித்தியாசாலையை விடுத்துச் சொர்க்கபுரமடத்திலே வாசஞ்செய்துகொண்டிருந்தார்களன்றோ? அக்காலத்துத் தங்களுக்குப் பெரியதோராபத்து நேர்ந்ததன்றோ? உடனே தாங்கள் சென்னபட்டணத்திலிருந்த பண்டிதருக்குக் கடிதம் அனுப்பி அதனைத் தந்தியாகப் பாவித்துக்கொண்டு இராத்திரி ௧௨ மணிக்குச் சிதம்பரம் வரும் துறூமெயிலில் வந்துசேரவேண்டும் நான் ஸ்டேஷனில்வந்து காத்திருப்பேன் என்று தெரிவித்ததுண்டா இல்லையா? பண்டிதர் அப்படியேவந்துசேர, தாங்கள் அவர் கையைப் பிடித்துக்கொண்டு தங்களுக்கு நேர்ந்த ஆபத்தை வீடுபோய்ச் சேருகிறவரை சொல்லியும் முடியாமையால் விடிகிறவரை சொல்லி என்னை இவ்வாபத்தினின்று நீக்கி யாழ்ப்பாணம்போய்த் திரும்பும்படி செய்யவேண்டும்; செய்யாவிடில் தர்க்ககுடாரதாலுதாரியாரும் சிவராமச்செட்டியாரும் என்னைச் சந்தியில் விட்டுவிடுவார்கள். அது நிகழ்ந்தால் ஒருதுணையோடு வடக்கே போய்விடுவேன். பின் என்னை ஒருவருங் காணமாட்டீர்கள். இவ்வித்தியாசாலையை நான் தானே தாங்கவந்தவன். என்னை நம்பித்தானே வித்தியாசாலை தாபித்தார்கள். எப்படியானாலும் எனக்கென்ன? என்னை இன்னும் பார்க்க விருப்பமிருந்தால் யாழ்ப்பாணம் அனுப்பிவிட்டுத்தான் இவ்விடம் விட்டுப் புறப்படவேண்டும். யான் யாழ்ப்பாணம் போய்த்திரும்புகிறவரை தர்க்ககுடாரதாலுதாரியாருக்குச் சொல்லப்படாது. சொன்னால் என்காரியத்திற்கு விக்கினஞ் செய்வார். என்று அழுது புலம்பியதும், இப்பொழுதே கடிதம் எழுதவேண்டும் என்று சொல்லிப் பண்டிதரைக் கொண்டு இளையதம்பியுபாத்தியாயரென வழங்கிய ஸ்ரீமத் மா. வைத்தியலிங்கவுபாத்தியாயரவர்களுக்கும் ம-ள-ள-ஸ்ரீ *சுந்தரப்பிள்ளையெனவழங்கும் சோமசுந்தரபிள்ளையவர்களுக்கும் கடிதமெழுதுவித்து அனுப்பியதும், அக்கடிதத்துக்குவந்த பதில் கண்டு தங்களைப் பண்டிதர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியதும், அப்போது பண்டிதரையும் கூடவரும்படி தாங்கள் அழைத்ததும், அதற்கு அவர் இப்போது தாம் எடுத்த கருமத்தை இடையில் நிறுத்திவிட்டு வர முடியாதென்றும் தமக்குவேண்டியவர்களுக்குக் கடிதமூலந்தெரிவித்துத்தங்களுக்கு வேண்டிய உதவிசெய்யும்படிசெய்கிறோம் என்றுஞ்சொல்லி அவ்வாறு செய்வித்ததும் எப்போதும் ஞாபகத்திலிருப்பதற்குத் தடையென்னை? தடையுண்டாயினும் உற்றுநோக்கி இப்போதாயினும் ஞாபகப்படுத்திப்பாருங்கள் நன்றாய்த்தோன்றும். தோன்றியக்கால் குருவாக்கிய பரிபாலனம் பண்ணி நாவலரவர்கள் செயலை அநுசரிக்கப்பிறந்த சிஷ்யர்களுட் சிறந்தமூர்த்திகளாய்த் திருவவதாரஞ் செய்த சிஷ்யர் தாங்களே என்பதும் தோன்றும். அப்பொழுது வடக்கேபோக விட்டிருந்தால் இப்போது என்செய்வாரோ? இக்கற்பனைகள் எழுதுவாரா? இல்லையே. ஆதலால் தடுத்துவைத்தபண்டிதர்க்கு இது வேண்டியதுதான்.

௧௬. "அக்குரு தமது தருமத்துக்கு உற்றுழி உதவுதற்குச் சேமித்துவைத்த புதையற்பொருளிலா சமயம்பார்த்துக் கைவைக்கவேண்டும்" என்றீர்.

---

* இவர்கட்கு அனுப்பியகடிதம் இப்பொழுதும் சான்றுபகர விருக்கின்றது.

பண்டிதர் திருவாரூரில் இருந்தபோது சிதம்பரத்திலிருந்து பிள்ளையவர்கள் அவருக்கு அனுப்பியகடிதத்தில், "ஐப்பசிமீ த்தில் கடன் தீர்க்கும் விஷயமாக ஊர்போய்வர எண்ணியிருக்கிறேன். கூடவந்தால் கடு நாள் போய் நின்று வாலா மே. அப்படிக்கருத்துண்டா?" என்று எழுதிய கடிதத்தை யுற்றுநோக்கி, நீரும், சமன்செய்து சீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற் கோடாமையைத் தமக்கணி கலமாகவுடைய பிற சைவாபிமானிகளும் உற்றுழி யுதவவைத்த புதையற்பொரு ளிற் சமயம்பார்த்துக் கைவைத்தவர் யாவர் என்று அறிந்து கொள்ளுங்கள். "முன் னும்பொறுத்தீ ரின்னும்பொறுமின்" என்று தருமர் கூறியதை நினைத்து இதனை இவ்வளவில் நிறுத்துகின்றேம். பிள்ளையவர்கள்காட்டும் வழிகளிலே சென்றுலாவி வருகின்றேம். "பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்—திறந்தெரிந்து கூறப் படும்" என்று தேவர் திருவாய்மலர்ந்திருக்கும் உண்மையையுமுணராமல் பழியில் லாதவர்மீது பழிகூறவரின் பலபழியுள்ளவர்தாம் படும்பாடு சொல்லவும்வேண்டுமோ?

கச. "அப்புதையற்பொருளைக் காத்திருக்குந் தெய்வம் இலேசில் விடாது" என்றீர்.

சபாசு!! சபாசு!!! உண்மை உண்மை. விடாது விடாது. தானே அநுபவிக் குந் தன் பரிவாரதேவர்கட்கும் கொடுக்கும். அது யாருமறிந்த விஷயமே. நீர்சொ ல்லியது மிகை. காத்திருந்த பழந்தெய்வங் கைவிட்டுப்போயது. அதுகண்டு புதுத் தெய்வம்தருமத்திற்கு விடாது தானுந் தன்சமூகமுமாக அநுபவிக்கின்றது. அத்தெ ய்வம் ஆசையம்பலத்தெய்வந்தானே. அதனை நாமும் அறிவேம். பிறர்தாமுமறிவர்.

கரு. "நாவலரவர்கள் புத்தகங்களைத் தாங்கள் அச்சிடுங் கருத்தையும் கணக் குக் கேட்குஞ் சங்கதியையும் முன்னம் பொன்னம்பலபிள்ளையவர்கள் தங்களை யழுதிக்கேட்டகாலத்திலே சொல்லிவிடலாகாதா? நாவலரவர்கள் வித்தியாசாலைக் கணக்கெல்லாம் கண்டபடி பழுதாகட்டும் அதன்பின் இழுத்துவிடுவோமென்று எண்ணினீர்களா?" என்றீர்.

பொன்னம்பலபிள்ளையவர்கள் எழுதிக்கேட்டகாலத்திலே சதாசிவப்பிள்ளைய வர்களே அதிபதி. கேட்கவேண்டிய சதாசிவப்பிள்ளையவர்கள் அக்காலத்திற்கேட் டாலன்றோ தக்கபதிலளிக்கப்படும். அநுமதிகொடுத்தவர்கள் கேட்பார்களா? கணக் குச் சங்கதியும் புத்தகம் அச்சிடுங்கருத்தும் சதாசிவப்பிள்ளையவர்களிடம் பண்டித ராற் சொல்லப்பட்டனவே. பதினேழுவருஷகாலம் சிதம்பரவித்தியாசாலைத் தரு மவிஷயமாகச் சதாசிவப்பிள்ளையவர்கள் பண்டிதரோடுகலந்து பேசிவந்தமை நீர் அறியீரோ? அவர்கள் தடுக்க முன்வாராதது என்னையோ? நீரே யோசித்துக்கொள் ளும். சதாசிவப்பிள்ளையவர்கள்காலத்தில் கணக்கென்பதொன்றிருந்தாலன்றோ நும் கேள்வி சிறிதாயினும் பயன்படும். பின் கண்டபடி பழுதாகிறது நுமது கற்பனை க்கணக்குகளே, பிறிதின்றெனவுணர்க.

கசு. "நாவலரவர்கள் தருமத்தில் உள்ளபடி விசுவாசமிருந்தால், அத்தருமபரி பாலனஞ்செய்பவரிடத்துக் குற்றங்காணும்பொழுது நேரிலாவது கடிதவாயிலாக வாவது அவர்களைத் திருத்துவதன்றோ முறைமை. தங்கள்குருவாகிய நாவலரவர்கள் நான்காம் பாலபாடத்திலே பிறரிடத்தே குற்றமுண்டாயின், அவரைத் தனியிடத்

திற்கண்டு அதனையும் அதனால் வருங்கேட்டையும் அவருக்கு அறிவித்து அவரை நல்வழிப்படுத்தல்வேண்டும்." என்று எழுதியிருப்பதைத் தாங்கள் இன்னுஞ் சிந்தியாத தென்னையோ! என்றீர்.

அங்ஙனமெழுதிய நாவலரவர்கள் புத்தகவாயிலாகவும் பிரசங்கவாயிலாகவும் கண்டித்தமை நீர் அறியீர்போலும். பண்டிதர் சதாசிவப்பிள்ளையவர்களுடன் கூட அவர்கள் அச்சாபீசில் இருந்து திருக்கோவையாருண்மையும், பாரத ஆதிபருவ உரையும், கக வது கஉ வது நிகண்டும், திருவாதவூரடிகள்புராணமும் அச்சிடுவித்தகாலங்களில் நேரிற்கண்ட சில குறைகளை நேரிற்சொல்லியும், பிற இடங்களிலிருக்கும்போது தருமபரிபாலனத்தைக்குறித்துக் கடிதவாயிலாக அறிவித்துமிருக்கின்றார்கள். நீர் எடுத்துக்காட்டிய பண்டிதர் கடிதத்தின் பாகமு மதற்குச் சான்றாகும். நீர் இவையெல்லாம் அறிந்தவரே. அங்ஙனமாகவும் யாதும் அறியாதார் போன்று இங்ஙனம் வினவி உலகை மயக்க யத்தனித்தமை சாலவுநன்று. "நாம் இரகசியமாகக் குற்றஞ்செய்யும்போது, பிறர் நம்மைக்கண்டியாவண்ணம் தப்பிக்கொள்வோமாயினும், நம்முடையமனம் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்ளமாட்டோமே" எனத் தங்கள் குருவும் சொந்தக்காரருமாகிய நாவலரவர்கள் இரண்டாம்பாலபாடத்தில் எழுதியிருப்பதைச் சிந்தித்தால் இப்படி எழுதமாட்டீர். இனியாயினும் சிந்தித்து இப்படிப்பட்ட துறைகளிலிறங்கி மோசம்போகாதிருக்கும்படி ஞாபகப்படுத்துகின்றேன். பண்டிதர் சதாசிவப்பிள்ளையவர்களை ஒருவிஷயம்பற்றிக் கவனியாமலிருந்தபோது அவர்கள் தங்களுக்குத்தெரிவிக்க அதன்பொருட்டுத் தாங்கள் சென்னைக்கு வந்ததும், யாதுஞ்செய்யவழியில்லாமையால் வந்த அன்று சாயங்காலமே சிதம்பரத்திற்குப் புறப்பட்டதும் மறந்துவிட்டீர்களோ? தங்களுடைய சாமர்த்தியத்தை அப்பொழுது காட்டாமல் ஓடிப்போன தென்னையோ? தாங்கள் இவற்றையெல்லாம் சதாசிவப்பிள்ளையவர்களும் தர்க்ககுடாரதாலுதாரியவர்களும் இருக்கும்போது சொல்லியிருந்தால் அவர்களாலேயே உலகம் உண்மையறிந்து கொள்ளுமே. அப்போது சொன்னால் அவர்கள் தங்கள் செவியிற்பிடித்துக்கொண்டு தங்களுக்கு மாறாக உண்மையைப் பேசுவார்கள். பேசின் உலகம் தங்களை நம்பாது. ஆதலால் இவர்கள் இறக்கட்டும். இறந்தால், ௱௲000 ரூபாவுக்கு எசமானராவோம். ஆனால் நாம் எதைச்சொல்லினும் உலகம் நம்பும். அச்சமயத்தில் இல்லாதவற்றைச் சொல்லிப் பண்டிதரை இழுத்துவிடலாம். இதுவேதக்கயோசனை என்று அகங்கொண்டு வாளாவிருந்துவிட்டீர்களோ? அப்படியானால் "உன்னுள்ளத்திலே செல்வமிகுதியால் அகந்தை தோன்றுமாயின் உன்னின் மிக்காருடைய செல்வத்தையும், வறுமைமிகுதியால் துக்கந்தோன்றுமாயின், உன்னின் இழிந்தாருடைய வறுமையையும், நினை; நினைப்பாயாகில் அகந்தை துக்கங்கள் உன்னை எக்காலத்தும் அணுகாவாம்" என்று தங்கள் சொந்தக்காரரும் குருவுமாகிய நாவலரவர்கள் இரண்டாம்பாலபாடத்தில் எழுதியிருப்பதைச் சிந்தித்து அதனை நீங்கி இன்புறுவீராக. "செல்வமுதலியவற்றினாலே செருக்கடைந்து முன் உன்னோடு பயின்ற சினேகிதரை மறந்து விடாதே." என்று தங்கள்குரு இரண்டாம்பாலபாடத்தில் எழுதியிருக்கின்றார்களே. இதனைத் தாங்கள் சிந்தியாதபோது வேறியார் சிந்திக்கப் போகின்றார்கள்.

பண்டிதருக்கு நான்காம்பாலபாடம் போதிக்கவந்த தாங்கள், சதாசிவப்பிள்ளையவர்கள் ஒருவருக்கு ரு000 ரூபாவுக்கு வீடுவாங்கிக்கொடுத்த கதை, மற்றொருவருக்கு க000 ரூபா கொடுத்தகதை, மற்றொருவருக்குப் பீ ஏ வரை படிப்பிக்கப் பொருள்செலவழித்தகதை இன்னோன்ன பிறகதைகளைப் பண்டிதரோடு சிநேகிதமாயிருந்தகாலத்திலே சொல்லி இவைகளுக்குக் கணக்கேயில்லை என்று கூறினது உண்டா? இல்லையா? இரண்டாவதாக வந்த தாங்கள் பண்டிதருக்கெடுத்துக்காட்டிய நான்காம்பாலபாட விதிப்படி சதாசிவப்பிள்ளையவர்களுக்குப் புத்திகூறித் திருத்தாததென்னையோ? எப்படியாயினும் பழுதாகட்டும் அப்பொழுது தான் நம்மிடத்துக் குற்றங்காணினும் பேசாதிருப்பர், நம்மைக்கேட்பவருக்கு நாமும் நமக்கு முன்னிருந்தவரினும் பார்க்க நாமென்ன பெருங்குற்றஞ்செய்துவிட்டோம் என்று சொல்லித் தப்பிக்கொள்ளலாம் என நினைத்துத்தானோ வாளாவிருந்துவிட்டீர்கள்! உண்மைசொல்லுங்கள். தங்களை அறநெருக்கலாகாது.

கஎ. "நாவலரவர்கள் தருமபரிபாலனஞ் செய்தவர்களை ஒருவகையாகத்தாக்கியும்" என்றீர்.

தாக்குதற்குத்தடையுமுண்டோ? தருமபரிபாலனஞ்செய்தவர் என்று பண்டிதராலே சுட்டப்பட்டவர் நும்மாலே சுட்டப்பட்டவரன்று. இவ்விஷயத்தை நீர் உமது சாமர்த்தியத்தால் மறைக்க முடியுமா? தேசமறிய நடந்தசீரன்றோ? சிதம்பரவித்தியாசாலையைச் சதாசிவப்பிள்ளையவர்கள் மானேசர்களை நியமித்தும் நேரிலும் நடத்திவந்தார்கள். யாழ்ப்பாணவித்தியாசாலையை மானேசர்களை நியமித்தே நடத்திவந்தார்கள். சிதம்பரவித்தியாசாலையிலே ஒருகாலத்து முதலுபாத்தியாயராகவிருந்த ஸ்ரீமத் வித்துவசிரோமணி முருகேசபண்டிதரவர்கள் மூன்று நான்குமாசங்களாகச் சம்பளம்பெறாமையினாலே அன்னமிட்டார்க்குப் பணங்கொடுத்தல் தடையுற, அவர்கள் அன்னமிடமாட்டேம் என்று மறுத்துவிடப் பண்டிதரவர்கள் மானேசரிடம் பலமுறை வேதனங்கேட்டும் கொடுபடாமையால், சிவகாமியம்மை சந்நிதியிற் சென்று ஒருசெய்யுளால் தமது முறைப்பாட்டைச்சொல்லிப் பிரார்த்தித்துக்கொண்டு பள்ளிக்கூடத்தைவிட்டகன்றது உமக்குத்தெரியாது. இப்பொழுது. தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளும். அப்பாட்டுஞ் சொல்லுவார்கள். சொல்லாவிடின் கேட்டேனுமறிந்துகொள்ளும்.

யாழ்ப்பாணவித்தியாசாலைக்கு மானேசர்களாக இருந்தவர்கள். ஸ்ரீமத் சம்பந்தநாதமுதலியார் முதலிய பலர். சம்பந்தநாதமுதலியாரவர்கள், அவ்வித்தியாசாலையின் அபிவிருத்தியில் சிரத்தையில்லாதவர்கள் செய்த கலகத்தால் தமது பதவியை வேண்டாமென்று நீங்கிவிட்டார்கள் என்பதும், பின்னடாத்தினவர்கள் செய்தவை இவை யென்பதும் உமக்குத்தெரியாதாயினும் அவ்வித்தியாசாலையில் வேதனம் பெற்று உபாத்தியாயராக இருந்த பொன்னம்பலபிள்ளையவர்களுக்குத் தெரியும். அவர்களிடம் கேட்டறிந்துகொள்ளும். உபாத்தியாயர்கள் மாசந்தோறும் சொல்வதென்னை? தாங்கள் சுவாமிநாதபண்டிதருக்கு அனுப்பியகடிதத்தில் "யாழ்ப்பாணவித்தியாசாலையிலிருக்கலாமென்றால் அதிலிருக்கும் விருப்பந்தான் தெரியுமே" என்று எழுதியதன்கருத்தென்னை? ம-ா-ா-ஸ்ரீ த. கைலாசபிள்ளையவர்கள்

வித்தியாசாலை விஷயத்தைக்குறித்து ஒருவர்மீது வழக்குத் தொடுத்தற்குக் காரண மென்னை? என்றும் அவர்களிடம் கேட்டுத்தெளியும். இடையில் வந்த மானேசர்களை விட்டுக் கடையில்வந்த மானேசராகிய பொன்னம்பலபிள்ளையவர்களுக்குத் துணையாகக் கைலாசபிள்ளையவர்களையும் முன்கொண்டுவந்து நாவலரவர்களுக்குப் பின் சதாசிவப்பிள்ளையவர்களும் அவர்களுக்குப்பின் ம-ா-ா-ஸ்ரீ த. கைலாசபிள்ளையவர்களும், ம-ா-ா-ஸ்ரீ பொன்னம்பலபிள்ளையவர்களுந்தாமே என்று உண்மையை விடுத்து நும்முளம்போனவாறு கூறி யொழிந்தீர்.

இவ்விதம் மறைந்து நின்று சொல்லுபவர் தாம் எழுதுவித்த ட்றஸ்ட்டிப் பத்திரத்திற் கைலாசபிள்ளையவர்களைச் சேர்க்காததென்னையோ? ௰௧000 ரூபா சொத்துக்கு அவர்களும் அதிபதியாகலாமா! நமது ஏகாதிபத்தியம் எடுப்பட்டுப் போகாதா! அவர்கள் நாம்போகிற வழிகளை அடைத்துவிடுவார்களே! பின் நமது சங்கதி எல்லார்க்கும் வெளிப்பட்டுவிடுமே! என்று எண்ணிச் சேர்க்காதொழிந்தனர்போலும்.

கைலாசபிள்ளையவர்களைச் சேர்த்துச் சதாசிவப்பிள்ளையவர்கள் எழுதிவைத்த உயிலை றிச்சிஸ்டர்செய்யாமல் புதிய ட்றஸ்ட்டிப்பத்திரம் எழுதுவித்த உபாயம் யார்க்கும் தெரியாமற்போகாது என்று பேசிக்கொள்வாருமுளர்.

க௮. "தாங்கள் நாவலரவர்களுடைய புத்தகங்களை அச்சிட்டுப் பொருள் சம்பாதித்தற்கு எடுத்துக்கொண்ட உபாயம் தங்களுக்குப் பொருள் உபகரித்துக்கொண்டுவரும் தருமப்பிரபுக்களாகிய நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கும் மற்றை உலகத்தாருக்கும் தெரியாததன்று. நாவலரவர்கள் தருமங்களிலும் அவர்கள் அச்சிட்ட புத்தகங்களிலும் மிக்கபிரீதியுடைய நகரத்தார்கள் தங்கள் சாமர்த்தியத்தை இப்போது நன்றாயறிந்திருக்கிறார்கள்" என்றீர்.

சென்னபட்டணத்திலே முதன்முறை எழுதி றிச்சிஸ்டர் செய்த உயிலில் சிதம்பரத்திலுள்ள வித்தியாசாலையைச்சார்ந்த வீட்டு நிலத்துக்கு எல்லை கூறப்புகுந்து வடக்கெல்லை உமையாள் வீட்டுக்குத் தெற்கு என்று எழுதப்பட்டிருத்தலையும், இப்பொழுது எழுதிய ட்றஸ்ட்டிப் பத்திரத்தில் மதுரை மடத்து நிலத்துக்குத் தெற்கு என்று எழுதப்பட்டிருத்தலையும் பார்த்தவர்கள், தருமச்சொத்தை அபகரித்துப் பொருளீட்டும் உபாயம் உடையார் யாவர் என்று தாமே அறிந்து கொள்வார்கள். மதுரைமடத்துநிலத்தைச் சும்மா அநுபவித்துவரும்படி மடத்தார் கொடுக்க ஏறக்குறைய ௰௫ வருஷகாலம் அநுபவித்துவந்த நன்றியைச் சிறிதும் நினையாது அந்நிலத்தில் ஒருபாகத்தை வித்தியாசாலை நிலத்தோடு சேர்த்துச் சுவர் வைத்துக் கொண்டு அதனை வித்தியாசாலை நிலமாகக் கொண்டு, வித்தியாசாலை நிலத்துக்கு வடக்கெல்லை, மதுரைமடத்துநிலத்துக்குப் பின்னுள்ள உமையாள்வீடு என்று எழுதும்படிசெய்வித்தவர் தருமசீலராம். நாவலரவர்கள் புத்தகங்களைப் பிறரெல்லாம் அச்சிட்டுத் தமக்குப்பயன் படுத்த அவற்றை அச்சிட்டு நாவலரவர்கள் கருத்தில் இடையறாது பதிந்திருந்த தருமவிருத்திக் குபயோகப்படுத்தும் பண்டிதர் அதர்மசீலராம். இதனை இத்தனை நுணுக்கமாகக்கண்டுபிடித்து எழுதுவிக்கவல்லவர் நும்மை அம்பலத்திலகப்படுத்திக்கொண்ட ஆசையரன்றி வேறுயாவர்?

"ஐயா அவர்கள் (நாவலரவர்கள்) சொந்தக்காரன் என்றும் நொத்தாரிசுவுக்கு (நாவலரவர்கள் மருகரும் மாணாக்கரும் வித்துவசிரோமணியுமாகிய ஸ்ரீமத் ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்களுக்கு) மருமகன் என்றுஞ் சொல்லிக்கொண்டு நகரத்தார் வித்தியாசாலையில் இருந்து படிப்பித்தல் மரியாதையல்ல" என்று எழுதிப் பண்டிதருக்குக் கடிதம் விடுத்த பொன்னம்பலபிள்ளையவர்கள் அப்பொழுது தம் மாலே குறைவுடையவராகக் கருதப்பட்ட நகரத்தாரை, இப்பொழுது "நமது நாட்டுக்கோட்டை நகரத்தார் என்று தொடர்புகாட்டியும், நாவலரவர்கள் தருமத்திலும் அவர்கள் புத்தகங்களிலும் மிக்கபிரீதியுள்ளவர்கள்" என்று ஆசைகாட்டியும் எழுதிய வஞ்சகச்சூழ்ச்சியை இனி அந்நகரத்தார்கள் வெளிப்படவுணர்ந்து இவர் தருணத்துக்குத்தகப் பேசிக் காரியமுடித்தலிற்றமக்கிணையில்லாப் பெரியவரென்று தாமேயறிந்து கொள்ளுவார்கள். பிறர் விளக்கவேண்டியதில்லை.

௧௧. "சுப்பிரமணியவித்தியாசாலையைத் தங்களால் நடத்த முடியாவிட்டால் தங்களுக்குப் பொருளுபகரித்துவருபவர்களும், பெருந்தொகைப்பொருளைவைத்து வாழையடிவாழையாய்ப் பலதருமங்களைச் செவ்வே பரிபாலித்து வருபவர்களுமாகிய அந்நகரத்தார்களிடம் அதற்குரியமூலதனத்தோடும் ஒப்பித்துவிடலாகாதா"? என்றீர்.

இப்பொழுது காவிரிப்பூம் பட்டினத்தைச்சார்ந்த மேலையூரிலே சிவராஜயோகமடத்து நிலத்திலே அறுபத்துமூவர்வித்தியாசாலை ஒன்று நடைபெறும்படிசெய்து அதற்குவேண்டுங்காரியங்களும் நடத்திவரும் பண்டிதர் திருச்செந்தூர்வித்தியாசாலையைநடத்தமுடியாமல் தங்களிடம் ஒப்பிக்கவரவில்லை; ஒப்பித்தற்கு இடம் கேட்கவுமில்லை; நாங்கள் இடம்காட்டவேண்டியதுமில்லை. தங்களிடம் ஒப்பித்துவிட்டால் தங்களால் நிகழும் இடையூறின்றிச் சீக்கிரம் விருத்தியடைந்து நாவலரவர்கள் கருதியபயனைக் கொடுக்கும் என்னுங் கருத்தால் அவ்வாறு கூறினமென்றுணர்க. இப்பொழுது "வித்தியாபிமானிகட்கு விக்கியாபனம்" என்னும் பத்திரிகை அங்ஙனம்கூறுதற்கு மிடந்தந்திலது. அதுபின்னர்க்காட்டுதும்; ஆண்டுக் காண்க.

இனி, தாங்களும் சதாசிவப்பிள்ளையவர்களும், சிவபுரியைச்சார்ந்த இரண்டு வாய்க்காற்பாய்ச்சலுள்ள விளைநிலம் ஒன்று உளதென்றும், ௫0,00 ரூபா வாகவிலைப்படப்போகிறதென்றும், அதனை வாங்கும்படியும், பண்டிதரிடம் சொன்னதும், அவர் சிலகாரணத்தை உத்தேசித்து மறுத்ததும், நுமக்குப் பிரியமில்லையானால் இப்போது பணத்தைக்கொடுத்து வாங்கிவிடும், நாங்கள் பின் பணந்தந்து பெற்றுக்கொள்ளுகின்றோம் என்றதாலே, பண்டிதர் செட்டியாரிடம் பணமிருக்கின்றது. அவருக்கெழுதியறிந்து சொல்லுகிறேன் என்று சொன்னதும், ம-ள-ள-ஸ்ரீ வீரசிங்கம் அவர்களையும் பண்டிதரையும் சதாசிவப்பிள்ளையவர்கள் ஆஞ்ஞைப்படி அழைத்துச்சென்றுவிளைநிலங்காட்டினமையும் ஞாபகத்திலிருக்குமே. இங்கே கூறியசெட்டியார் தாமே பண்டிதருக்குப் பொருளுபகரிப்பவர் என்று தங்களாற் சுட்டப்பட்டவர். அவரிடத்திற்றானே சுப்பிரமணியவித்தியாசாலை மூலதனம் இருக்கின்றது. புதிதாய் ஒப்பித்தல் எங்ஙனம்? அவர்கள் பெருந்தொகைப்பொருள்வைத்து வாழையடிவாழையாய்ப் பலதருமங்களைச்செவ்வேசெய்தலைப் பதினெட்டுவருடகாலமாக அறிந்திருக்கும் பண்டிதருக்குத் தாங்கள் தெரிக்கப் புகுந்தது, ஒரு தீபம் அக்கினி

தேவனைப் பிரகாசிப்பிக்கக் கருதினாற்போலும். தாங்கள் இப்பொழுது நகரத்தாரை எவ்வகை புகழினும் அதனை உண்மையெனக்கருதார். பண்டிதர்மீது கொண்டபகைமையால் மித்திரபேதஞ்செய்தற்கென்றே கருதுவர். அதற்கு உமதுகடிதமே போதியசான்று. ஆதலால் உமது கருத்து எவ்வாற்றானு நிரம்புமாறில்லையென்றுணர்க.

௨௦. “நாவலரவர்கள் வித்தியாசாலைத் தருமத்தைச் செவ்வே நடத்த மாட்டாதவர்கள் என்று தங்களாற் குறிக்கப்பட்ட அவ்வித்தியாசாலையாரிடம் தங்கள் வித்தியாசாலையை ஏன் ஒப்பித்துக் கெடுக்க எண்ணுகின்றீர்கள்” என்றீர்.

நாவலரவர்கள் தருமபரிபாலனஞ் செய்கின்றவரென்று பண்டிதராலே குறிக்கப்பட்டவர் பொன்னம்பலபிள்ளையே. பண்டிதர் நாவலரவர்கள் புத்தகம் அச்சிடுதலைக் குறித்துப் பேசித்திரிகின்றவரும் அவரே. அவர், சுவாமிநாதபண்டிதருக்குப் பணங்கொடுத்து உபகாரஞ் செய்யும் நகரத்தாருக்கு அப்பண்டிதர் சிதம்பரவித்தியாசாலைக்கு வருவாயாயுள்ள புத்தகங்களை அச்சிட்டு விற்றுத் தமையனார்வாங்கிய கடன்முதலியவற்றின் பொருட்டுச் செலவு செய்கின்ற உபாயத்தைச் செவ்வே தெரிவித்துவிட்டார். இவருபாயத்தை அவர்கள் நன்குணர்ந்து கொண்டு போய்விட்டார்கள். இனிப் பண்டிதருக்கு யார் பொருளுபகரிப்பார்? வித்தியாசாலை எப்படி நடைபெறும்? பொன்னம்பலபிள்ளையவர்கள் வழக்கெடுத்தால் பண்டிதர் பக்கத்துக்குப் பணச்செலவுசெய்பவர் யார்? பிள்ளையவர்கள் ௩௧௦௦௦ ரூபா விலைமதிப்புள்ள வித்தியாசாலைச் சொத்துக்கதிபதி. “தச்சனடிக்கின்றான் கடாவுழுகிறது” என்றபடி பிள்ளையவர்களுக்குக் கஷ்டமென்ன? ௪௦௦௦ ரூபா முதலுள்ள வித்தியாசாலையை நடத்தும்பண்டிதர் பணச்செலவுக்கென்செய்வார்? இவையெல்லாமிங்ஙனமிருத்தலால் பிள்ளையவர்களிடத்தில் ஒப்பித்துவிட்டால் எவ்வகை இடையூறும் கஷ்டமும் வாராவெனப் பண்டிதர் கருதினமையின் வாழ்விக்க எண்ணினார்கள் என்று கொள்க. இடையில்வந்த மானேசர்களே நாவலரவர்கள் வித்தியாசாலைகளைச் செவ்வே நடத்தவில்லையென்று பண்டிதர் கூற, நீர் கடையில்வந்தவரும் அவ்வியல்பினர் என்கின்றீர். ஆதலால் இனிப் பண்டிதர் அவரிடம் ஒப்பிக்கக்கருதார் என்க.

௨௧. “உங்களுக்கு அவர்கள் தருமத்தை நடத்த ஆசையிருந்தால் அதற்கு வேண்டிய முயற்சிசெய்து பாருங்கள்” என்றீர்.

இதுவும் நும்மனச்சான்றுக்கு விரோதமாகக்கூறினீர் என்பது நுமக்குநன்கு தெரியும். பொன்னம்பலபிள்ளை காரைக்குடிநகரத்தார் வித்தியாசாலையில் இருத்தல் மரியாதையன்றெனக்கருதிச் சிதம்பரவித்தியாசாலைக்குவரநினைந்து யாரிடம்யோசனைகேட்டார்? பண்டிதரிடத்தன்றோ? அதனை மறுக்க அவரால்முடியுமோ? அவர் பண்டிதருக்கு அனுப்பிய கடிதம் சாட்சிபகர்கின்றதே. அவரைச்சிதம்பரவித்தியாசாலைக்குவரும்படி யோசனை சொன்னவரும், வித்தியாசாலையில் உபாத்தியாயராக இருந்துகொண்டு சதாசிவப்பிள்ளையவர்களிடம் மாசமொன்றுக்குவேதனம் எவ்வளவுகேட்கவேண்டும் என்று யோசனைகேட்டபோது ௫௦ ரூபாவும் புத்தகம்விற்றற்குரியகமிஷனும் கேட்கவேண்டும் என்றுயோசனைசொன்னவரும், பிள்ளையவர்கட்கே

அவ்வித்தியாசாலையை நடத்துமதிகாரத்தைக் கொடுத்தல்வேண்டுமென்று சதாசிவப்பிள்ளையவர்களுக்குப் பலநாட் போதித்தவரும், தாமும் ஒருசாட்சியாகக் கைச்சாத்திட்டுப் பிள்ளையவர்கட்கேமுன் உயில் எழுதுவித்துவைத்தவரும்,பண்டிதரான்றோ? நாவலரவர்களிடத்துச் சதாசிவப்பிள்ளையவர்களோடு ஒருசாலைமாணாக்கராகக் கல்விகற்றவரும்,தமது மாதுலரிடம்சொல்லி யாழ்ப்பாணவித்தியாசாலையின்பொருட்டு ஒரு நிலத்தைத் தருமசாசனஞ் செய்வித்தவரும் ஆகிய ம-ள-ள-ஸ்ரீ ஆறுமுகச்செட்டியாரவர்கள் சென்னைக்குவந்தபோது சதாசிவப்பிள்ளையவர்கள் தாம் எழுதிவைத்திருந்த உயிலை மேற்படி செட்டியாரவர்களுக்குக் காட்ட அவர்கள் பார்த்துக்கொண்டு இதனைக் குப்பையிற்கொண்டுபோய் எறியுங்கள். நாவலரவர்கள் சிவபதமடைந்தபின் தங்களால் நியமிக்கப்பட்ட மானேசர்கள் யாழ்ப்பாணவித்தியாசாலையை நாளுக்குநாள் விருத்திகெடச் செய்தமை நன்குதெரிந்திருந்தும், சிதம்பரவித்தியாசாலைத்தருமத்தை நடத்துதற்குத் தனியே பொன்னம்பலம்பேரில் உயில் எழுதலாமா? இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள ஐந்துபேரைத் தெரிந்து அவர்கள்பேரில் உயில் எழுதி றிச்சிஸ்டர் செய்யவேண்டும்; இதனை றிச்சிஸ்டர் செய்ய வேண்டாம். நான் சிதம்பரம் போய்ப் பொன்னம்பலத்தைக் கண்டு உன்பேரில் உயில் எழுத எப்படி நீ சம்மதித்தாய்? என்று கேட்டு நேரிற் கண்டித்துப்பேசி ௫ பேரைச் சேர்க்கவேண்டும் என்று சொல்லிவிட்டுப் போகிறேன். அப்படியேசெய்யுங்கள் என்று சதாசிவப்பிள்ளையவர்களுக்குச் சொல்லிவிட்டுச் சிதம்பரப்போய்ப் பிள்ளையவர்களைக்கண்டு அவ்வாறு கண்டித்துப்பேசி ஐந்துபேரைச்சேர்த்து உயில் எழுதவேண்டும என்று வற்புறுத்திச்சொல்லிவிட்டு யாழ்ப்பாணம் போயினார்கள். அதுகேட்ட பொன்னப்பலபிள்ளையவர்கள், சென்னையிலே சதாசிவப்பிள்ளையவர்கள் அச்சாபீசில் இருந்த சுவாமிநாதபண்டிதருக்குக் கடிதம் அனுப்பிச் சிதம்பரத்துக்கழைத்து, சென்னையில் சதாசிவப்பிள்ளையவர்களுக்கும் ஆறுமுகச்செட்டியாரவர்களுக்கும் இடையில் உயிலைப்பற்றி நிகழ்ந்த பேச்சு யாதென்றுவினவியபோது, உயிலை ஒருவர் பேருக்கு எழுதிவைத்தல் முற்றுந் தவறென்றும் ஐந்துபேருக்கே எழுதவேண்டும் என்றும் வற்புறுத்திச் செட்டியாரவர்கள் சொல்லிச் சிதம்பரத்தில் தங்களையுங் கண்டித்துவிட்டுப் போகிறேன் என்று கூறி வந்தார் என்று விடையிறுக்க, அதுகேட்டபொன்னம்பலபிள்ளையவர்கள், சதாசிவப்பிள்ளையவர்கள் கருத்தென்னை யென்று பண்டிதரிடம் வினவ, இப்பொழுது அவர்கள் கருத்தும் மாறித்தானிருக்கிறது எப்படிச்செய்வார்களோ தெரியவில்லை என்று சொல்லக் கேட்டு, இடியேறுகேட்ட சருப்பம்போல மலங்கிக் கலங்கி மயங்கித்தியங்கி நெடுநேரஞ் சென்றபின் ஒருவாறு தெளிந்து, செட்டியார் என்னிடமும் ஐந்து பேருக்கே உயில் எழுத வேண்டும் என்று சொல்லிப்போயினார்கள். இதற்குயாது செய்வேம் என யோசித்துப் பண்டிதரைநோக்கி என்பேரில் இவ்வளவுகாலமும் உயில் எழுதிவைத்திருந்து இப்பொழுது ௫ பேரைச்சேர்த்து எழுதினால் யான் யாதோ குறைசெய்தபடியால் என்மீது நம்பிக்கையின்றி அவ்வாறுசெய்தார்கள் என்று என்னை உலகம் பழிக்கும். பொருட்பாதுகாப்புக்குத்தானே அவ்விதஞ் செய்யக் கருதுகின்றார்கள். என்பேரில் எழுதியபடி றிச்சிஸ்டர் செய்துவிடட்டும். யான் வருடந்தோறும் ௫ பேருக்குக் கணக்கு ஒப்பித்து வருகின்றேன் என்று ஒருபத்திரம் எழுதி றிச்சிஸ்டர் செய்துவிடுகிறேன். அப்படிச்செய்யின் உலகம்

என்னைப்பழியாது. அவ்வாறுசெய்ய உடன்படாமல் அவர்களே டு பேருக்கு உயில் எழுதிவைத்தால் யான் இத்தேயம்விட்டோடிவிடுவேன். என்னை நீவிர் பின்பார்க்கமாட்டீர்கள் என்று பிள்ளையவர்கள் சொல்ல அதனைக் கேட்டு, அப்படித் தாங்கள் செய்வீர்களாகில நாம் அவர்களிடம் விஷயத்தை எடுத்துச் சொல்லி எழுதிய படி உயிலை றிச்சிஸ்டர் செய்விக்கின்றோம்; தாங்கள் சொல்லியபடி செய்துவிடல் வேண்டும் என்று உறுதிமொழிகேட்டுக்கொண்டு சென்னைக்குவந்து, சதாசிவப்பிள்ளையவர்களுக்கு இவைகளெல்லாவற்றையும் எடுத்துச் சொல்லி உடன்படுத்தி, உடனே உயிலை றிச்சிஸ்டர் செய்வித்து விட்டவரும் பண்டிதரேயன்றோ? நாவலரவர்கள் தருமத்தை நடத்த விருப்பமிருந்தால் அல்லது பொன்னம்பலபிள்ளையவர்கள் நடத்துவதில் விருப்பமில்லையானால் பண்டிதர் இவ்வாறெல்லாஞ் செய்வார்தாமோ? சிவபுரி. ஸ்ரீ. கலியாணசுந்தரப்பிள்ளையவர்களே இவ்வுண்மைகளையெல்லாம் பொன்னம்பலபிள்ளையவர்களிடம் விசாரித்திருப்பீர்களானால் இப்படி எழுதமாட்டீர்கள். விடிந்தது மிருண்டதுந் தெரியாத தங்கள்மேற் குறை யாது?

பின்பு பொன்னம்பலபிள்ளையவர்கள் தாம் பண்டிதருக்குச் சொல்லிய வாக்குத்தத்தத்தின்படி டு பேருக்கு வருடந்தோறும் வித்தியாசாலைவாவது செலவு இருப்புக்கணக்குச் செலுத்துவதாகப் பத்திரம் எழுதி றிச்சிஸ்டர் செய்யவில்லை. சதாசிவப்பிள்ளையவர்கள் பண்டிதரிடம் நீர் சொல்லியபடி இன்னும் என் பொன்னம்பலத்தைக்கொண்டு செய்விக்கவில்லை என்று கேட்டுவந்தார்கள், செய்வார்கள் என்று பண்டிதர் பதிலளித்துவந்தார். அதை நிறைவேற்றுவித்தற்குமுன் தர்க்ககுடாரதாலுதாரியவர்கள் விஷயம்பற்றிப் பண்டிதர்க்கும் பொன்னம்பலபிள்ளையவர்கட்கும் பகைநேர்ந்து இருவரும் பிரிந்துவிட்டார்கள்.

அது அப்படியிருக்க, உயில் றிச்சிஸ்டர் செய்யப்பட்டபின் பொன்னம்பலபிள்ளையவர்கள் தமையன்மகனையும் மைத்துனன்மகனையும் யாழ்ப்பாணத்தினின்று சிதம்பரத்திற்கு வருவித்துத் தன்னுடன் இருத்திக்கொண்டார்கள். அதற்குடன்பாடின்றிச் சதாசிவப்பிள்ளையவர்கள் பொன்னம்பலபிள்ளையவர்களை நோக்கி நீ இப்படிச்செய்தால் உலகம் உன்மீதும் என்மீதும் பெருங்குறை சொல்லும். எனது தமையன்மகன் தன்புத்திரர் இருவர் படிக்கவேண்டியிருந்தலாற் சென்னைக்கு அனுப்பலாமா என்று கேட்டபோது யாழ்ப்பாணத்திருந்து படித்தாற்போதும் என்று தெரிவித்துத் தடுத்துவிட்டேன். நீ உயில் றிச்சிஸ்டர் செய்தவுடன் இவ்வாறு ஆரம்பித்தால் உலகத்தார் என்னகுறைதான் சொல்லமாட்டார்கள்! நானிருக்கும்போது என்னைக்கேளாமல் நீ ஒன்று செய்யலாமா! என்று சொல்ல, பிள்ளையவர்கள் பெருங்கோபங்கொண்டு சதாசிவப்பிள்ளையவர்களோடு பேசாதிருந்தார்கள்சிலநாள். சதாசிவப்பிள்ளையவர்கள் அதுகண்டு பலயோசனைபண்ணித்தெளிந்து பொன்னம்பலபிள்ளையவர்களுக்கு எழுதின உயில் தள்ளுப்படுதற்கேதுவான சில காரியஞ்செய்து கைலாசபிள்ளையவர்களையுஞ்சேர்த்து ஒரு உயில் எழுதி அந்தரங்க அபிமானிகள் சிலருக்குக்காட்டி இப்பொழுது றிச்சிஸ்டர் செய்தால் பொன்னம்பலம் எப்போதும் வருத்தப்படுவான். மரணகாலத்து றிச்சிஸ்டர் செய்துவிடுவேன் என்று சொல்லி அதனைச் சாவதானமாகவைத்திருந்தார்கள் என்றும், இப்பொழுது கைலாசபிள்ளையவர்களை நீக்கி ட்றஸ்ட்டிப்பத்திரம் ஒன்று எழுதப்பட்டு வெளிவந்

திருக்கின்றது என்றும்,யாழ்ப்பாணத்துக்"குருசந்திரோதயம்"என்னும் பத்திரிகையில்,சதாசிவப்பிள்ளையவர்களுக்கு இறக்கிறதற்கு ௬0 நாளின்முன் அறிவுகலங்கிவிட்டதென்றும் அசைவயசு சென்று விட்டதென்றும் ஆதலால் அந்த ட்றஸ்டிப்பத்திரம் தெளிந்த அறிவோடு அவர்களால் எழுதப்படவில்லை என்றும், அவருடையசொத்துகளை யாராவது விற்றாலும் வாங்கினாலும் செல்லாதென்றும் விளம்பரஞ் செய்யப்பட்டிருக்கின்றது என்றும், சதாசிவபிள்ளையவர்கள் அப்பத்திரத்தில் எழுதியிருக்குங் கையெழுத்தையும் நல்லறிவோடிருக்குங்காலத்தில் எழுதிய கடிதங்களையும் ஒத்துப்பார்த்தால் பத்திரக்கையெழுத்தைச் சதாசிவப்பிள்ளையவர்கள் கையெழுத்தென்று எவ்வாற்றானும் எவரும் நம்பமாட்டார்கள் என்றும் உலகினர் சொல்லுகிறார்கள். "உலகம் பலவிதம்" "ஊரை உலைமூடியால் மூடலாமா" நிற்க.

௨௨. "சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலையை நூதனமாகக் கட்டிமுடித்த அருமையையும் ***** தாங்கள்நன்றாய் அறிவீர்கள். இப்பொழுது அதனைமறந்துவிட்டால், தாங்கள் சிலவருஷங்களின்முன் மேற்படி சதாசிவப்பிள்ளையவர்களுக்கு எழுதிய கடிதத்தை நினையுங்கள். அதிலே தாங்கள் செவ்வே உண்ணுமல் உடாமல் இரசமுஞ் சாதமும் நான்குமுழ வேட்டியும் உண்டுடுத்துக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருள்" "என்பதுமுதலியனவாகச் சதாசிவப்பிள்ளையவர்களைப் புகழ்ந்து அவர்களுக்குக் கடிதம் எழுதியிருப்பது ஞாபகத்தில் வரும். அதனையும் மறந்துவிட்டால் ஞாபகார்த்தமாக அக்கடிதத்தைத் தங்களுக்காவது பிறருக்காவது காட்டுதற்கு யாதுந்தடையில்லை. இப்படித் தங்களாலும் பிறராலும் மதிக்கப்பெற்ற புண்ணிய புருஷராகிய சதாசிவப்பிள்ளையவர்களைப்பற்றி என்னசொல்லப்போகின்றீர்கள்" என்றீர்.

சிதம்பரவித்தியாசாலையை நூதனமாகக்கட்டிய விஷயத்தில் எமக்கு அளவில்லாத சந்தோஷமே. சதாசிவப்பிள்ளையவர்கள் காலத்திலே அது முடியும்படி அவர்களை ஊக்கி முடிப்பித்த பண்டிதர்மீதும் எமக்குச்சந்தோஷமே. யாழ்ப்பாணவித்தியாசாலையைக் கைலாசபிள்ளையவர்களிடத்தில் சதாசிவப்பிள்ளையவர்கள் ஒப்பித்தவுடனே அவர்கள் * கொழும்பு முதலிய இடங்களுக்குத் தண்டற்காரர்களை அனுப்பிப் பொருளைத் திரட்டி அவ்வித்தியாசாலையை அதற்குரிய தானத்திலே சிறந்தகட்டடமாகக்கட்டுவித்து முடிக்கமுயன்றார்கள். அதுகண்ட பொன்னம்பலபிள்ளையவர்கள் தாமும் சிதம்பரவித்தியாசாலையைக் கட்டுவியாதொழிந்தால் தமக்குக் குறைவெனக்கருதியும் சதாசிவப்பிள்ளையவர்கள் இருக்கும்போது அவர்கள் பொருள்கொண்டு கட்டுவித்தால் அவர்கள் கட்டுவித்ததாய் முடியும். அவர்கள் அடைந்தபின் கட்டுவித்தால் தாம் கட்டுவித்ததாக முடியும் என்று அதனைத் தவிர்ந்து, கைலாசபிள்ளையவர்கள் வித்தியாசாலையைக் கட்டி முடித்தார்கள். பொன்னம்பலபிள்ளையவர்கள் சேக்கிழார் கோயிலைக்கட்டி முடித்தார்கள் என்று உலகஞ்

* பண்டிதர் கொழும்பிலே இராமலால் சத்திரத்தில் தண்டுதற்குப் போயிருந்த ம-௱-௱-ஸ்ரீ வைத்தியலிங்க வுபாத்தியாயரைக்கண்டபோது அவர் வேண்டுகோளுக்கிசைந்து ம-௱-௱-ஸ்ரீ நாச்சியப்பசெட்டியாரவர்களுக்கு அவ்விஷயத்தை எடுத்துச் சொல்லினர். அவர் நகரத்தாருக்குச் சொற்றனர் அதனாலும் ஒருதொகைசேர்ந்தது.

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

சொல்லட்டும், பிற்காலத்தில் வித்தியாசாலையையும் கட்டிமுடிப்பேம். அப்பொழுது பொன்னம்பலபிள்ளையவர்கள் இரண்டு கட்டடம் கட்டிமுடித்தார்கள் என்று உலகம் விசேடமாகப் புகழட்டும் என்று கருதிச் சேக்கிழார் கோயில் கட்டவேண்டும் என்றும், அதற்குப் பொருள் உபகரித்தல் வேண்டும் என்றும், பண்டிதருக்குக் கடிதமூலமாகத்தெரிவித்தார்கள். அக்காலத்தில் கைலாசபிள்ளையவர்களும் தாம் கட்ட ஆரம்பித்த வித்தியாசாலை விஷயமாகப் பண்டிதருக்குக் கடிதம் அனுப்பினார்கள். பண்டிதர் அதனைப் பொன்னம்பலபிள்ளையவர்களுக்குத் தெரிவித்தார். அவர்கள், 'கைலாசபிள்ளையவர்கள் தாம் தொடங்கிய கருமத்தை எவ்வாற்றானும் அத்தேயத்தார் உதவிகொண்டு முடித்துவிடுவார்கள்.' சேக்கிழார்கோயிலுக்கு உதவுவார் பிறரைக்காணேம். நாமே முயலவேண்டும். ஆதலால் இப்போது தம்மால் இயன்றதொருதொகை அனுப்பவேண்டும். நான் ஊருக்குப்போக வெண்ணியிருக்கின்றேன். போனபின் கைலாசபிள்ளையைக்கண்டு குறைநினையாதபடி சொல்லிவிடுகிறேன் என்று பதிலளித்தார்கள். அதுகண்ட பண்டிதர் ௧௫0 ரூபா உடனே அனுப்பினார். அப்பணத்தில் ௧00 ரூபா செலவுசெய்து சேக்கிழார் கோயிலுக்கு அடிநிலை பாரிக்கப்பட்டது. பின்பு யாதாமொன்றுஞ் செய்யவில்லை. ௫0 ரூபாவுக்குச் சூளைவைப்பிக்கப்போகின்றேன் என்று பொன்னம்பலபிள்ளையவர்கள் பண்டிதருக்குச் சொல்லியிருந்தார்கள். பின் அதுவுநடக்கவில்லை.

பண்டிதர் காசியாத்திரை செய்தபோது கற்கத்தாவிலிருந்து சேக்கிழார் கோவிலுக்காக ௨00 ரூபா சதாசிவப்பிள்ளையவர்களுக்கு அனுப்பினார்கள். அதனை அவர்கள் பெற்று அப்பொழுது நடத்திய ஒருவியாச்சியத்தின் பொருட்டுச் செலவுசெய்துவிட்டார்கள் என்றும், கோவில் கட்டும்போது கொடுக்கலாம் என்று சொன்னார்கள் என்றும், பண்டிதர் கேள்விப்பட்டும் அதுபற்றி ஆக்ஷேபியாமல் பின்னிகழ்ச்சியை எதிர்பார்த்திருந்தார். இருக்கும்போது பொன்னம்பலபிள்ளையவர்கள் மாதுலராகிய தர்க்ககுடாரதாலுதாரியவர்கள் விஷயமாகப் பண்டிதருக்கும் பிள்ளையவர்கட்கும் பகைநேர்ந்துவிட்டபடியால், கோயில்வேலையும் நிறுத்தப்பட்டது. பின்னும் அது கட்டப்படுமோ என்று மூன்றுவருஷகாலம் எதிர்பார்த்தும் கட்டப்படாமையால் அப்பணத்தைச் சதாசிவபிள்ளையவர்களிடம் வட்டியோடுபண்டிதர் வாங்கி ஒருசெட்டியாரிடம் கொடுத்து வைத்திருக்கின்றார்.

இனி, சிதம்பரவித்தியாசாலையைச் சதாசிவப்பிள்ளையவர்கள் காலத்திற்றானே அவர்களைக்கொண்டு கட்டுவித்து முடிப்பித்தல்வேண்டுமெனப் பண்டிதர் கருதி அவர்களை நோக்கித் தாங்கள் தேடிய பொருள்கொண்டு தங்கள் காலத்திலேயே வித்தியாசாலையைக் கட்டிக் கண்ணுறப்பார்த்துச் சந்தோஷமடையாமல் வாளா இறந்துபோதல் தங்களுக்குச் சிறப்பா என்று பல நியாயங்களை எடுத்துச் சொல்லி அவர்களை ஊக்கிவிட்டனர். அவர்களும் அதற்கு உடன்பட்டுக் கட்ட ஆரம்பித்தார்கள். ௫00 ரூபா செலவுசெய்து அத்திபாரம் போட்டபின், பண்டிதர் சொல்லைக்கேட்டு ஆரம்பித்துவிட்டார்களே இதனை இப்போது தடுத்தற்கு வேறு வழியில்லையே யென்றும் இவ்வாறு சொன்னாற்றடுக்கலாம் என்றும் சூழ்ச்சிமேற்கொண்டவர்கள் சொல்லைக்கேட்டோ? தாமாகவோ தெரியாது இக்கட்டடத்திற்குக் கவண்மெண்டார் நன்கொடைப்பணமும் பெறவேண்டு மென்று எண்ணி

இரண்டு மூன்று வருஷகாலம் அவர்களிடம் பணங்கேட்டுக்கொண்டு அது கொடுபடாமையால் வேலையை நிறுத்திவிட்டார்கள்.

பின் கவண்மெண்டார் ௲000 ரூபா கொடுக்கவுடன்பட்டு முன்போடப்பட்ட அத்திபாரம் பெலமற்றதென்றும் அதனைப்பிரித்துப் பெலமாய்ப் போடவேண்டும் என்றும் சொன்னார்கள். ௲000 ரூபா வரும்போது ௫00 ரூபா செலவழித்துச் செய்த அத்திபாரத்தைப் பிரித்துப் பெலமாய்ப்போட்டுக் கவண்மெண்டாருடைய நல்ல எண்ணத்தை ஏன் நிறைவேற்றப்படாது. பின் கட்டடக்கணக்கையும் வித்தியாசாலைத் தருமச்சொத்துகளின் வரவு செலவு இருப்புக்கணக்குகளையும் அவர்கள் கேட்பார்கள் என்று கருதியோ! தாம்போட்ட அத்திபாரம் தப்பாய்விட்டது என்று சதாசிவப்பிள்ளையவர்கள் தம்மைக் குறைவாக எண்ணுவார்கள் என்று கருதியோ அதனைப்பிரிக்கவுடன்படாமற் செய்தார்சளத்திபாரம் போட்டவர்கள். அதனால் கவண்மெண்டார் தாம் கொடுக்கக்கருதிய பொருளை உபகரித்திலர்.

பள்ளிக்கூடத்துக்குத் தக்க மூலதனம் இல்லாவிடின் கவண்மெண்டார்கொடுத்த ௲000 ரூபாவையும் வேண்டாமென்பாரா? ௲௧000 ரூபா முதலுள்ள வித்தியாசாலையை ௲000 ரூபாவுக்கு ஆசைப்பட்டுக் கவண்மெண்டாருக்குத் தொடர்பு வைத்தால் அவர்கள் ஒருபோது வித்தியாசாலை வரவுசெலவு இருப்புக்கணக்கை வருடந்தோறும் ஒப்பித்தல் வேண்டும் என்று கேட்டால் நாம் தடைசொல்ல முடியாதே என்று கருதி வித்தியாசாலைக்குவந்த ௲000 ரூபாவையும் வீணே இழக்கச் செய்துவிட்டுச் சுவாமிநாதபண்டிதர் வித்தியாசாலைவரும்படிக்குக் கேடுசெய்கின்றார் என்று கூறும் பிள்ளைமதி என்னமதி?

இந்த வித்தியாசாலையைச் சதாசிவப்பிள்ளையவர்கள் காலத்துக்குப்பின் அவர்கள் பொருள்கொண்டு கட்டுவித்துத் தாமே கட்டுவித்ததாக உலகத்துக்குக்காட்டிப் பொய்ப்புகழ் சம்பாதிக்க விடவில்லை யென்பதனாற் பண்டிதர்மீது பிள்ளையவர்கட்குப் பெருங்கோபமுண்டு. அதனைப்புறத்தே சிறிதும் காட்டார்கள். ஆயினும், "பூசினிக்காயெடுத்தவனைத் தோளிலே தெரியும்" என்றபடி பண்டிதரிடத்தில்லாதகுறைகளைக் கற்பித்துச் சொல்லுதலினாலும் எழுதுதலினாலும் அஃதுண்மை எவரும் இலகுவில் அறிந்துகொள்ளலாம்.

இங்கே கூறிய சரிதத்தால் வித்தியாசாலையை நூதனமாகக் கட்டி முடிக்கச் சதாசிவப்பிள்ளையவர்களை ஏவிய பண்டிதரும் அருமையுடையவரே யென்று பொன்னம்பலபிள்ளையவர்களாலும் பாராட்டப்படும் பான்மையரே.

உயர்தரக் கல்வி கற்கும் மாணக்கர்கட்கு அன்னவஸ்திரமுதலியன உபகரித்துக் கல்விகற்பிக்க ஏற்பாடு செய்துவைத்த நன்மையும் பண்டிதரால் விளைந்ததே. எங்ஙனமெனின், அதுவுங் கூறுதும்.

தர்க்ககுடாரதாலுதாரியவர்கள் சிதம்பரத்திலுள்ள சொர்க்கபுரமடத்திலே "சித்தாந்தவித்தியாசாலை" நடாத்துதற்கு முயன்று, நாம் பிள்ளைகட்கு வேதனமின்றிச் சித்தாந்தநூல் படிப்பிக்கின்றோம். தங்களுக்கும் அப்புண்ணியத்திற் பாதி சேரும்; தாங்கள் எனக்குப் போசனத்துக்கு வேண்டுஞ் செலவுக்குமாத்திரம்

பொருள்கொடுக்கவேண்டும் என்று பண்டிதரிடம் கேட்க, அவர் உடன்பட்டுக் கொடுத்துவந்தார். சித்தாந்தவித்தியாசாலை சிறப்பாய் நிகழக்கண்டபின் சதாசிவப் பிள்ளையவர்கள் தமதுவித்தியாசாலையில் உயர்தரக்கல்விகற்கும் ௪, ௫ பிள்ளைகளுக்குப் போசனத்தின்பொருட்டுப்பிள்ளை ஒன்றுக்குமாசம் ௨௦ ரூபாகொடுத்துவந்தார்கள். தர்க்ககுடாரதாலுதாரியவர்கள் சிவபதமடைந்தபின் சித்தாந்தவித்தியாசாலை நடைபெறுதொழியவே பிள்ளையவர்களும் அதனைநிறுத்திவிட்டார்கள். இப்பொழுது ௨௧000 ரூபாவுக்குச் சொத்து அவ்வித்தியாசாலைக்கு இருக்கிறபடியால் உயர்தரக்கல்விகற்க விரும்பும் மாணாக்கருக்கு அன்னவஸ்திரமுதலியனவும் கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடுசெய்துவிட்டார்கள். பணம் இனி வாவா மிக அதிகப்படுமாதலால் அதற்கு ஒரு விதத்திலும் செலவில்லாவிடின் "அகப்பட்டதைச்சுற்றடா வாண்டியப்பா" என்றபடி யாரேனும் அகப்பட்டவரை சுற்றிக்கொள்வார்கள் என்று கருதியே அப்படி ஏற்பாடு செய்தார்கள்போலும். அந்த ஏற்பாடுசித்திபெற்றால் நன்மைதான். பண்டிதருக்காகவேனுஞ் சித்திக்கச்செய்யாமல்விட்டால் தரும பரிபாலகருக்கு அவமானமல்லவா? பண்டிதர் பகைத்திறம் பகைக்கப்பட்டார்க்கும் நன்மை செய்கின்றது. இதுவன்றோ ஆச்சரியம். பள்ளிக்கூடத்துப் பொருளைப் பள்ளிக்கூடத்துக்குச் செலவழித்தால் எல்லாருக்குஞ் சந்தோஷந்தானே. அஃதொழிந்து மற்றொன்றற்குச் செலவுசெய்தாற் குற்றந்தானே. குற்றமாயினும் பணவாசையாரைத்தான் விட்டது? பொன்னம்பலபிள்ளையவர்கள் "என்பண ஆசை காதலுமெய்யதினிலும் சந்தேகத்தையுண்டாக்கிற்று" என்று பண்டிதருக்கனுப்பிய கடிதத்திலெழுதியிருக்கின்றார்களே.

சதாசிவப்பிள்ளையவர்களுக்குப் பண்டிதர் எழுதிய கடிதத்தில், "தாங்கள் செவ்வே உண்ணுதும் உடாதும் இரசமுஞ் சாதமும் நான்குமுழவேட்டியும் உண்டுடுத்துக் கஷ்டப்பட்டுச்சம்பாதித்த பொருள்" என்றதன்பின் எழுதியனவற்றிற்சில சொற்களையேனும் வெளிப்படுத்தாததென்னை? அதனாற் பண்டிதர் சதாசிவப்பிள்ளையவர்கட்குப் புத்திபுகட்டினமை யாரு நன்குணர்ந்துகொள்ளுவரென்று மறைத்துவிட்டீரோ? நல்லது அக்கடிதத்தைப் பண்டிதருக்கும் பிறருக்குங் காட்டி உமது கொள்கையை நிரப்பிக்கொள்ளும் பார்ப்போம். பண்டிதர் சதாசிவப்பிள்ளையவர்கட்கனுப்பிய பிறகடிதங்களைப் பற்றிப் பேசாததென்னையோ? அவர் ௨00 ரூபாவிலை கேட்ட தர்க்ககுடாரதாலுதாரியவர்கள் சொத்தை எடுத்தவுரிமைக்காரர் அவ்வளவிலமையாது பண்டிதர்மீது குறைநினைக்கும்படி கடிதம் எழுதித் தர்க்ககுடாரதாலுதாரியவர்கள் மருகருக்கு அனுப்பிவிட்டாரே. பண்டிதர் ஊரறிய ௧௫0 ரூபா செலவழித்துத் தர்க்ககுடாரதாலுதாரியவர்களுக்கு அந்தியத்தில் செய்யவேண்டியனவெல்லாஞ் செய்த அருமையும் பெருமையும் நன்மையும் இந்தக்காலத்தில் யார் செய்வார்! உற்றார் என்று சொல்லி அவர்கள் பொருளை எடுத்தவர்தாமும் அவ்வாறு செய்யவில்லையே. அதுவும் ஊரறியுமன்றோ! இன்றும் எல்லாரும் சாக்ஷிசொல்லுவார்களன்றோ? அந்தியகாலத்தில் தர்க்ககுடாரதாலுதாரியவர்கள் பண்டிதருக்கனுப்பிய கடிதத்தில் "தாங்களாவது வேங்கடாசலச்செட்டியாராவது இந்தச்சமயம் எனக்கு ௧00 ரூபா தந்து உதவவேண்டும். இதுவே தாங்கள் எனக்குக் கடைசியாகச்செய்கிற உதவி" என்று எழுதினமையும் போதியசான்று. அக்கடிதம்

பார்த்த வேங்கடாசலச்செட்டியாரும்சான்று. பணம் கொண்டுவந்து செலவுசெய்தபோது உடனிருந்து கண்ட அவர்மாணுக்கருஞ்சான்று. அப்படியிருக்கப் பண்டிதர்மீது குறையாகத் தர்க்கருடாரதாலுதாரியவர்கள் மருகருக்குக் கடிதமெழுதியவர் வித்தியாசாலை விஷயத்தில் என்ன என்ன சொல்லமாட்டார் என்ன என்ன எழுதமாட்டார் என்பனவாதியாகச்சதாசிவப்பிள்ளையவர்கள்கடிதத்திலெழுதப்பட்டனவெல்லாம் நும்மைத்தாக்குமென்று கருதியோ "செவ்வே உண்ணுமலும் உடாமலும் இரசமுஞ்சாதமும் நான்குமுழ வேட்டியும் உண்டுடுத்துக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருள்" என்றவரை எழுதியும் மற்றக்கடிதங்களை விடுத்தும் சதாசிவப்பிள்ளையவர்களைப் பண்டிதரும் புகழ்ந்திருக்கின்ருர் என்று உலகைமயக்க யத்தனம்பண்ணினீர். இனி உம்மை உலகம் நன்ருயறிந்துகொள்ளும். உமது மாயாவலையில் அகப்படாது, முடியுமாஞல் அகப்படுத்திப்பாரும். நாம் அவ்வலையை அறுத்துச் சின்னுபின்னப்படுத்தி விடுவேம். சதாசிவப்பிள்ளையவர்கள் இறத்தற்கு ஒருவருடத்தின் முன் பண்டிதர் அவர்கட்கு எழுதிய கடிதத்தில் தாங்கள் இலெளகீகவிஷயமாய்ச் செலவழித்தபொருளிருந்தால் சிதம்பரவித்தியாசாலையைப்போல இந்துவித்தியாசாலை கட்டிவிடலாமே என்றும் எழுதியிருக்கிருர். அக்கடிதமும் இருக்குமே. இருந்தாலும் நுமக்குப் பிரதிகூலஞ்செய்தலின் ஆமென்னீர் "சதாசிவப்பிள்ளையவர்களைப் பற்றி என்னசொல்லப்போகிறீர்கள்" என்ற நீர் தாமே பொன்னம்பலபிள்ளை பண்டிதரிடம் சிநேகமாயிருக்கும் போது சதாசிவப்பிள்ளையவர்கள் யாருக்கோ ரு000 ரூபாவுக்கு வீடுவாங்கிக்கொடுத்துவிட்டார் என்றும்,மற்ருெருவருக்கு ௧000 ரூபா கொடுத்துவிட்டார் என்றும்,வேருெருவருக்கு ௧000 ரூபாகொடுத்துவிட்டாரென்றும், ஒருவரை பீ ஏ வரை படிப்பித்தார் என்றும், அவர் ஆஞ்ஞைப்படி அவர் கூட்டியனுப்பியவர்களை இராமேச்சுரயாத்திரை செய்வித்துவைத்தேம் என்றும், அவர்கள் கொண்டுவந்த பொருளும் சதாசிவப்பிள்ளையவர்கள் கொடுத்ததாயிருக்கவேண்டும் என்றும், இவைகளுக்கு யாதாமொருகணக்குங் கிடையாதென்றும், இப்பொழுதுதான் இவர் செய்த வீண்செலவெல்லாம் நன்ருய்த்தெரிந்தனவென்றும் சொல்லியிருத்தலைத் தேர்ந்தறியும். பின் பண்டிதர் அவர்களைப்பற்றிச் சொல்லுதல்மிகையே.

உ௩. "அவர்களுக்குப்பின் நாவலரவர்கள் வித்தியாசாலைத் தருமங்களை நடத்துபவர்கள் ம-ா-ா-ஸ்ரீ கைலாசபிள்ளையவர்களும், ம-ா-ா-ஸ்ரீ பொன்னம்பலபிள்ளையவர்களுந்தாமே" என்றீர்.

நீர் அறியாதவிஷயத்திற்றலையிட்டு என் பேசத்தொடங்கினீர்? நாவலரவர்களுக்குப் பின் யாழ்ப்பாணவித்தியாசாலையை நடத்தினவர்கள் சதாசிவப்பிள்ளையவர்களால் நியமிக்கப்பட்ட ம-ா-ா-ஸ்ரீ சம்பந்தநாதமுதலியார் முதலிய பலர். அவருள் சம்பந்தநாத முதலியார் தமது பதவியை அதிசீக்கிரம் தாமே விடுத்தார். அதற்குக் காரணம் அவ்வித்தியாசாலை அபிவிருத்தியில் அப்பிரியமுள்ளவர் செய்த அநியாயங்களே. அவர்க்குப்பின் அவ்வித்தியாசாலை கைலாசபிள்ளையவர்களிடம் ஒப்பிக்கும்வரை அதனை நடத்திய மானேசர்களால் அடைந்த நிலைமை யாழ்ப்பாணத்தாரெல்லாருக்குந் தெரியுமே? இதனை நீர்தாமா மறைக்கப்புகுந்தீர். கெட்டி கெட்டி. சூரியனை உள்ளங்கையால் மறைப்பீராயின் இதனையும் மறைக்கவல்லீராவீர். அதில்

உபாத்தியாயராகவிருந்த பொன்னம்பலபிள்ளையவர்களிடம் கேட்டாயினும் அறிந்துகொள்ளும். அம்மானேசர்கள் மனம் வைத்துச் செவ்விதமாக நடத்தாமையால் அவ்வித்தியாசாலை அபிவிருத்தி மிகக் குன்றிவிட்டதென்னுங் கருத்தினாலே தானே பிள்ளையவர்கள்காரைக்குடியிலிருந்து பண்டிதருக்கெழுதியகடிதத்தில் "யாழ்ப்பாணவித்தியாசாலையில் இருக்கலாமென்றால் அதிலிருக்கும் விருப்பந்தான் தெரியுமே" என்று எழுதியிருக்கின்றார்கள். பண்டிதர் இடையில் வந்தமானேசர்களைப்பற்றி எழுத நீர் கடையில்வந்தமானேசராகிய பொன்னம்பலபிள்ளையவர்கள் சொல்லைக்கேட்டுக்கைலாசபிள்ளையவர்களையும் இழுத்து அவர்கட்குத்துணைசேர்க்கின்றீர். அதை அவர்களும் அறியவல்லவர்களே. யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலை கோப்பாய்ச் சைவப்பிரகாசவித்தியாசாலைகளிலிருந்து படிப்பித்து அவற்றை விருத்திசெய்யாமல் அவைகளெல்லாம் கெட்டால் நமக்கென்ன என்று கருதி வருவாய்நோக்கிக் • காரைக்குடி வித்தியாசாலைக்குச் சென்றிருந்தவர் இப்பொழுது வருவாய்மிகுந்துவிட்டதென்று உரிமைபாராட்டி விருத்திசெய்ய முன்வந்தமை என்ன நோக்கம் பற்றியென்பது யார்தான் அறியார். "பணம் என்றாற் பிணமும் வாய்திறக்கும்" என்றபழமொழி பழுதாமா?

சிவபுரி ஸ்ரீ. கலியாணசுந்தரரே! நீர் உம்மால் அடையமுடியாதகைலாசத்தை அடையவிரும்புகிறீர். அதுவோ நெடுந்தூரத்துள்ளது. திருநாவுக்கரசுசுவாமிகளும் திரும்பிவிட்டார்கள். உமக்கு விருப்பமிருந்தால் சுவாமிகளைப்போலச் சிவபுரிக்குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் ஒருகிணற்றிலெழுந்துபாரும். சுந்தரமூர்த்திசுவாமிகளை எண்ணி அடையைநீக்கியபெயரொற்றுமையால் அடைவேன் என்பீராயின் அப்பெயர்மாத்திரை போதாது. நுந்துணைவர் தில்லைவனத்துக் கரியயானையை வெள்ளையானையாக்கித்தாந்தேவராய் அதிலே நும்மையேற்றி வணங்கி அழைத்துச் செல்லவும்நீர்தேவாரம்பாடவும் வேண்டும். அவற்றிற்கு முயற்சிசெய்துபாரும்

பொன்னம்பலம் சிதம்பரத்திலிருப்பதுதான். சிதம்பரம் சிவபுரிக்குச் சமீபந்தான். அதனை நீர் அடைதல் எளிதுதான். ஆயினும் எதுபற்றியடைகின்றீர். ஆசைபற்றித்தானே. அங்ஙனமாயின், "புலிக்கான் முனிவற்குப் பொற்கழல் காட்டிக்—கலிக்கா ணிவந்த கட்டில் வாங்கி—மாயோன் மணிப்படப் பாயலு மெடுத்து—வறும்பாழ் வீட்டில் வைத்துக் கொண்டிருந்—துறங்காது விழித்த வொரு தனிக் கள்வ" எனக் குமரகுருபரசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவாக்கால் பொன்னம்பலம் வெறும்பாழ்வெளி என்பதும், "பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்தபோ—தென்மார்க்க மிருக்குதங்கே யெல்லாம் வெளியே" எனத்தாயுமானசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவாக்கால் அங்கே ஒருமார்க்கமுமில்லைவெளியே என்பதும் பெறப்படுதலால் உமது கருத்து நிரம்புமாறில்லை இனி உமதுபிரியம்.

உ௯. "இவர்கள் நாவலரவர்கள் தருமங்களை நடத்துவதில் தங்களுக்குக் குறைவுகாணப்படும் பொழுதெல்லாம் அவர்களுக்குப் புத்திகூறி அக்குறைகளை நீக்கிச் செவ்வே நடத்துவித்தல் நாவலரவர்கள் மாணாக்கரென்றிருக்கிற தங்களுக்குக் கடமையன்றோ" என்றீர்.

இவர்கள் என்ற பன்மைச்சுட்டு யாதும் பயனின்று. கைலாசபிள்ளையவர்களைப்பற்றிப் பேச்சிங் கேதுக்கு? பண்டிதர், நாவலரவர்கள் மாணுக்கர் என்பதை நீருமங்கீகரித்திலீர்; அவர்தாமு மகத்தி லங்கீகரித்திலர். நீர் அங்கீகரியாமை உமதுபத்திரிகையை முன்பின் உற்று நோக்கின் நன்கு விளங்கும். பண்டிதர் அங்கீகரியாமை பின்னர்க்காட்டுதும். பின்புத்திகூறற் குரிமை யாங்ஙனமென்றொழிக. உரிமையின்றெனினும் தருமவிஷயத்திற்கு யாரும் புத்திகூறலாம் என்பீராயின், அஃதொக்கும்; ஆயினும் தருமபரிபாலகர் பண்டிதருடன் கோபமுடையராயிருத்தலிற் பேச்சுநிகழாமையாற் கூறலமையாதன்றே! கைலாசபிள்ளையவர்கள் தமக்குமுன் யாழ்ப்பாணவித்தியாசாலையை நடத்தினவர்கள் அதன் விருத்திகுன்றச்செய்துவந்தமையால் அவர்க்குப் புத்திகூறவிரும்பியும் அவர்க்குந் தமக்கும் பேச்சுநிகழாமையால் நாவலரவர்கள் புத்தகங்களை அச்சிட்டு விற்று அவர்கட்குப் புத்திபுகட்டினாற்போலப் பண்டிதரும் புகட்டிவருதல்காண்க.

இன்னும் வித்தியாசாலை நன்றாக நடவாமையைப் பொன்னம்பலபிள்ளையவர்கள் பண்டிதருக்கனுப்பிய*பலகடிதங்களாலும் அறிந்துகொள்ளும். அக்கடிதங்கள் இவை:—

*முதலாங்கடிதம்:—"வித்தியாசாலை இப்போ நல்லாய் நடக்கிறதா"

இரண்டாங்கடிதம்:—"வித்தியாசாலை மானேசர் ஆர்."

மூன்றாங்கடிதம்:—"சிவகுருவுக்கும் இளையதம்பி உபாத்தியாயருக்கும் காச்சல் எப்படி? சிவகுரு கிறுண்டுப்பணம் எடுத்து என்னசெய்தது. பள்ளிக்கூடம் நல்லாய் நடக்கிறதா."

*நாலாங்கடிதம்:—"வித்தியாசாலைத்தத்துவம் சிவகுருவுக்கு வந்துவிட்டதா? கிறுண்டுப்பணம் வரவில்லையா? என் மைத்துனர் அப்பாக்குட்டியைக் கண்டால் கூடியவரையிற் சொல்லி வித்தியாசாலைவிஷயத்தில் கலகம்பண்ணித்திரியாமல் இருக்கச்செய்க."

ஐந்தாங்கடிதம்:—"சிவகுரு கிறுண்டுப்பணம் எடுத்து என்ன செய்தது. பள்ளிக்கூடம் நல்லாய் நடக்கிறதா?"

உ௫. "கைலாசபிள்ளை நாவலரவர்கள் தமையனார் குமாரர் என்றும், பொன்னம்பலபிள்ளை தங்கள் ஆசிரியரென்றும் அஞ்சுகின்றீர்களோ!" என்றீர்.

கைலாசத்தை நீர் கிட்டமாட்டீர் விட்டுவிடும் என்றால் கேட்கின்றீரில்லை. இனிப் "பட்டவா படுக" நாமென்செயலாம். அவர்கள் தாதைகுற்றஞ்செய்யினும் பண்டிதர் புத்திகூற அஞ்சுபவரல்லர்.

பொன்னம்பலபிள்ளையவர்கள் கற்கத்தாவிலிருக்கும்போது தங்கள் ஆசிரியர் தாம். அப்பொழுது பண்டிதர் மாத்திரமன்று மற்றெல்லாரும் அஞ்சத்தான்வேண்டும். இப்பொழுதும் தங்கள் ஆசிரியராயிருந்தால் அஞ்சத்தான் வேண்டும். இன்றேல் நேற்றைப்பாலரும் அஞ்சார். அங்ஙனமாயின் பொன்னம்பலபிள்ளையவர்களை

* * இக்கடிதங்கள் பின் காணப்பட்டமையால் இங்கே பதிப்பிக்கப்பட்டன. இவைகளும் கைலாசபிள்ளையவர்களுக்கும் பொன்னம்பலபிள்ளையவர்களுக்கும் முன் பல மானேசர்களிருந்தார்கள் என்பதற்குப்போதியசான்று.

அஞ்சுபயந்தீர்த்து அபயங்கொடுத்துச் சமயந்தோறும் பாதுகாத்துவந்த பண்டிதரா அப்பிள்ளையவர்கட்கு அஞ்சுபவர். எழெழுபிறப்பிலும் அஞ்சார் அஞ்சார். வேறொருவிதமாகவேனும் அஞ்சுவிக்கவும் எண்ணந்தான் என்று அறிந்தேம். அப்படிச் செய்து பார்த்தாலன்றோ பெருமை வெளிப்படும். அதனை எதிர்பார்த்து அதற்கு வேண்டிய கருமம்முன்னரே செய்யப்பட்டிருக்கின்றது. நாவலரவர்கள் குவைனந்துரையைக் குறித்துச்செய்த பிரசங்கத்தில் குவீன் விக்டோரியா நாவலன் செவியில் இருக்கின்றார் என்பது குவையினம் அறியார்போலும் என்று கூறியதனை அறியார்போலும். இங்கிலிஸ்கவண்மெண்டு எத்துணை நீதியுடையதென்பதனைப் பாமரருமறிவரே.

பொன்னம்பலபிள்ளையவர்கள் எந்நாளும் பண்டிதரிடம் புத்திகேட்டு நடந்துவந்தவர் என்பது அவர்கள் பண்டிதருக்கனுப்பிய கடிதத்தால் நீரும் பிறரும் ஓரக்கிடக்கின்றதே. பண்டிதர் வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள் மாணாக்கர் என்பது பிரத்தியக்ஷத்தால் அத்தேசத்தாரும், அத்தேசத்து வித்துவான்கள் பண்டிதர் பரிசோதித் தச்சிடுவித்த திருக்கோவையாருண்மைக்குக் கொடுத்த சிறப்புப் பாயிரங்களால் இத்தேசத்தாரும் ஐயமின்றி அறிந்ததொன்றே. அவ்வித்துவான்களைப் பொன்னம்பலபிள்ளையவர்கள் பண்டிதரைத் தம்மாணவர் மாணாக்கர் என்று பாட்டுப்பாடியபோது தன்மாணாக்கரென்று பாடாததென்னையோ என்று கேட்டு வாதாடி நிறுத்திவிடாமல் இதுவரை மௌனமாயிருந்துவிட்டதேனோ? கேட்பின், அவர்கள் உமக்குக் குடும்பபார மதிகப்பட்டமையாலும், வித்தியாசாலையில் உபாத்தியாயராய் அமர்ந்தமையாலும் காலமெல்லாம் அவற்றிற்கும் போதாமையால் வாளாவிருந்தீரன்றோ? பண்டிதரும் ம-ா-ா-ஸ்ரீ சிவகுருநாத பிள்ளையவர்களும் வித்துவசிரோமணியிடம் படிக்குங்காலத்து அவர்களிடம் இதற்கு நொத்தாரிசு (வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையவர்கள்) என்னசொல்விற்று? அதற்கு என்னசொல்விற்று என்று வினாவிக் கற்றீரன்றோ? இப்பொழுது என் சொல்லுகிறீர் என்று செவியிற்பிடித்துக்கொண்டு கேட்பார்கள் என்று பயந்து மௌனமாயிருந்துவிட்டார்கள்போலும். திருக்கோவையாருண்மைக்குப் பண்டிதராசிரியர் சிறப்புப்பாயிரமனுப்பியகாலத்துப் பொன்னம்பலபிள்ளையவர்கள் பண்டிதரிடம் அது சிறுபாயிரமாயிருக்கின்றது, அதையச்சிடவேண்டாம், நாம் யாழ்ப்பாணத்திலே நீர்செய்த சமயபரிபாலனமுதலிய விஷயங்களையெல்லாம் விரித்துப் பெரிதாகப் பாடித் தருகின்றோம் என்றபோது, பண்டிதர் சிறுநூலுக்குச் சிறுபாயிரந்தான் நல்லது என்று சொல்லிமறுத்துவிட்டனர். இப்பொழுது யோசிக்குமிடத்துப் பண்டிதரைப் பிற்காலத்திலே தமது மாணாக்கர் என்று சொல்லுகிறதற்காகவே அந்தயுத்திபண்ணினார்கள் என்றுதெரிகிறது. "வஞ்சமுஞ்சூழ்வும்வல்லவல்லையெம்பிநீபுதிதொன்றுவகுத்தாய்."

இன்னும் யார் யாவரிடத்தில் கற்றார்கள் என்பதைப் பொன்னம்பலபிள்ளையவர்கள் பண்டிதருக்கனுப்பிய பலகடிதங்களாலும் அறிந்துகொள்ளும். அக்கடிதங்கள் இவை:—

முதலாங்கடிதம்:—"பாரதச்சொற்காப்பி அவசியம் தேள்வை. இரம்பச்சங்கடமாயிருக்கிறது. கொஞ்சங்கொஞ்சமாயாவது எழுதியனுப்பவும்."

இரண்டாங்கடிதம்:—பாரதச்சொற்காப்பியைக் கொஞ்சங்கொஞ்சமாய் எழுதியனுப்பவும்."

மூன்றாங்கடிதம்:—"பாரதவுரைக்காப்பி அர்த்தஞ்சொல்லியாய்விட்டது.பாரதச் சொற்காப்பியைக் கொஞ்சங்கொஞ்சமாயாவது எழுதி அவசியம் அனுப்புக. சொற்காப்பி அவசியம் தேவை."

நாலாங்கடிதம்:—"பாரதச்சொற்காப்பியைச் சீக்கிரம் எழுதி யனுப்பவும். உரைக்குப் பின் அது இல்லாவிட்டால் அவமானப்படவேண்டிவரும்."

ஐந்தாங்கடிதம்:—"இங்கே இதுநாள்வரை பாரதச்சொற்காப்பி வரும் வரும் என்று எதிர்பார்த்தவண்ணமாயிருந்தேன். இனி அவசியம் தேவை முன்போலல்ல."

ஆறாங்கடிதம்:—"பாரதச்சொற்காப்பிகிடைத்தது. பாரதம் கேட்கிற இருவரில் ஒருவனுடைய வீட்டில் விசேஷம் நடக்கிறபடியால் ௧௦ நாளைக்குப் படிப்பில்லை. ஆதலால் அதற்கிடையில் சூதுபோர்முடியும்வரையும் உள்ளதையாலும் தபாலில் அனுப்புக."

பண்டிதர் குறித்த பாரதக்காப்பியை வாங்கிப் பார்த்துப் பிறர்க்குப் படிப்பித்து மானமடைந்த பிள்ளையவர்கள் பண்டிதருக்கு ஆசிரியரோ பண்டிதர் பிள்ளையவர்களுக்கு ஆசிரியரோ என்பதை அறிந்துகொள்ளும்.

இனி, ஞானப்பிரகாசக்குளக்கரையில் தக்கமனுஷர் முன்பாகப் பொன்னம்பலபிள்ளையவர்கள் கோபாவேசராய்ப் பண்டிதரை எம்முடையமாணாக்கர் என்று தானும் யாம் சொல்லமாட்டேம். அப்படியிருக்க வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையவர்களின் மாணாக்கர் ஆவது எப்படி என்று இகழ்ந்து கூறினாராகவும், அதுகேட்டபெரியார் சாட்சிபகர இப்பொழுதும் இருக்கின்றாராகவும் நீர் இப்பொழுது அவர்களைப் பண்டிதருக்காசிரியர் என்று கூறிப் புகழ்ச்சிசெய்வார்போன்று அவர்கொள்கைக்குமாறாய் இகழ்ச்சிசெய்யத் தலைப்பட்டமை, நீர் தர்க்ககுடாரதாலுதாரியவர்களுடன் சேர்ந்து பொன்னம்பலபிள்ளையவர்களைத் தூஷித்தகாலத்தில் அவர்கள் உமக்குச் செய்தவற்றை நினைத்துப் பழிக்குப் பழி வாங்குதற்பொருட்டுப்போலும். அப்படியாயின் உம்மீது குறைசொல்ல இடமில்லை.

௨௬. "ஏன் ஐயா வலியச் சண்டைக்கிழுக்கின்றீர்கள்" என்றீர்.

வலியச்சண்டைக்கிழுப்பவர் யாரையா? நும்மின் மறைந்துநிற்பவர்தாமே. அங்ஙனமாகவும் நீர் இங்ஙனம் கூறியதென்னை? தருமசிந்தனைப்பத்திரிகையில் சண்டைக்கிழுத்ததாக எங்கேனும் ஓரக்கரந்தானுங் காட்டுவீரா? அப்பத்திரிகையைப் பார்ப்பவர் நும்மை எத்தகையினரென்றெண்ணுவார்கள்! இப்படியே இல்லாதனவற்றையும், சொல்லாதனவற்றையும் உள்ளனவாகவும் உரைத்தனவாகவும் கூறியும் வரைந்தும் "சணப்பன்வீட்டுக்கோழி தானே விலங்குமாட்டிக்கொண்டது"போல மேலோர் ஆராய்ச்சியறிவிற்றளைப்புண்டு மெலிகின்றீர்.பாவம் பாவம்.

தமக்குக் கிடைத்த ௩௧௦௦௦ ரூபாவையும் "தாங்தேடாப்பொன்னுக்கு மாற்றுமில்லை யுரையுமில்லை." என்றபடி, வீணிற்செலவுசெய்யாது குறிக்கப்பட்ட தரு

மத்துக்கே செலவுசெய்து நன்மையெய்துக வென்னுங் கருத்தாலே, "***தரும சிந்தனை"ப்பத்திரிகை எழுதப்பட்டதென்பது நடுநின்றோராயும் அறிஞர்யாருக்கு நன்குவிளங்கும். அஃதில்லாதநமக்குத் தோன்றாது. அங்ஙனம்தோன்றவொட்டா தநுந் தீவினையை நோவதன்றிப் பிறரை நொந்தென்பயன்? இன்னும் பண்டிதர் மிக்க நல்லெண்ணத்தோடு அப்பத்திரிகை எழுதின ரென்பதற்குப் பதினறுபத்திரிகைக்குமேல் அச்சிடாமை போதியசான்றாம். அதற்குமேல் ஒருபத்திரிகையேனும் தேடிக்காட்டவல்லுநர் ஆண்மக்களே.

வலியச்சண்டைக்கிழுத்தவர் பண்டிதரோ நீரோ என்பது இருவர் பத்திரிகைகளையும் வாசித்தவர்களுக்குத் தெரியும். நுமதழுக்காற்றாலாய சண்டைக்குப் புறங்கொடுப்பார் யாருமிலர் என்பதை நன்றுணரக்கடவீர்.

உஎ. முன், "தங்களை நாவலரவர்கள் மாணுக்கரல்லரென்று யாரேனும் ஆக்ஷேபித்தாலன்றோ இதனை எழுதிப் பத்திரிகையை நிரப்புதல் வேண்டும்" என் றீர். பின், ஏகலைவன் கதைகூறினீர். அதன்பின், "நாவலரவர்கள் காலத்திலே தங்களுக்குப் பத்துப் பதினொருவயசுதான் இருக்குமென்றும், தாங்கள் அவர்களிடத்துப் படிக்கவில்லை என்றும், நல்லூர்க்கந்தசுவாமிகோயில் விஷயமாக அவர்கள் எழுதிய பத்திரிகை ஒன்றிலும் தங்களைத் தமது மாணுக்கனென்று அவர்கள் எழுதவில்லை என்றும், யாழ்ப்பாணத்திருந்து ஒருவர் எழுதியிருக்கின்றார். அதனுடைய உண்மையைச் சிறிது அறிவியுங்கள்" என்றீர்.

ஆரேனுமாட்சேபித்தாலன்றோ என்றதனோடு நின்றுவிடாமல் ஏகலைவன் கதை கூறப்புகுந்து நுமது முற்கூற்றைப் பிற்கூற்றால் மறுத்து நும்மை நீரே கண்டித்துப் பொய்யன் என்று உம்மை உலகத்துக்கு வெளிப்படுத்திக்கொண்டீர். அஃதன்றி, ஏகலைவன் என்னும் வேடன் வில்வித்தைகற்றலில் அதிசமர்த்தனாயிருக்கக்கண்ட துரோணுசாரியருடைய மற்றை மாணுக்கர் அவன்மீது பொறாமை கொண்டு அவனுக்கு வில்வித்தை பயிற்றப்படாதென்று தங்குருவுக்கு விண்ணப்பஞ்செய்ய அவரும் அப்படியே கற்பியாதொழிந்தார். வேடன் தன்னிடஞ் சார்ந்து துரோணுசாரியரைப்போல ஒருபதுமைசெய்துவைத்து அவராகப் பாவித்து அப்பதுமைமுன் வில்வித்தைகற்று அருச்சுனன் முதலிய மாணுக்கரினுஞ் சிறந்து விளங்கினன். அதுபோலப் பண்டிதர் நாவலரவர்களிடம் கற்கப்புகுந்த காலத்தில் அவரது சாமர்த்தியத்தைக் கண்ட பொன்னம்பலபிள்ளை முதலிய பந்துவர்க்கமாணுக்கர் பண்டிதர்மீது பொறாமைகொண்டு ஆசிரியர்நாவலரவர்களிடம் பண்டிதருக்குக் கற்பிக்கப்படாதென்று வேண்டிக்கொள்ள, அவர்களும் அங்ஙனஞ்செய்தமையால் பண்டிதர் நாவலரவர்களைப்போலப் பதுமைசெய்து வைத்து அதன்முன்னிலையிற்கற்று நும்மெல்லாரினும் சிறந்துவிளங்குகின்றார் என்று நுமது ஏகலைவன்கதை பொருள்பயத்தலால் நும்மையேயன்றி நுமதாசிரியரையும் அழுக்காறுடையவர் என்று உலகத்துக்கறிவித்து விட்டீரே. இப்படிச் சீடர் அகப்பட்டாலன்றோ குருவுக்குப் புகழும் புண்ணியமுமாம். பரமார்த்தகுருவின் சீடர்களும் நுமக்கு நிகரல்லர்.

இனி, யாழ்ப்பாணத்திருந்து பேரில்லாத ஒருவர் எழுதியகடிதவிஷயத்தின் உண்மையைப் பண்டிதரைச்சொல்லும்படி கேட்டீர். உம்மாலே குற்றமுடையவ

ரென்று கொள்ளப்பட்ட அவர் கூற்று உம்மால் நம்பப்படமாட்டாதாகலான். உமது ஆப்தராகிய பொன்னம்பலபிள்ளையவர்களிடம் கேட்டுத் தெளியும்.

உமக்குக்கடிதம் எழுதிய பேரில்லார் நாவலரவர்கள் நல்லூர்க்கந்தசுவாமிகோயில் விஷயமாக எழுதிய பத்திரிகையைப் பார்த்தாரைப் பார்த்தாரைப் பார்த்திலரென்றறிக. அதனாற்றான் அவ்வாறெழுதினர். ஆயினும் நாம் இங்கே சொல்வதை இனிச்சாவதானமாகக்கேளும்.

"ஆவரங்காற்றம்பி கைமாறு கருதாது, தனக்கு, நேரேதான், தம்மாணாக்கர் வாயிலாகத்தான், தம்புத்தகவாயிலாகத்தான், கல்வியமுதம் பொழிந்த ஒருவரை, அவர்பெயர்வழங்கக் கூசி எம்பெருமான் எம்பெருமான் என வழங்குவது லோக சம்மதமாகாதோ? நீ மகா நிட்டாபரனாதலால் ஒரு மகாகுருவை அடுத்திருப்பாய் போலும். அவரை நீ எம்பெருமான் என்றால் சிறிது கல்வியுடையான் ஒருவன் தன்குருவை எம்பெருமானெனலாகாதோ?" என்று எந்தப்பத்திரிகையிலே எழுதியிருக்கின்றதென உமக்குக்கடிதமெழுதிய மகாத்துமாவைக் கேளும். அப்பொழுதாயினும் அவர் கண்டுபிடித்து விண்டுவிடாரா பார்ப்பேம். இதனாலே நாவலரவர்கட்கு நேரே தம்மிடங்கற்றாரும், தமது மாணாக்கரிடம் கற்றாரும், தம்புத்தக வாயிலாகக்கற்றாரும், தமக்கு மாணாக்கராவர் என்பது உடன்பாடாதலறிக. பண்டிதர் "கும்பமுனிக் கின்பமெல்லாங் கொள்ளைகொள்ளத் தந்தருணீ—வம்பனேற் கின்பம் வழங்குவது முண்டாமோ—செம்பதுமக் காடலர்ந்த தேசுதரு பேரழகா—சம்புதவு மைந்தா சமரபுரி நாயகமே." என்னுஞ் செய்யுளை நெறிற்பெற்றும், அவர்கள் மருகரும் மாணாக்கரும் வித்துவசிரோமணியுமாகிய ஸ்ரீமத் ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்களிடம் எழுவருடங்கற்றும், அவர்கள் வித்தியாசாலையிற் கற்றும், அவர்கள் புத்தகவாயிலாகக்கற்றும், அவர்கள் பிரசங்கவாயிலாகக்கற்றும் இருக்கின்ற படியால் அந்நாவலரவர்கள் கருத்தின்படி அவர்கட்குத் தாமும் மாணாக்கர் என்பது உணர்த்தி அதுவாயிலாக அவ்வியல்பினையுடையார் யாவரும் அவர்கட்கு மாணாக்கராவர் என்பதுணர்த்துதற்பொருட்டும், பொன்னம்பலபிள்ளையவர்கள் இதுவரை வித்துவசிரோமணி. ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள் மாணாக்கர் என்று தம்மை எழுதிவந்தவர் இப்பொழுது ட்றஸ்ட்டிப்பத்திரத்தில் நாவலரவர்களுக்கும் மாணாக்கர் என்று எழுதுவித்துக்கொண்ட சூழ்ச்சியை இதுமூலம் வெளிப்படுத்தற்பொருட்டுமே அவ்வாறு பண்டிதர் எழுதினாரயன்றி நீர் நும்பிராந்தி மதிகொண்டெழுதிய எவ்வகை நியாயமுங் கருதி எழுதினாரன்று. சிவஞானபோத மாபாடியம் அச்சிட்ட ஞான்று ஸ்ரீமத். சிவப்பிரகாசபண்டிதரவர்கள் அதற்குக்கொடுத்த சிறப்புப்பாயிரத்தில் நாவலரவர்களுக்கும் மாணாக்கர் என்றுபாடியனுப்ப அதனை நீக்கி அச்சிட்டமைக்கு அவர்கள் இன்றும் போதியசான்றாயிருக்கின்றார்கள். அதுவும் பண்டிதர் உண்மைக்கருத்தை நன்று விளக்கும்.

பண்டிதருக்கு இப்பொழுது வயசு ௫0. சந்தேகமானால், நாவலரவர்கள்காலத்தில் பண்டிதருக்குப் பத்துப் பதினொருவயசுதானிருக்கும் என்று ஆரூடம்சொன்னசோதிடரை அழைத்து வந்து பண்டிதருடைய சாதகத்தைப் பார்ப்பித்துத் தெளிந்துகொள்ளும். நாவலரவர்கள் பிரமாதிஆடு சிவபதமடைத்தார்கள். இப்பொழுது ௨௨ வருடங்களாயின. ௫0 ல் ௨௨ றைக்கழித்தால் ௧௭ நாவலரவர்கள்காலத்தில்

பண்டிதருக்குப் பதினேழுவயசு என்று கடைப்பிடிக்க. உமக்குக் கடிதம் எழுதினவரும் உம்மைப்போன்ற கற்பனையுடையராயேயிருப்பார் என்பது சொல்லவும் வேண்டுமோ? "இனத்தை யினஞ்சாரும்" என்ற பழமொழி வீண்போமா? சிறிது உண்மையறிய விரும்பிய சுந்தரமே பெரிதும் உண்மை அறிந்துகொள்ளுக.

உஅ. "இக்காலத்தும் சிலர் நாவலரவர்களைக் குருவாகப்பாவனைசெய்து கல்வி கற்றும் பிரசங்கித்தும் அவர்கள் சிஷ்யர்களுட் சிரேட்டராகவில்லையா?" என்றீர்.

அவர் இன்னாரென்று வெளிப்படக்கூறலாகாதா? அங்ஙனம் செய்கின்றவர் இருந்தாலன்றோ கூறுவீர். ஒருகால் யாழ்ப்பாணமிருந்து அவரைப்பற்றியும் கடிதம் வந்திருக்கலாம். அதனாலறிந்து கூறினீர்போலும். கடிதத்திலவர் பெயர்காட்டப்படவில்லையா? இல்லையாயின், பண்டிதர் விஷயத்தைத் தெரிவித்தார் கடிதம் போலக் கற்பனையே மெய்யன்று.

உக. "தாங்கள் நாவலரவர்கள் மருகர்மாணாக்கர் அல்லது அவர்மாணாக்கருடைய மாணாக்கர் என்றிருப்பதில் என் அருவருப்புறுகின்றீர்கள்." என்றீர்.

நாவலரவர்கள் மருகர்மாணாக்கர் என்றுதானே தாம் அச்சிடுவித்த புத்தகங்களில் பதிப்பித்திருக்கின்றார். "****தருமசிந்தனை" என்னும் பத்திரிகையிலும் அவ்வாறு பதிப்பித்திருக்கின்றாரே. நாவலரவர்களையும் தருமசிந்தனைப்பத்திரிகையில் ஆசிரியர் என்று காட்டியது இன்னகாரணம்பற்றி என்பதை முன்னர் விளக்குமாற்றால் விளக்கியிருத்தலைக் கண்டுகொள்க. இங்ஙனமாக நீர், "ஏன் அருவருப்புறுகின்றீர் என வினவியதை யார்தான் நகையார்.

அவர் மாணாக்கரின் மாணாக்கர் என்று இதுவரை யாவர் சொன்னார்? யாவர் எழுதினார்? நீர் நாவலரவர்களுக்கு இப்பொழுது புதுமாணாக்கராய்ப் பண்டிதரையும் புதுமாணாக்கராக்கி உமக்குப்பெருமைதேட முயலுகின்றீரே. உமக்கு அதனால் வரும் பெருமையைப் பண்டிதர் தாம் ஏன் கெடுக்கின்றார். பிறர் ஆக்கங்கண்டு பண்டிதர் எந்நாளும் அழுக்காறடைபவரல்லரே. நீர் சொல்லிக்கொள்ளும் எழுதிக்கொள்ளும் எழுதி நெற்றியிலும் ஒட்டிக்கொள்ளும். "முக்காலுங் காக முழுகிக் குளித்தாலும் வெள்ளைக்-கொக்காகுமோ" என்றபழமொழி இருக்கும்போது பண்டிதரை நீர் மாணாக்கரென்றுசொல்லினும் உள்ளதுதான் உண்டு. மணப்பால் குடித்தால் வயிறுநிரம்புமா? ஆதலால் வீணாசையேன் என்றும் நாம் எண்ணுகின்றேம்.

௩0. "பரமசிவனுடைய பிரதிவிம்பமாய்த் தோன்றிய சுந்தரமூர்த்தி நாயனார் அக்கடவுளையும், தம்மையும் வழிபட்டு முத்தியடைந்த நாயன்மார்களுடைய அடியார்க்கு அடியேன் என்று பாடிக் குறைவுற்றனரா?" என்றீர்.

முத்தர்களாகிய நாயன்மார்களையும், அவர்கள் செயல்களையும், பெத்தர்களாகிய ஆசிரியர்களுக்கும், மாணாக்கருக்கும், அவர்கள் செயல்களுக்கும், உவமை காட்ட வந்தது கலிகால விசேடமே.

சுந்தரமூர்த்திசுவாமிகள் தம்மை வழிபட்டு முத்தியடைந்த நாயன்மார்களுடைய அடியார்க்குமடியேன் என்றுபாடியதன் கருத்துத்தான் என்னையோ? சற்றே திருவாய்மலர்ந்தருளலாகாதா? "செங்கமலத் தாளிணைகள் சேரலொட்டாத் திரிமலங்க ளறுத்தீச னேசரொடுஞ் செறிந்திட்—டங்கவர்தந் திருவேட மாலயங்க ளெல்லா மரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப்பாடி—யெங்குமியா மொருவர்க்கு மெளியோ மல்லோம் யாவர்க்கு மேலானோ மென்றிறுமாப்பெய்தித்—திங்கண்முடி யாரடியா ரடியோமென்று திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடையோரே" "ஈசனுக்கன்பில்லா ரடியவர்க்கன்பில்லா ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்குமன்பில்லார்—பேசுவதென் னறிவில்லாப் பிணங்களை நாமிணங்கிற்பிறப்பினினு மிறப்பினினும் பிணங்கிடுவர் விடுநீ—யாசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட்டவர் கருமமுன் கருமமாகச் செய்து—கூசிமொழிந் தருண்ஞானக் குறியினின்று கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித்திரியே" என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தங்களைத் தாங்கள் அறிந்திருந்தால் சுந்தரமூர்த்திசுவாமிகள் தம்முடைய அடியார்க்குமடியரென்று தம்மைப் பாடிக் குறைவுற்றனரா என்று ஒருவிஞ நிகழ்த்தமாட்டீர். "அடியார்க்கடியரை" உம்மைப்போலப் பாசவித்தைகற்கும் பாசஞானிகள் என்றுதான் கருதிவிட்டீரோ! அல்லது ஆசிரியரிர் மாணாக்கர் என்றுதான் கருதிவிட்டீரோ? சிவனுக்குஞ் சிவனடியார்க்கும் அவரடியார்க்கும் எங்ஙனம் வேற்றுமைகண்டுபிடித்தீரோ? "தாபர சங்கமங்க ளென்றிரண்டுருவினின்று—மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளைவைப்பன்" எனவும், "சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடு வானாளத் தருவரேனு—மங்குவா ரவர்செல்வ மதிப்போமல்லோ மாதேவர்க் கேகாந்த ரல்லராகி—லங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்—கங்கைவார் சடைக்கரந்தாற் கன்பராகி லவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே" எனவும், "எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி—யுவராதே யவரவரைக் கண்டபோதே யுகந்தடிமைத் திறநினைந்தங் குவந்துநோக்கி-யிவர்தேவ ரவர்தேவ ரென்றுசொல்லி யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமேபேணிக்—கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக்காணலாமே." எனவும், போந்த சிவஞானசித்தித் திருவிருத்தத்தையும், தேவாரங்களையும் இனியேனும் சிந்தித்து அவற்றின் தூல சூக்குமார்த்தங்களைப் பண்டிதரிடம் பன்முறை கேட்டு உண்மை கடைப்பிடித்து முத்தர் பெத்தர்கள் கருத்துவகை செயல்வகைகள் இத்தன்மையன என்பதை நன்குணர்ந்து இருவர்செயல்களையு மொப்புமை கூறிச் சிவத்துரோகத்துக்காளாகாது தப்பிக்கொள்ளும்.

இனி நமது உவமையைப் பரியாலோசிக்கில், பொன்னம்பலபிள்ளையவர்கள் அடியார்க்கடியர் தானத்திலும், அவராசிரியர் அடியார் தானத்திலும், அவராசிரியர் சுந்தரமூர்த்திநாயனார் தானத்திலும் கருதப்படல்வேண்டும் என்று வெளியாகின்றது. அன்றியும் பொன்னம்பலபிள்ளையவர்கள்மேல் அவர்கள் ஆசிரியரின் ஆசிரியர், திருத்தொண்டத்தொகைபோல, தம்மாணாக்கர் மாணாக்கர்க்குமடியேன் என்று ஒரு மாணாக்கத் தொகை பாடி வெளியிடலாமென்றும் அதனால் அவ்வாசிரியர்க்குக் குறைவில்லை என்றும் இனிக் கூறுவீர்போலும். கூறினுங் கூறுவீர். நமக்கென்ன பந்தமற்ற சிவஞானிகளுஞ்சரிதான்; பந்தமுற்ற மாணாக்க

ருஞ்சரிதான். செக்கையுஞ் சிவலிங்கத்தையும் ஒன்றெனக்கருதி நக்குஞ் செந்தக்களுமுளவன்றோ? பின்னை நமக்கென்னகுறை?

"நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்னாதன்--றஞ்செய றானே யென் றுந்தீபற-- தன்னையே தந்தா னென் றுந்தீபற." என்றாங்குத் தஞ்செயலற்றுத் தாமென்னு மகங்காரமற்று எல்லாஞ் சிவன்செயலாகச் செய்து அருள்வயத்தராய் நின்ற சிவஞானிகளையும் அவர்கள் செய்கையையும் எத்துணையும் மதியாது, "யான் செய்தேன் பிறர் செய்தா ரென்னதியா னென்னுமிக்கோணை ஞானவெரியால் வெதுப்பிநிமிர்த்"தாது மருள்வயத்தராய் நிற்கும் மாணாக்கர் முதலியோரையும் அவர்கள் செய்கைகளையும் ஞானிகளுக்கும் ஞானிகள் செய்கைகட்கும் ஒப்புமை கூறவந்ததங்கள் சித்தாந்தவுணர்ச்சியின் மாட்சியையும், சிவபத்தி சிவனடியார் பத்திகளின் காட்சியையும், தங்கள் கருத்துவகை செயல்வகைகள் யாண்டுச் சென்றூன்றி நிற்கின்றனவென்னு நீட்சியையும், அவற்றால் நமக்கெய்தும் வீழ்ச்சியையும் உற்று நோக்கும் அறிஞர்களெல்லாரும் இவ்வொரு மானுடம் பொருளாசைபற்றி இத்துணை அவதிகட்குள்ளாகியழிகின்றதே என்று கண்ணோடியிரங்குகின்றார்கள்.

௰௧. "நம்மவர்கள் சிலர் தம்பெருமை சொல்லப்புகுந்து உலகநன்மைக்காகப் பாடுபட்ட மகானாகிய நாவலரவர்கள் நாமத்தை யிழுத்து அவர்களுக்கு இல்லாத குற்றங்களை ஏற்றிவிடப்பார்க்கின்றார்கள்" என்றீர்.

"நம்மவர்" என்று நும்மாற் சுட்டப்பட்டவர் எவரோ அவர் தம்பெருமை சொல்லாமை உலகப்பிரசித்தம். மற்று எக்காலத்தும் நாவலரவர்கள் கருதிய தருமங்களையே செய்து அவர்கட்குக் குறைவுசிறிதும் வாராமல் நல்ல கீர்த்தியையே உண்டாக்கிவருகின்றார். அதுவும் உலகப்பிரத்தியட்சமாதலின் நும்மாலும் பிறர் தம்மாலும் எந்நாளும் மறைக்கமுடியாது. முடியுமேற் செய்துபாரும்.

நாவலரவர்கள் சொந்தக்காரரென்றும் மாணாக்கரென்றும் சொல்லிக்கொண்டும், எழுதிக்கொண்டும், அவர்கள் தருமப்பணத்திற் சம்பளம்பெற்றுச் சீவித்துக்கொண்டும் இருப்பவர், அவர்கள் கருதிய தருமத்தை நிறைவேற்றுதலில், அவர்கள் பொருளையும் தங்காலத்தையுங் கருத்தையும் செலவுசெய்தல் வேண்டும். அங்ஙனமிருப்பத் தங்குடும்பத்தை ஓம்புதலிலும் நாவலரவர்கள் கருதிய தருமங்களைச் செய்பவர் எங்கேயிருக்கின்றார் என்று தேடி அவருக்கு இல்லாத குற்றங்களை ஏற்றி அவர்தருமத்திற்கு இடையூறு செய்ய முயலுதலினுந் தங்காலமுதலியவற்றைக் கழிக்கின்றார். ஆதலால் நாவலரவர்கள் பந்துவர்க்கமாணாக்கர் தாங்குற்றமுடையராயிருந்தும் பிறர்வாழ்வில் மனஞ்சகியாத பெரும் பொறாமைக்காரர் என்றுசொல்லுகின்ற ஒருபெரிய குற்றத்தை விலைகொடுத்து வாங்கி நிலைநிறுத்தி விடுகின்றார் அந்தோ! அறச்சோற்றுக்கடன் கழிக்கவேண்டிய இவர் அதுசெய்யாவிடினும் நாவலரவர்கட்கு அடாப்பழியை உண்டாக்கிவிடலாமா! சுவாமிநாதபண்டிதர் நாவலரவர்கள் பரம்பரை மாணாக்கராய் அவர்கள் கருதிய தருமங்களெவையோ கொள்கைகள் எவையோ அவைகளை உலகமறியஇன்றுவரை தாம் தேடிய பொருள்கொண்டு சலியாது நடத்திவரும் உண்மையை மறைத்துப் பண்டிதரைக் குறை

கூறவந்த அப்பொருமையுடையார் பிறவித்துவான்கள் வாழ்வில் மனஞ்சகிப்பாரா? இவர்க்கு இச்செயலும் பரம்பரையே என்று கூறும் உலகத்தார்வாயை இனி இவர் எவ்வாற்றானும் மூடமுடியாது.

கூஉ. "இவர்கள் செய்கைகளைக் காணுந்தோறெல்லாம் "குதலைமை தந்தை கட் டோன்றிற் பிறந்த—புதல்வன் மறைக்கப்படும்" என்றபடியன்றோ மாணுக்க முறையு மிருக்கவேண்டும் என்று தமியேன் கருதுகின்றேன். இந்தவெளகிகம் தங்களுக்குத்தெரியாத தென்னையோ?" என்றீர்.

தங்கள் செய்கைகளைக் காணுந்தோறெல்லாம் "முதுமை புதல்வன்கட் டோ ன்றிடின் முன்பெற்ற—தந்தை மறைக்கப் படும்" என்றபடியன்றோ ஆசிரியர் முறையும் இருக்கவேண்டுமென்று யாம் கருதுகின்றேம். இந்த வெளகிகமும் அந் தவெளகிகமும் ஏனைய நும்வெளகிகங்களனைத்தும் நன்கு தெரியும்; தெரியாத தொன்றுமில்லை. தெரியாதோ தெரியுமோ என்று பரமாணுப்பிரமாணமாயினும் ஐயுறவேண்டாம். நீர் வருகிறவழியில் நின்று பரீக்ஷைகொடுத்து நுமக்கும் பிறர் தமக்கும் தேற்றப்படும்போது அறிந்துகொள்ளுவீர்.

கூக. "நாவலரவர்கள் வித்தியாசாலை அபிவிருத்தியைக்குறித்த அழுக்காற் றினுலோ? அல்லது அவர்கள் புத்தகங்களை அச்சிட்டுப் பொருளீட்டவேண்டுமெ ன்னும் அவாவினுலோ? அல்லது நாவலரவர்கள் வித்தியாசாலை ஆதிபத்தியத்தை யோ வேறெதனையோ வேண்டிப் பலவாறு வசீகரித்தும் சதாசிவப்பிள்ளையவர்கள் வசப்படாத வெருளியினுலோ? நாவலரவர்கள் தருமத்தை நடத்தினவர்கள் மேல் இன்னுச்சொற்றொடுக்க முயல்கின்றீர்கள்" என்றீர்.

நாவலரவர்கள் யாழ்ப்பாணத்துக் கோப்பாயிலே தாபித்த வித்தியாசாலை அவ் வூரவரொற்றுமையின்மையால் நடைபெறு தொழிந்தகாலத்தில் பொன்னம்பல பிள்ளையவர்கள் தமது ஜெனனவூராகிய கோப்பாய் வித்தியாசாலையை, ஊரபிமா னமும் நாவலரவர்கள் உறவபிமானமும் பற்றி உபாத்தியாயராக அதிலிருந்து பிள் ளைகட்குக்கல்வி கற்பித்து நடைபெறச்செய்ய வேண்டிய உரிமையுடையர்களாக விருந்தும், பொருள்வருவாயில்லை யென்றுகருதி அவ்வித்தியாசாலையை எட்டியும் பாராமற் கிட்டவும் போகாமல் வண்ணுர்பண்ணையிலே போயிருந்துகொண்டு அங் குள்ள வித்தியாசாலையில் பொருள்வருவாய்கருதிப் படிப்பித்துவந்த காலத்தில்,ஒரு சூழ்ச்சியை மேற்கொண்டு,பண்டிதரிடம் வேண்டிக்கொள்ள அவர் மூன்றுமாசம் வரைகோப்பாய் வித்தியாசாலையிற்போய்ப்புண்ணியங்கருதிப் படிப்பித்துவந்தமை யாலும், பருத்தித்துறையில் நாவலரவர்கள் கருத்தின்படி ம-ா-ா-ஸ்ரீ அரிகரபுத்தி ரச்செட்டியாரவர்கள் முதலியோரால் தாபிக்கப்பட்ட வித்தியாசாலைக்குரிய மூல தனமாய் நாவலரவர்களிடத்துக் கொடுக்கப்பட்டிருந்த ௧000 ரூபா அவர்களுக் குப் பிற்காலம் அவர்கள் தருமப்பொருளை ஏற்றுத் தருமத்தை நடத்திவந்தவர் களே கொடுக்கவேண்டிய உரிமையுடையர்களாயிருந்தபடியால், அரிகரபுத் திரச்செட்டியாரவர்கள் பலமுறைவந்து அவர்களிடம் கேட்க அவர்கள் இன்று நாளை என்று காலங்கழித்தமை கண்ட பண்டிதர் அம்மூலதனத்தைக் கொடுத் துவிடல் வேண்டுமென்று கொடுக்குங் கடப்பாடுடையவர்களுக்குப் பலமுறை

தனித்துப் பலநியாயங்களை எடுத்துச் சொல்லிவந்தும் கொடாமையால் அவர்களிடத்து அகப்பற்றை விடுத்தமையாலும், நாவலரவர்கள் கருத்தின்படி திருச்செந்தூரில் ஒருவித்தியாசாலை தாபித்து நடத்திவரலாலும், காவிரிப்பூம் பட்டினத்தைச்சார்ந்த மேலையூரில் அறுபத்துமூவர்வித்தியாசாலை யெனப்பெயரிய ஒரு கல்லூரி தாபித்து அதனைநிலைபெறச்செய்தற்கு வேண்டிய முயற்சிசெய்துகொண்டிருத்தலாலும், கைமாறுகருதாது சைவப்பிரசாரணஞ் செய்தலாலும், பிறவித்துவான்களைக்கொண்டு செய்வித்தலாலும், ஓழிவுள்ள நேரத்தில் கற்கவிரும்புபவர்கட்கு வித்தை கற்பித்தலினாலும், சிறந்த நூலுரைகளைப் பரிசோதித் தச்சிடுதலினாலும், நாவலரவர்களாற் பரிசோதிக்கப்பட்டனவும், தொகுக்கப்பட்டனவுமாகிய நூல்களையுஞ்சிலபுதியகுறிப்புரைகளோடு உயர்ந்த காகிதத்தில் சிறந்த எழுத்திற் பதிப்பித்து ஏழைகளும் மகிழ்ந்துவாங்கிப்படிக்கும்படி விலையை அதிகப்படுத்தாமற் கொடுத்து வருதலாலும், அறவு மெளியவர்களுக்கு விலையின்றிக் கொடுத்தலாலும், இந்தியாவிலேயுள்ள பல சைவசபைகளை எவ்வெவ்விதத்தால் ஊக்கவேண்டுமோ அவ்வவ்விதத்தால் ஊக்கிவருதலாலும், இலங்கையிலும் இந்தியாவிலு முள்ள தமிழ் வித்தியாசாலைக்காரர்கள் தங்கள் வித்தியாசாலைகளில் நடத்தும் வருஷாந்தப்பரீக்ஷையின் பொருட்டுப் பிள்ளைகளுக்குப் புத்தகப்பரிசளிக்கவேண்டு மென்று கேட்கும் காலங்களில் தடைசொல்லாது அளித்து வருதலாலும், தர்க்ககுடாரதாலுதாரியவர்கள் சிதம்பரத்தில் நடத்திய சித்தாந்தவித்தியாசாலையின் பொருட்டு அவர்கட்கு மாசந்தோறும் போசனத்தின்பொருட்டு வேண்டப்பட்ட பொருள் கொடுத்தமையாலும், தமிழ்க்கல்விவிருத்தி சமயவிருத்திக்காக முன்வந்த பலவித்துவான்களுக்குப் பொருளுபகரித்தமையாலும், சதாசிவப்பிள்ளையவர்களுக்கு எழுதிய கடிதத்தில் "உண்ணாதும் உடாதும் இரசமுஞ் சாதமும் நான்குமுழவேட்டியும் உண்டுடுத்துக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தபொருள் வீண்போகாமல் நிலைபெறும்படி செய்துவைக்கவேண்டும் என்னுங் கருத்துத்தோன்ற வற்புறுத்தி எழுதியிருத்தலாலும், இன்னோரன்ன பிறவற்றாலும், நாவலரவர்கள் வித்தியாசாலை அபிவிருத்தியைக்குறித்துப் பண்டிதருக் கழுக்காறின்மையும் மகிழ்ச்சிப் பெருக்காறுண்மையும் பெறப்பட்டன.

இலங்கையிலும் இந்தியாவிலும் தம்முடன் நட்புக்கொண்டவர் முதலிய எத்திறத்தார்க்கும் பண்டிதர் காலம்பார்த்துத் தம்மாலியன்ற பொருளுதவி முதலியனவற்றை அக்காலந்தொடங்கி இக்காலம்வரையும் செய்துவருகின்றாரேயன்றித் தாம் அவர்களிடத்துச் சிறிதேனும் பொருள்பெறக் கனவிலும் நினையாமைக்குப் பொன்னம்பலபிள்ளையவர்கள் கடிதமும், அவர்கள் மாதுலரவர்கள் கடிதமும் தமையனார் கடிதமும், ஸ்ரீமத் சிவசம்புப்புலவரவர்கள்பாடிய பாக்களும், மதுரைத் திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் பண்டிதரைக் கொண்டு பிரசங்கஞ் செய்வித்தகாலத்திலே சபையிலே பலருங்காணத் தம்மிடத்திருந்த ௩௦௦ ரூபா விலையுள்ள கெவுரிசங்கரவுருத்திராக்க மாலிகையைப் பரிசாக அளிக்கச்சபையிலேற்றுக்கொண்டு கும்பகோணத்துக்குவந்தவுடன் திருப்பி அனுப்பி அதனை மகாசந்நிதானத்துக்குத் தெரிவித்தற்பொருட்டுப் பண்டிதர் அனுப்பியகடிதப்பாக்களும், அக்கடிதத்துக்கு மகாசந்நிதானம் அனுப்பிய பதிற்றிருமுகப்

பாக்களும், ஸ்ரீமத். சிவப்பிரகாசபண்டிதரவர்கள் பாக்களும் விரிவஞ்சிவிடுக்கப் பட்ட அவைபோன்ற பிறபாக்களும் போதிய சான்றாயிருத்தலால் பொருளவாவி ன்மையும் பொருள்கொடுத்தலுண்மையும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணத்து உடுப்பிட்டி. ஸ்ரீமத். அ. சிவசம்புப்புலவரவர்கள் ம-ா-ா-ஸ்ரீ. சுவாமிநாதபண்டிதரவர்கள்மீது பாடிய சிறப்புக்கவிகள்.

ஆசிரியவிருத்தம்.

ஆத்தர்கள் சிகாமணி நயிட்டிகப் பிரமசாரி யத்தனைக் கொருகட்டளை
யனைவரு மதித்தசின் னத்தம்பி யீட்டியநல் லரியதவ வித்துறும்விளை
வமலபர முத்திநிலை தேற்றிடுஞ் செய்யசித் தாந்தசா கரம்பிறோ
ராதியெப் பொழுதினு மொதுங்கிடும் வடதாரு வளவிலாச் சுகுணமேரு

எத்திடுங் கங்கைகுல மானக்ஷீ ரோததி யெழுந்தொளிரும் விம்பமதிய
மிதையங் களித்துமுற்* சிலபகற் கற்பித்த வெம்மனோர்க் குற்றகளைகண்
யாக்கையுளம் வாக்கிவையொர் போதினும் பகிர்வுறா வேற்றமிகு பரமயோகி
யெண்குணத் தைம்முகன் சமயமெய்ப் பத்திமைக் கென்றென்று மொருவரம்பு

மீத்தகு குறண்மகன் றந்தைக் கெனச்சொன்ன மெய்ம்மொழிக் கியலுமேற்கோள்
வியனுலக மொத்தயாழ்ப் பாணத்து வண்ணையில் விளங்குதூண் டாவிளக்கம்
விதிதருமெய்ந் நூல்களைச் சைவநிலை தேற்றவெளி விட்டவித் தகமாண்குரு
மேனிலையின் மக்களுற வித்தியா சாலைநிரு பித்தசுக புண்யபிரபு

மேத்திய விசேஷதீ க்ஷாநிலை யருச்சனை விடாவிரத சற்பாத்திர
மேவின ரிளைப்பொழிய வோவறப் பெருகிவெளி மேற்குலவு கருணைவெள்ளம்
விழியறன்மெய்ந் நீற்றினைச் சழுவிட வருட்பாடன் மெய்யமுத நுகரொர்தெய்வ
மேதினிக் குயிர்சாமி நாதபண் டிதனென்றும் வேலனரு ளாற்பொலிகவே. ()

கலித்துறை.

யாரும் புரப்பவ ரின்மையின் மூப்பினில் யான்பிணியு
மீருங் கொடிய மிடியு மடவுள் ளினைபொழுதிற்
சாரும் புகழ்ப்பண் டிதன்சாமி நாத தயாநிதியைக்
கூருஞ் சுடரயில் வேலோன் றிருவருள் கூட்டியதே. (க)

* ஸ்ரீமத். அ. சிவசம்புப்புலவரவர்கள். ம-ா-ா-ஸ்ரீ. சுவாமிநாதபண்டிதரவர்கள் ஆசிரியராகிய ஸ்ரீமத். வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளையவர்களிடம் ஒருகாரிய முடித்தற்பொருட்டு வந்தகாலத்தில் அவர்கள் சென்னபட்டணத்துக்குப் பிரயாணப்பட்டிருந்தபடியால் தாம் வரும்வரை தம்மிடம்கற்ற சுவாமிநாதபண்டிதரவர்களுக்கும், ம-ா-ா-ஸ்ரீ சிவகுருநாதபிள்ளையவர்களுக்கும் புலவரவர்களைப் படிப்பிக்கும்படியும்தாம் சென்னையினின்று மீண்டவுடன் அவர்கள் கருமத்தை முடித்துவிடுகிறதாகவும் சொல்லிவிட்டுவந்தார்கள். அவ்வாறே மூன்றுமாசம்வரை புலவரவர்கள் நல்லூரிலிருந்து படிப்பித்தார்கள். அதனாற்றான் 'சிலபகற் கற்பித்த வெம்மனோர்க் குற்றகளைகண்' என்றார்.

எல்லாருங் கைவிடக் காணி பொருள்களை யீனமனப்
பொல்லார் கொளத்தஞ்ச மின்றிப் புலம்புறும் போதெதிரா
நல்லார் தொழும்பண் டிதன்சாமி நாத நரேசனின்சொற்
சொல்லாட வுய்த்த குகனருளேமெய்த் துணையெனக்கே. (உ)

போதொன்றி ஞெவெப் பொழுதினு நொந்து புலம்பறத்திற்
றீதொன் றுறும லிடைவந்து காத்தது செய்யவள்ளைக்
காதொன்று வாள்விழி வள்ளி மணாளன் கருணையென்ப
தீதொன்றென் னெஞ்சினை நீங்கல தேற்குறை யாவுளவே. (ங)

நன்றியைப் பேணிடும் பண்டிதன் மெய்ச்சாமி நாதனுளத்
தொன்றிய பேரரு ளாலிடை நேர்ந்தின் றுரைத்தவின்சொ
லென்றிகைப் பைச்செற்ற தின்னவற் போல வினுஞ்சிலரைக்
குன்றடும் வேலவன் சேர்த்திடு மேலென் குறையெனக்கே. (ச)

பன்னா ளிவட்கண் டிலஞ்சாமி நாதமெய்ப் பண்டிதனை
யென்னா ளினிக்காண்ப மென்றெய்க்கு மேழைதன் னெண்ணத்தையுள்
ளுன்னு வறுமுக னோர்கூட்டி னுனவ னேங்கருளை
யென்னாளு மெய்யென்ற வாத்தர்கள் வாக்கினை யென்சொல்வனே. (ரு)

வற்ரு வருட்பண் டிதன்சாமி நாதன் வளச்சென்னைநின்
றுற்ரு னிவணென யாழ்ப்பாணத் தூர்முற்று மோகைதழீஇ
நற்ருரை வான்முகிற் கண்ட மயிலிய னண்ணியிடிற்
பெற்ருருந் தவ்வையு முற்ற களிப்பெவர் பேசுவரே. (சு)

மதுரைத்திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துக்கு,ம-ா-ா-ஸ்ரீ சுவாமிநாதபண்டிதரவர்கள் அனுப்பியகடிதப்பா.

காயரு குடிலை முன்னுக் கழறுமந் திரங்க ளெல்லாந்
தாயொரு வடிவு கொண்டா லன்னதோர் தகைமைத் தாய
வோமுத லொன்றத் தோடென் றுரைத்தருள் தேவா ரத்தை
நாமுறத் தந்த காழித் தலைவரை நயந்து வாழ்வாம். (க)

ஞானசம் பந்தர் தாளை நாடொறு நாவிற் போற்றி
யூனசம் பந்த மெல்லா மொழித்திடு முணர்வா னுன்று
மானசம் பந்த முற்ற மணிக்குரு ராய பாத
மீனசம் பந்தம் பாற்ற வெண்ணியே யெழுதல் காண்க. (உ)

ஆசியொன் றதனை வேட்டே னவ்விடத் தூற்ற மற்றைக்
காசகல் பொருள்க ளெல்லாங் கதிதரு மடத்தி லென்றும்
வாசமா யுறுதல் வேட்டேன் வழங்கிய கண்டி தன்னை
நேசமாச் சபையி லேற்றே னேரினின் மறுக்க லாற்றேன். (ங)

மடத்தினிற் பொருளை வேட்டு வந்துவந் துழல்வே னல்லன்
றிடத்தினி லருளு மாசி தன்னையே தேடி வந்தேன்
கடத்தினிற் காசு தேடிக் கவிகைசெய் யாமற் பற்ப
லிடத்தினிற் புதைத்து வைத்திங் கிழந்திடு கருத்த னல்லேன். (௪)

பொருளினைப் பொருளதாகப் புந்தியிற் கொண்டு மிக்க
வருளினை யிழந்து நாளு மறப்பொருள் வெளவ வெண்ணு
மருளினை யுடையார் போல மதித்திடன் மாண்ட ஞானத்
தெருளினை யுற்ற சீர்த்தித் தேசிக மணியே தேர்வாய். (௫)

அன்பினாற் செய்த சீரை யவமதி செய்யா தேற்று
மன்பினான் மகிழ்ச்சி யுற்றேன் மாண்டரு கண்டி தன்னை
யின்பினு லுன்பா லுய்த்தே னேற்றருள் செய்வா யெந்தாய்
முன்பினாற் பெற்ற தாக முன்னியே வாழு கின்றேன். (௬)

என்றுநின் னருளு மன்பு மீறில தாக வென்மேற்
சென்றுநின் றிடவே செய்த றிருவநின் பரம தாகுங்
கன்றகல் புனிற்றா வென்னக் கருதியே யுன்றன் பாத
மொன்றிநற் பணிகள் செய்த லுழுவலென் பரம தாகும். (௭)

வாழி கண்டிகை வண்டிரு நீற்றொளி
வாழி தேசிகர் மற்றவர் மன்னருள்
வாழி மாமட மாதவ ராலயம்
வாழி காழியர் மாமலர்ப் பாதமே. (௮)

மதுரைத்திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் ம-ள-ள-ஸ்ரீ. சுவாமிநாதபண்டிதரவர்களுக்கு அனுப்பிய திருமுகப்பா.

சீர்பூத்த பலநலஞ்சேர் தேவாரந் திருக்கோவை சிவஞா னன்பர்
பேர்பூத்த புராணமுத லரும்பெரிய நூலனைத்தும் பெருமை வாய்ந்த
பார்பூத்த தமிழ்வலபொன் னம்பலன்பாற் பயின்றவையின் பரந்த வுண்மை
யோர்பூத்த நன்மதியு நன்னடையு மேன்றவையி லேற்ற முற்று. (௧)

பாலொடுதேன் கலந்தமுதச் சுவைகூட்டி மணமிகுந்த பாகுஞ் சேர்த்து
நாலுடைய வகைச்சொல்லி னுருவாக்கிப் பொருண்மிகுந்து நயக்கச் செய்து
நீலமுறுங் கனம்பொழிந்தா லெனப்புலவர் மனங்களியி னிறைந்து நிற்கச்
சீலமுடன் பிரசங்கங் கவிபொழியு நன்றாவின் றேர்ச்சி கொண்டு. (௨)

மண்டலமீ துற்றபொரு ளனைத்தையுநீர்த் திரையெனவே மதித்து மாட்சி
கொண்டதொரு சிவஞான மெனுஞ்செல்வந் தனைமெய்யாக் குறித்து நீல
கண்டனடி யாரையவ னெனயாண்டு நினைத்தவரைக் கண்போற் பார்த்துக்
கண்டிகையுந் திருநீறும் பூண்சுவாமி நாதவெமின் கனிந்த வன்பா. (௫)

சிந்தைமகிழ்ந் திவண்விடுத்த பத்திரிகை நிருபமது சேரப் பெற்றே
மெந்தவகைப் பொருளளித்து நீயேற்கா யெனத்தெளிந்தே யிறைவன் சின்னந்
தந்திடினே மறுக்காது மகிழ்ந்துகுருப் பிரசாதந் தாங்கு வாயென்
றந்தவகை யளிக்கவதை யேற்றுப்பின் னனுப்பியது மடையப் பெற்றேம். (௪)

மெய்த்தவமே கொண்டொழுகும் வித்துவசி காமணியே விரிநீர்ப் பாரி
லித்தகைய வருமையுறுங் குணங்கொண்டு வாழ்வார்க ளில்லை யில்லை
பத்தரெளி யவனென வெம்பெருமா னின்னருளும் பரமெய்ஞ் ஞான
வத்தனமும் பெற்றுமகிழ்ந் தினிதிருக்கச் சிவபெருமா னருள்செய் வாரே. (௫)

யாழ்ப்பாணத்து நீர்வேலி. ஸ்ரீமத். சிவப்பிரகாசபண்டிதரவர்கள் ம-ா-ா-ஸ்ரீ சுவாமிநாதபண்டிதரவர்கள்மீது பாடிய சிறப்புக்கவிகள்.



மேற்படி வெண்பா.

சீர்த்திதனி வேளடியிற் சேர்நண்பு தாவிலா
வோர்ப்பறிவு யூகங்க ளோங்குதமிழ்ப்—பேர்ப்புலமை
நாதசிவ நேசர்தமி ணல்லதய வாய்ப்பேசும்
ஸ்ரீசுவாமி நாதபண்டி தர்.

அண்ட ரமுத மனபா ஷியத்தை யவனியுள்ளோ
ருண்டு பெரும்பய னுற்றிட வச்சி லுதவியநற்
பண்டித சிங்க சுவாமிநா தப்பெயர் பற்றுமண்ணு
லெண்டிசை தன்னி லெவர்நின் குணங்கட் கெதிர்நிற்பரே.

விருத்தம்.

வண்ணைநகர் தன்னிலவ தரித்தே யிந்த
வையகத்திற் றமிழ்வழங்கு தேய மெல்லா
மெண்ணில்புகழ் புண்ணியங்க ளிலங்க வோங்கு
மெழில்கொள்சுவா மிநாதபண்டி தப்பேர் பூண்ட
தண்ணளிதா னம்பொறுமை தயவே யாதி
தக்கபெரு மணிகளன்றிக் கலன்கள் பேணு
வண்ணலே கற்பகநேர் வள்ளா லுன்ற
னன்புதனை யென்றுமெனக் கருளு வாயே.

பொன்னம்பலபிள்ளையவர்களைச் சிதம்பரவித்தியாசாலைக்கு வரும்படி பண்டிதர் யோசனைசொன்னபடியாலும், அவர்களுக்கு ஆதிபத்தியம் கொடுக்கும்படி சதாசிவப்பிள்ளையவர்களுக்குப் போதித்தமையாலும், அப்போதனைக்கு அவர்கள் உடன்பட்டுப் பொன்னம்பலபிள்ளையவர்களுக்கு உயிலெழுதியபோது சிலர் தடுக்கவும் அதனைக்கேட்க வொட்டாது செய்து உயிலை றிச்சிஸ்டர் செய்வித்துப் பண்டிதர் தாமும் ஒரு சாட்சியாக அவ்வுயிலில் கைச்சாத்திட்டிருத்தலாலும், தமது ஒரு வித்தியாசாலையின் ஆதிபத்தியத்தை நடத்துதற்கே காலம்பெறுமையாலும், விரிவஞ்சி விடுக்கப்பட்ட பிறகாரணங்களாலும் நாவலரவர்கள் வித்தியாசாலை ஆதிபத்தியத்தில் விருப்பின்மையும் சுயாதிபத்தியமுண்மையும் பெறப்பட்டன.

வேறெதனையோ என்பது நுமக்கும் விளங்கவில்லை நமக்கும் விளங்கவில்லை. ஆதலால் அதுவும் இவைபோலக் கற்பனையே. விளக்குவீராயிற் சமாதானம் எழுதப்படும்.

பொன்னம்பலபிள்ளையவர்கள் பண்டிதர் சிதம்பரவித்தியாசாலை வரும்படிக்குக் கேடுசெய்கின்றார் என்று பலரிடத்துஞ் சொல்லித்திரிந்தமையால், அவர், நாவலரவர்கட்குப்பின் அவ்வித்தியாசாலையையும் யாழ்ப்பாண வித்தியாசாலையையும் நடத்தினவர்களாலேயோ என்னாலேயோ அவற்றிற்குக்கேடு விளைந்ததென்பதை ஆராய்ந்து அறிவிக்கின்றாம் என்றார் என்பது வெளிப்படையாக விருக்க, நீர்

அழுக்காற்றினலோ? அவாவினலோ? வசப்படாமையாலோ? என்று ஒருகாலத்துமில்லாத கடாக்கள் நடாத்தினமையால் நும்மியற்கை இத்தன்மைத்தென உலகிற்கறிவுறுத்திவிட்டவராயினீர்.

சென்னைவித்தியாநுபாலனயந்திரசாலையைப் பண்டிதருக்கு வாசஸ்தானமாகக் கொடுக்கப்படாதென்றும், நாவலரவர்கள் குருபூசைக்கு அழைக்கப்படாதென்றும் பொன்னம்பலபிள்ளையவர்கள் சதாசிவப்பிள்ளையவர்கட்குச் சொல்லித்தடுத்தவிடத்தும் அவர்கள் அச்சொல்லைச்சிறிதும் பொருட்படுத்தாமல் தமது யந்திரசாலையை வாசஸ்தானமாகப் பண்டிதருக்குக் கொடுத்தமையாலும், குருபூசைக்கு அழைத்தமையாலும், பண்டிதர் பாஷியம் அச்சிட்ட அருமையையும் பெருமையையும் மிகவியந்து கடிதம் எழுதினமையாலும், பண்டிதர் சிதம்பரம் போனகாலங்களில் தாமே ஆளனுப்பி யழைப்பித்து இரகசியமானவிஷயங்கள் பேசிவந்தமையாலும், நாவலரவர்கள் புத்தகங்களை ஐந்துவருஷகாலம் அச்சிட்டுவரவும் ஒன்றும் பேசாதிருந்தமையாலும், பொன்னம்பலபிள்ளையவர்கள் தர்க்ககுடாரதாலுதாரியவர்கள் சொத்தை எடுத்தபொழுது அவர்கள் பூசித்த தக்கிணமூர்த்தி விக்கிரகத்தைச் சதாசிவப்பிள்ளையவர்கள் கொடுத்ததென்று அவர்கள்மீது கொண்ட கோபத்தால் எடுக்காதுவிட, சதாசிவப்பிள்ளையவர்கள் பண்டிதரை எடுத்துக்கொள்ளும்படி சொன்னபடியாலும் பொன்னம்பலபிள்ளையவர்கள் பண்டிதருக்கு அனுப்பிய கடிதத்தில் சதாசிவப்பிள்ளையவர்கள் புத்தகங்களை அச்சிடும்படி பண்டிதருக்கு அநுமதிகொடுத்தார்கள் என்பதுபுலப்பட எழுதியிருத்தலாலும் வசப்படாமை பொய்யென்பதும் வசப்பட்டமை மெய்யென்பதும் பெறபபட்டவாறு காண்க.

நாம் சொல்வனவற்றை மறுக்கத் தர்க்ககுடாரதாலுதாரியும் சதாசிவப்பிள்ளையவர்களும் இனி எழுந்து வரப்போகின்றார்களோ? நாம் ௩௧000 ரூபாத் தருமச்சொத்துடையேம். ஆதலால் நாம் சொல்வனவெல்லாம் மெய்யென்று யாவரும் நம்புவார்கள் என்பது உமதுகருத்து. அக்கருத்தை எக்காலத்தும் மொழித்துவிடும். இன்றேல், "யாகாவாராயினு நாகாக்க காவாக்காற்-சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்னுங் குறட்கு இலக்கியராவீர்.

௩௪. "தாங்கள் இனியேனும் அழுக்கா றவாவெகுளி யின்னச் சொன்னான்கு—மிழுக்காகி யன்ற தறம். என்னும் பொய்யாமொழியை நினைத்துப் பிறராக்கத்தின்கண் அழுக்காறு செய்யாது" என்றீர்.

நாம் ட்றஸ்ட்டிப்பத்திரத்தால் ஆதிபத்தியம்பூண்டு வேதனம் பெற்றுச் சீவிக்கப், பண்டிதர் கல்விகற்பித்தலினல் பொருளீட்டி வித்தியாசாலைதாபித்துச் சுதந்தர ஆதிபத்தியமுடையராய்ப் பெரும்புண்ணியத்தையும் புகழையும் சம்பாதிக்கின்றாரே. அவரை நியமிப்பார் யார்? நீக்குவார் யார்? இவ்வியல்பினையுடைய ஆதிபத்தியத்தை பெறுதற்கு முற்பிறப்பில் நாம் தவஞ்செய்யவில்லையே என்று மனம் புழுங்கிப் பண்டிதர்மீது அழுக்காறுற்று, அவர் நற்றருமங்கட்கும் நற்செய்கைகட்கும் இழுக்குப்பேசிப் பந்துவர்க்கங்களைப் பேணுதற்குத் தருமப்பொருள்மேல் அவாக்கொண்டு அதனல் வெகுளிமிக்கு அதனல் இன்னச்சொற்றொடுத்துலைகின்றவர் நீரன்றிப் பண்டிதரல்லர். ஆதலால், "அழுக்காறுடையார்க் கதுசாலு மொ

ன்னோர்—வழுக்கியுங் கேடீன்பது.'' ''அழுக்காறெனவொருபாவி திருச்செற்றுத் தீயுழி யுய்த்து விடும்'' என்னும் உத்தரவேதச்சத்தியமொழிகளை உற்றுநோக்கி உய்திபெறுதிர்.

''நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.''

''வெவ்வினை செய்யு மாந்த ருயிரொனு நிலத்து வித்தி
யவ்வினை விளையு ளுண்ணு மவ்விடத் தவர்க டுன்ப
மிவ்வென வுரைத்து மென்று நினைப்பினும் பனிக்கு முள்ளஞ்
செவ்விதிற் சிறிது கூறக் கேட்டியாற் செல்வ வேந்தே.''

என்றற் றொடக்கத்தனவாகிய வுறுதிமொழிப் பிரமாணங்களையுள்ளத்தமைத்துப் பன்முறை யாய்ந்து பிறர்க்குததீவினைசெய்து நிரயம்புககாற்றொணுத்துயருறாது செந்நிலை நின்று சீர்பெறுவிராக.

௩௨. ''அதற்குவேண்டும் பொருளை அறநெறியால் ஈட்டுங்கள்'' என்றீர்.

கல்விகற்பித்துப பொருளீட்டித் தருமஞ்செய்தலும், தருமப்பொருளைப் பந்துக்களுக்காக்காது தருமத்திற்கே ஆக்குதலும அறநெறியன்றாயின், பின்னர் அறிவைமயக்கும் பொருள்களாகிய சாராயம் விற்றலும், தருமபபொருளைத் தமக்குந் தம் பந்துக்களுக்குமாக்குதலுந்தாமோ வறநெறி. ஆமென்பீரேல் இனி அந்நெறியைக் கடைப்பிடித்து ஈட்டி உய்திபெறுவர் பண்டிதர்.

௧௮௬௭௵ டிசம்பர்மீ ௩௧வ சதாசிவபபிள்ளையவர்கள் எழுதின உயிலில் ''யாழ்ப்பாணத்துக் கோபபாய் தெற்கில் ஆறுமுகநாவலரவர்களால் தாபித்து நடத்தப்பட்டும, இபபொழுது என்னால் நடத்தபபட்டும் வரும் சைவபபிரகாசவித்தியாசாலையையும் சிதம்பரசைவபபிரகாசவித்தியாசாலை வரும்படியைக்கொண்டு நடத்தி அதனை விருத்திசெய்து வருதல்'' என்றும், ''மேலும் எனது எக்ஜிக்கியூட்டராகிய ச. பொன்னம்பலபிள்ளை மேற்சொல்லப்பட்ட எனது புத்தகங்களை விற்றுவரும் பணத்திலிருந்து யாழ்பபாணத்து நல்லூரிலிருந்து சிவபதமடைந்த எனது தமையனாராகிய சுபபிரமணியபிள்ளையவர்களுடைய புத்திரியின் புத்திரர்கள் இருவருக்கும் அவர்களுக்கு வயசுவந்தபின் தனித்தனி ௫00 ரூபா கொடுக்கவேண்டும்'' என்றும் எழுதியிருக்கின்றார்களே. இவ்விருவிஷயங்களும இபபொழுது எழுதிய ட்றஸ்ட்டிப்பத்திரத்தில் நீக்கப்பட்டனவே. அதற்குக் காரணமென்னை? சதாசிவப்பிள்ளையவர்கள் அ௬ ம் வயசில் கருவிகள் குறைந்திருந்தபடியாலும், மாணவேதனைக்குட்பட்டிருந்தபடியாலும், புத்திமிகத் தெளிவடைந்திருந்தபடியால் இறந்த அன்று எழுதிய ட்றஸ்ட்டிப்பத்திரத்தில் நீக்கிவிட்டார்போலும். இதுவும் பொருளீட்டும் அறநெறிதானே.

சிதம்பரத்திலே மாலைகட்டித்தெருவிலுள்ளதும், சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலையைச் சார்ந்ததுமாகிய வீட்டுக்குத்தெற்கெல்லை உயிலில் உமையாள்வீட்டுக்குத் தெற்கென்றும், சதாசிவபபிள்ளையவர்கள் சிவபதமடைந்த அன்று எழுதிய ட்றஸ்ட்டிபபத்திரத்தில் மதுரைமடததுநிலத்துக்குத் தெற்கென்றும் எழுதியிருத்தலும் பொருளீட்டுமறநெறியில் ஒன்றுதானே.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

உயிலில் தருமபரிபாலகர் தாம்செய்யும் வேலைகளின்பொருட்டு ௩0 ரூபா வேதனம் எடுத்துக்கொள்ளலாம் என்று எழுதியிருக்க, மரண ட்றஸ்ட்டிப்பத்திரத்தில் ௩0 ரூபா விருப்பமிருந்தால் எடுத்துக்கொள்ளலாம் என்றெழுதிய சூழ்ச்சியும் பொருளீட்டும் அறநெறிகளுள் ஒன்றுதானே.

உயிலில் காட்டிய வெள்ளிப்பாத்திர முதலியவற்றை ட்றஸ்ட்டிப்பத்திரத்தில் காட்டாது விட்டது மறநெறியாற் பொருளீட்டுதலன்றோ.

தருமபரிபாலகர் தஞ்சுற்றத்தாரை அழைத்து வித்தியாசாலை வீட்டில் இருத்திக்கொண்டு வித்தியாசாலைப் பரிபாலிப்பிற்காகப் போக்கவேண்டிய காலத்தி லொருகூற்றை அவர்களைப்பரிபாலித்தற்காகப் போக்குதலும் மறநெறியாற்பொருளீட்டுதலன்றோ.

இவையெல்லாம் நுமக்கும் நும்மின்மறைந்துநிற்போர்க்கு மறநெறியென்று தோன்றும்போது பண்டிதர் நாவலரவர்கள் புத்தகத்தை அச்சிட்டு அவர்கள் கருதிய தருமத்திற்குச் செலவுசெய்தல் அறநெறியென்று தோன்றாததென்னை?

உயிலுக்கும் ட்றஸ்ட்டிப்பத்திரத்திற்குமுள்ள மாறுபாட்டை யுற்றுநோக்கின் ஒருவரே இரண்டையும் தெளிந்தபுத்தியோடு எழுதினாரல்லர் என்று அநுமிதிக்கப்படும்; போலியாய்ச் சில சமாதானம் புகலினும் அவை அறிஞர் முன்னிலையிற்பயன்படும் வன்மையினவல்ல என்று கூறும் உலகினர் என்கருதினரோ?

இருபத்திரங்களையும் அத்தியாவசியகம் பார்க்கவேண்டும் என்று அனேக சைவாபிமானிகள் விரும்புதலால் அவை பின்னர் அட்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

௩௬. "நாவலரவர்கள் சுதந்தரவுரிமைப் புத்தகங்களை அச்சிட்டு நாவலரவர்கள் தருமத்தைக் கெடாதேயுங்கள்" என்றீர்.

அத்தருமத்திற்கு ௩௧000 ரூபாவுக்கு அசைவற்றதும அசைவுள்ளதுமாகிய தாவரசங்கமச் சொத்துக்களிருத்தலாலும், ட்றஸ்ட்டிப்பத்திரத்தில் காட்டப்படாத புத்தகங்கள் ௨0000, ௩0000 ரூபாவுக் கிருத்தலாலும், கிரண்டுப்பணம் இருத்தலாலும் இன்னும் அதுபோலச் சிலவித்தியாசாலை தாபித்துநடத்தலாமே. அதற்குக்கேடு எவ்வாற்றானும் வாராது. அவ்வித்தியாசாலைக்கு அத்தொகைப் பொருளிருத்தலைக் கண்டுதான் நாம் ஒருதொகைப் பொருளெடுத்தால் யாரறியப்போகிறார்கள் என்று சிலர் தாம் எடுத்துத் தம்மிச்சைப்படி செலவுசெய்தார்கள். பலவிடங்களிலும் பலரும் நாவலரவர்கள் புத்தகங்களை அச்சிட்டுவிற்று அவ்விலைப்பொருளை எடுத்துத் தமக்குபயோகப்படுத்தினார்கள் படுத்துகின்றார்கள். இவைகளையுற்றுநோக்கிய பண்டிதர் நாவலரவர்கள் கருத்துக்குமாறாக இவர்கள் இவ்வாறு செய்கின்றார்களே; நாம் அவர்கள் கருதிய தருமத்துக்கு அவர்கள் புத்தகங்களை ஏன் உபயோகப் படுத்தப்படாது என்று கருதி அவற்றை அச்சிட்டு நாவலரவர்கள் கருதிய யாசாலை தருமத்தை விருத்திசெய்துவருகின்றார்கள். சிதம்பரவித்தியாசாலைத்திக்குக் கேடுசெய்வோர், சிதம்பரவித்தியாசாலை வரும்படியிலிருந்து யாழ்ப்பாணத்துக் கோப்பாய் வித்தியாசாலையை நடத்தாது அதனைத் தாம் தம்முன்னோர் பட்ட கடன்பொருட்டும் பிறவற்றின் பொருட்டும் செலவுசெய்துவிட்டு, சுவாமிநாதபண்டிதர் சிதம்பரவித்தியாசாலை விருத்திக்குக் கேடுசெய்கின்றார் என்று அந்த

ரங்கவிஷயம் தெரியாத உலகத்தவரை மயக்கிவிடலாம் எனமுயன்று திரிவோரே. இவர்செய்யும் இந்திரசாலம் மகேந்திரசாலங்கள் எல்லாம் வடவாக்கினியின் முற்பட்ட சிறுபூளை போல நமது அதிப்பிரபல நியாய ஒளிமுன் அழிந்தமை காட்டினும். இன்னு மின்னுங் காட்டுவோம்.

திருச்செந்தூர்ச் சுப்பிரமணியவித்தியாசாலைக்குக் குறைண்டில்லை. முதற்பொருளோ ௭000. ரூபா. அங்ஙனமாகவும், பொன்னம்பலபிள்ளையவர்கள்பண்டிதரவர்களுக்குப்பொருளுபகரித்துவந்த நாட்டுக்கோட்டை நகரத்தார் இருவரை இனி அது செய்யாதவண்ணந் தடுத்துவிட்டதாகவும், இன்னுமொருவர் இருக்கிறார் அவரையும் தடுத்துவிடுவேன் என்றும் யாழ்ப்பாணமுதலிய தேசங்களிற் சொல்லித்திரிகிறதாகத்தெரிகிறபடியால் இனி அந்நகரத்தார் பிள்ளையவர்கள் திருவாக்கை அரிச்சந்திரவாக்காகக்கொண்டு பண்டிதருக்கு உதவிபுரியார்போலும். ஆதலால் நாவலரவர்கள்கருதிய வித்தியாசாலைத்தருமத்துக்குப் பெருங்கேடு செய்பவர் சுந்தரரோ நும்மைப்பிரேரிப்பவரோ; பண்டிதரல்லர்.

குளிக்கப்போய்ச் சேறுபூசுபவர் தருமபரிபாலனஞ்செய்யப்புகுந்து அப்பொருளைத் தமது கடன்முதலியவற்றிற்கு உபயோகப்படுத்துபவரே யென்று கடைப்பிடிக்க.

௩௨எ. "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.
பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.
கெடுவல் யானென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்."

என்றகுறட்பாக்களை யாருக்கு எடுத்துக்காட்டினீர்!

இன்னோரன்னவை யெல்லாம் "அந்தவுரை மீண்டவன்கேட் டாங்கவனை நகைத்துரைப்பா னரக்க ரேனுஞ்—சிந்தனையில் விரகெண்ணார் செருமுகத்தில் வஞ்சனையுஞ் செய்யா ரையா—வெந்திறல்கூர் துணைவருக்கு விடமருத்தார் நிரைக்கழுவில் வீழச் சொல்லா—ருந்துபுன லிடைப்புதையா ரோரூரி விருப்பகற்ருருரையுந் தப்பார்." "செழுந்தழல்வாழ் மனைக்கொளுவார் செய்நன்றி கொன்றறியார் தீங்கு பூணு—ரழுந்துமனத் தழுக்குறா ரச்சமுமற் றருளின்றிப் பொய்ச்சூதாடார்—கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங்கான மடைவித்துக் கொல்லவெண்ணு—ரெழுந்தமரின் முதுகிடா ரிவையெல்லா மடிகளுக்கே யேற்ப வென்ருன்." எனக்கடோற்கசன் கூறியாங்கு அடிகட்கே தகுவ. பண்டிதர்மாட்டு எள்ளத்தனையும் சாராவென்ப தொருதலை. நீர் பொருளவாமேலீட்டால் யாது பிதற்றினும் பிதற்றுக. அது பண்டிதர்பா லென்றுஞ் சாராதென்க. நாவலரவர்கள் தமது ஆவேதனத்தில் பொதுத்தருமத்தை நடத்தப்புகுங்கால், அதுபற்றிப் பிறர்செய்யுந் தூஷணங்களெல்லாம் பூஷணங்களேயாம்" என்று எழுதியிருக்கின்றார்களே. இதனால் அவர்களையுந்தூஷித்தார்கள் என்பது பெறப்பட்டதே. அவர்களைத்தூஷித்தற்குக் காரணமென்னை? "நன்றுகொண்டார்க்கு வரு மிடையூறு நாதனேபல கோடி" என்றபெரியார் திருவாக்குப் பிழைக்குமோ?

தங்காலமுழுதும் தமக்கும் தம்குடும்பத்துக்குமாகவே செலவழித்துச் சிவத்தி ரவியங்கவர்தல் குருத்திரவியங்கவர்தல் முதலிய அதிபாதகங்களைச் செய்துழன்ற வர் உழலுகின்றவர்களை யாரேனுங் குற்றஞ்சொன்னார்களா? அவர்மீது பத்திரிகை வெளியிட்டார்களா? பின்னையார்மீது அங்ஙனங் குற்றமேற்றினார்கள்? பொதுநன் மைகுறித்துப் பொதுப்பொருள்கொண்டு உண்மையாகச்சைவபரிபாலனம் தமிழ்க் கல்விப்பரிபாலனஞ் செய்து அவற்றிற்கே தங்காலமுழுதும் செலவழித்த மகான்க ளாகிய ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள்மீதும், ஸ்ரீலஸ்ரீ இராமலிங்கசுவாமிகள்மீதும் இவர்க ளைப்போன்ற பொதுநன்மைசெய்தவர்கள்மீது மன்றோ? அவர்கண்மீது பத்திரி கையச்சிட்டு வெளிப்படுத்தினவர்கள் ஒருவரா இருவரா? ஆதலால் பொதுநன்மை செய்யப்புகுந்த பண்டிதர் மாத்திரம் அழுக்காறுடைய பகைவராலாயினும் குற்றங் கூறப்படாது தப்புதல்யாங்ஙனம்? அவர்மீதுங் குற்றமில்லை யென்று நாம் சொல் லவில்லை. ஒருசபை ஏற்படுத்தி அதன்மூலம் நடப்பிக்கவேண்டிய சிதம்பரசைவப் பிரகாசவித்தியாசாலைத் தருமத்தைப் பொன்னம்பலபிள்ளையவர்கள் தாமொருவரே நடத்தும்படி ஏற்பாடுசெய்த பண்டிதர் பெருங்குற்றமுடையரன்றோ? அக்குற்றத் தினின்று மவர் தப்புமாறியாங்ஙனம்?

நாவலரவர்கள் கருதிய தருமங்களை அவர்களீட்டிவைத்தபொதுப்பொருளிற் போனது போக எஞ்சிய பொருள்கொண்டு அவர்கள் சொந்தக்காரர் நடத்துதல் அருமையும் பெருமையுமன்று. பண்டிதர், தம் நன்முயற்சியாற்சம்பாதித்த பொரு ள்கொண்டு அத்தருமங்களை நடத்துதல் மிகுந்த அருமையும் பெருமையுமாம். இது சத்தியபுத்தியுடன் சைவசமயாபிவிருத்தியையும் தமிழ்க்கல்விவிருத்தியையும் விரு ம்பியிருக்கும் நல்லறிவாளர் யார்க்கு மொப்பமுடிந்த சித்தக்கருத்தேயாம். இவ் வுண்மையோராது நீர் ஆசையம்பலத்தினின்றுமொட்டமெல்லாம் நுமக்கும் நும் போலிகட்குமே இயைந்ததொரு பொம்மலாட்டமென்றொழிவர் அந்நல்லறிவாளெ ரென்க.

நாவலரவர்கள் தாங்கருதிய தருமங்கட்குப் பலர் பெருமிடையூறுசெய்தார்கள் என்றும் அதனால் தாங்கருதிய தருமங்கள் பெரும்பாலன நிறைவேறவில்லையென் றும் ஆவேதனத்தில் எழுதியிருக்கின்றார்கள். இப்பொழுது நாவலரவர்கள் சொந் தக்காரரே, அவர்கள் கருதிய தருமத்தைப் பிறர் செய்யப்புகுங்கால் பெருமிடையூ றுசெய்கிறார்கள். அந்தோ! அந்தோ! இவர்கள் செய்கை யிருந்தவாறென்னையென் று அறிஞர் எள்ளி நகையாடுகின்றனர். நாவலரவர்கள் மாணாக்கர் என்றும் சொந் தக்காரர் என்றும், சொல்லிக்கொண்டு அவர்கள் தருமப்பணத்தில் மாசம் ௩௦ ரூபா வேதனம்பெற்றுச் சீவிப்பவர் அவர்கள்மீது குற்றமேறும்படி தாம் நடந்துகொள் ளுதல் புத்தியீனமும் நன்றிமறத்தலும் குருத்துரோகமுமாமென்றுணர்ந்து இனி யேனும் அதனை யொழிந்து சீர்பெறுவாராக.

௩௯. "பண்டிதரும் தருமந்தான் செய்கின்றார்; கோர்ட்டுவிவகாரந் தெரிந்த வர். ஆதலால் நாவலர் பக்ஷத்தார் ஏன் அவர்மேல் வழக்கெடுத்துப் பொருட்செலவு செய்து அவமானமடையவேணும் பண்டிதரோடு சமாதானமாகக் கூடாதா? என் றுஞ் சிலர் சொல்லுகின்றாராம்" என்றீர்.

அங்ஙனம் சொல்பவர் யாவராயினு மாகுக. அவர் தங்கருத்திற்றோன்றிய நீதியைச் சொல்லப்புகுந்தனராயினும் கோர்ட்டு விவகாரவிஷயத்தில் மோசம் போய்விட்டார் என்றே யாம் உறுதியாய்ச் சொல்லுவேம். கோர்ட்டுவிவகாரம் பண்டிதருக்கு ௫0 வயசாகியும் தெரியாது. இதுவரை விவகாரம்பற்றிக் கோர்ட்டு வாசல் மிதித்துமிரார். ஆசிரியரிடம் படித்துக்கொண்டிருக்குஞ் சிறுபிராயத்திற்றானே சுப்பிரீங்கோட்டிற் சாக்ஷியஞ்சொல்லித் தமது ஆசிரியருக்கு அநுகூலஞ் செய்யப் புகுந்து பிரதிகூலஞ் செய்து உலகம் தம்மை நகைக்கும்படி பண்ணிக் கொண்டவரே கோர்ட்டுவிவகாரம் தெரிந்தபெரியார். அதுபற்றியே பிறரும், "கோர்ட்டில் நுழைந்து தங்காலமெல்லாவற்றையும் அநிபாதகஞ்செய்து கழிக்குமவர்" என்று எழுதியிருக்கின்றார்கள். விவகாரந்தெரிந்த வீற்றினாலேதான் அது தெரியாத ஏழைகளை வாயிற்போட்டுக்கொண்டு வருகின்றார். அதனால் அவர், தொழுதுகொண்டிருந்தானொருவற்கு ஒருபையன் ஊசியாற்குத்தி ரூபாவாங்கியதனாலடைந்த பலன்போலும் பலனைத் தப்பாதடைவர்.

௩௯. "சமாதானத்தை யார் அவாவவேண்டியவர்" என்றீர்.

தருமச்சொத்தைத் தமக்கும் தமது குடும்பத்துக்கும் ஆக்குபவர் எவரோ அவரே அவாவவேண்டும். இதுவும் உமக்குத்தெரியாதா?

௪0. "தாய்க்கொலை சால்புடைத்தென்பாருமுளர்" என்றீர்.

அங்ஙனம் கூறுபவரை யாங்கண்டுமிரோம் கேட்டுமிரோம். "தாயைக்கொல்லி மொட்டையனுக்கு மூரிற்பாதி" என்று பழமொழியிருத்தலால் நுமது நியாயமில்லாச் சொற்செயல்களை அங்கீகரிப்பாருமுளராதல் அதிசயமன்று. அதனால் அறிஞர் மலையாரென்க.

இதுகாறும் யாங்கூறியவாற்றால், பண்டிதர் தமது வித்தியாசாலையை நடாத்துதற்கு வலாற்காரமாக யாரையாவது வரும்படி வற்புறுத்தியழைக்கவில்லையென்பதூஉம், நாவலரவர்கள் புத்தகத்தைப் பண்டிதர் அச்சிட்டமை சதாசிவப்பிள்ளையவர்கட்குடன்பாடென்பதூஉம், ஐந்துவருஷகாலமாக அச்சிட்டுவருகின்றாரென்பதூஉம், ஆக்ஷேபித்தவர் பொன்னம்பலபிள்ளையால் அனுப்பப்பட்டவரேயன்றிப் பிறரின்றென்பதூஉம், அவருக்குத் தக்க சமாதானஞ் சொல்லப்பட்டதென்பதூஉம், பொருளாசை பொன்னம்பலபிள்ளையவர்களுக்கேயன்றிப் பண்டிதருக்கின்றென்பதூஉம், பண்டிதர் செய்கையே அறிஞரால் நன்குமதிக்கப்படுவதென்பதூஉம், நாவலரவர்கள், புத்தகவருவாய்கொண்டு வித்தியாசாலைகளை நடத்தினவர்களன்று உலகத்தார் கொடுத்த பொதுத்தருமப்பொருள் கொண்டு நடத்திவந்தவர்களென்பதூஉம், பண்டிதர் நாவலரவர்கள் கருத்துக்குப் பரமாணுப்பிரமாணமாயினும் விரோதஞ்செய்யவில்லை என்பதூஉம், பண்டிதர் புத்தகமச்சிடுதலைக்குறித்து உலகர் கூறுவனவாக எழுதியனவெல்லாம் பொன்னம்பலபிள்ளையும் அவரைச்சார்ந்த ஒருசிலரும் கூறுங் கூற்றேயாமென்பதூஉம், நாவலரவர்களுக்குப் பிற்காலத்திலும் வித்தியாசாலைகள் முன்னுள்ள மூலதனங்கொண்டு நடத்தப்படுகின்றனவென்பதூஉம், நகரத்தார் வழக்கிற்குப்பொருள் செலவழிக்கவிருக்கிறார்கள் என்று பண்டிதர் சொன்னார் என்பது கற்பனையேயாமென்பதூஉம், குருவாக்கியபரிபாலனம்

பண்ணி நாவலரவர்கள் செயலை அநுசரிக்கவுந் தவதரித்தவர் இன்னாரென்பதை உலகஞ் செய்கையாலறிந்து கொள்ளுமென்பதூஉம், பண்டிதர்மீது குற்றமேற்றுதற்காகப் பிறர் கற்பித்துக் கூறும் வெற்றுரை நின்றுபயன்றருவதொன்றன்றென்பதூஉம், தருமப்பொருளிற் சமயம்பார்த்துக்கைவைப்போர் இன்னார் என்பதூஉம், புதையற்பொருளைக் காத்திருக்கும் தெய்வம் இது வென்பதூஉம், நாவலரவர்கள் புத்தகங்களைப்பண்டிதர் அச்சிடுங்கருத்துச் சதாசிவப்பிள்ளையவர்களுக்கு நன்கு தெரியுமென்பதூஉம், அவர்களிடத்துக் கணக்குக் கேட்கப்பட்டதென்பதூஉம், சதாசிவப்பிள்ளையவர்கள் காலத்தில் வித்தியாசாலைவரவுசெலவு இருப்புக்கணக்கின்றென்பதூஉம், "நாவலரவர்கள் வித்தியாசாலைக்கணக்கெல்லாங் கண்டபடி பழுதாகட்டும் அதன்பின் இழுத்து விடுவோமென்றெண்ணினீர்களா? என்றது வெற்றுரையாரவாரமேயாமென்பதூஉம்,நாவலரவர்கள் தருமபரிபாலகருக்குத் தனிமையாக நேரிலும் கடிதமூலமாகவும் பண்டிதர் புத்திபுகட்டினாரென்பதூஉம், நாவலரவர்கள் தருமபரிபாலனஞ் செய்தோர் என்று பண்டிதராலே சுட்டப்பட்டு மூற்றுந் தாக்கப்பட்டவர் கலியாணசுந்தரராலே சுட்டப்பட்டவரன்றென்பதூஉம், தருமச்சொத்தை யபகரித்துப் பொருளீட்டு முபாயமுடையாரிவ ரென்பதூஉம், அவரை நகரத்தார் இனி நன்குணர்ந்து கொள்ளுவாரென்பதூஉம், நகரத்தாருக்கு இப்பொழுது புண்ணியவான்கள் என்றற்றொடக்கத்து விசேடணங்கொடுத்துப் பொன்னம்பலபிள்ளை கூறல் உண்மைக்கருத்தன்றென்பதூஉம், அது பண்டிதருக்குப் பொன்னம்பலபிள்ளை காரைக்குடியிலிருந்தனுப்பிய கடிதத்தால் இனிது விளங்குமென்பதூஉம், சுப்பிரமணியவித்தியாசாலையைப் பண்டிதர் நடத்தமுடியாதிருந்தால் என்னுங்கூற்று அபத்தமேயாமென்பதூஉம், நாவலரவர்கள் வித்தியாசாலைத்தருமத்தைச் செவ்வே நடத்தமாட்டாதவர்கள் என்று குறிக்கப்பட்டவர் இவரென்பதூஉம், பண்டிதர் தாம் நாவலரவர்கள் தருமத்தைநடாத்துதற்கு ஆசைப்பட்டிலரென்பதூஉம், சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலை நூதனமாகக் கட்டி முடித்தமை பண்டிதர் ஊக்கிவிட்டமையாலென்பதூஉம், நாவலரவர்களுக்குப்பின் அவர்கள்வித்தியாசாலைகளை நடாத்துதற்குச் சதாசிவப்பிள்ளையால் நியமிக்கப்பட்டமானேசர்கள் பலர் என்பதூஉம், கைலாசபிள்ளையவர்களும் பொன்னம்பலபிள்ளையவர்களும் ஈற்றிலே நியமிக்கப்பட்ட மானேசர்கள் என்பதூஉம், நாவலரவர்கள் தருமத்தை நடாத்துபவரிடத்துக் குறைவுகாணப்பட்டபோது அவ்வக்காலத்து அவ்வவர்க்கேற்ற பிரகாரம்புத்திகூறப்பட்டதென்பதூஉம், எத்திறத்தார்மாட்டுங் குற்றங்காணப்படின் பண்டிதர் அஞ்சாதுபுத்திபுகட்டுவாரென்பதூஉம்,வீண் சண்டைக்கிழுப்பவரிவரென்பதூஉம், இக்காலத்திலே நாவலரவர்களைக்குருவாகப் பாவித்துக் கல்விகற்று அவர்கள் மாணாக்கருட் சிரேட்டராயினாரிலரென்பதூஉம், பண்டிதர் நாவலரவர்களின் மாணாக்கரின் மாணாக்கர் என்பதற்கு அருவருப்புறவில்லையென்பதூஉம், அவர் மாணாக்கரின் மாணாக்கர் என்பது காலவகையினாலே பழையன கழிதலும் புதியன புகுதலுமாமென்பதூஉம், சுந்தரமூர்த்திசுவாமிகள் முதலிய முத்தர்களை ஆசிரியர் முதலிய பெத்தர்களோடு ஒப்புமைப்படுத்தி அவர்கள் செயலை இவர்கள் செயலுக்குவமையாக்குதல் பழியும் பாவமும் அறிவின்மையுமேயாமென்பதூஉம், நம்மவர் என்று சுட்டப்பட்டவர் நாவலரவர்களுக்கு மேலும்மேலும் பெருமையை உண்டாக்குகின்றாரென்பதூஉம்,

நாவலரவர்கள் சொந்தக்காரரென்றுகூறுபவரே தம்பெருமைசொல்லப்புகுந்து நாவலரவர்களுக்கு இல்லாதகுறையை ஏற்றிவிடப்பார்க்கிறார் என்பதூஉம், ஆசிரியர் முறை இவ்வாறிருக்கவேண்டுமென்பதூஉம், பண்டிதர் அழுக்காறும் பொருளவாவுமுடையரல்லரென்பதூஉம்,பண்டிதர் ஆதிபத்தியத்தை வேண்டிச் சதாசிவப்பிள்ளையவர்களை வசீகரித்திலரென்பதூஉம், அவர்கள் இயல்பாகவே பண்டிதர் வசப்பட்டிருந்தார்களென்பதூஉம், பிறர்மேல் பண்டிதர் இன்னாச்சொற்றொடுக்கமுயலவில்லையென்பதூஉம், பிறராக்கத்தின்கண் பண்டிதருக்கு அழுக்காறில்லையென்பதூஉம், பண்டிதர் பொருளீட்டுதல் அறநெறியே யென்பதூஉம், அவர்மீது குற்றமேற்றுவோரீட்டுதலே மறநெறியென்பதூஉம், நாவலரவர்கள் புத்தகத்தை யச்சிட்டு அவர்கள் தருமத்தைக்கெடுத்தவர்கள் சொந்தக்காரரும் வேறு சிலருமன்றிப் பண்டிதரன்றென்பதூஉம், பண்டிதர் அவற்றையச்சிட்டு நாவலரவர்கள் கருதியதருமத்தை விருத்திசெய்கின்றாரென்பதூஉம், "தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்—றன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்றற் றொடக்கத்துக் குறண்முதலியனவற்றிற்கு இலக்கியர் அவற்றை எடுத்துக்காட்டியவர் தாமே யென்பதூஉம், கோட்டுவிவகாரந்தெரிந்தவர் சுப்பிரீங்கோர்ட்டிலே ஒருபக்கஞ்சார்ந்து சாக்ஷிசொன்னவரே என்பதூஉம், சமாதானத்தை அவாவவேண்டியவர் இன்னாரென்பதூஉம், தாய்க்கொலைசால்புடைத்தென்பார் இலரென்பதூஉம் நாட்டப்பட்டன.

துலைநாவன்னசமநிலையுளத்தொடு இதனைவாசிப்போர் உண்மையை உணர்ந்து யார்செயல் குளிக்கப்போய்ச் சேறுபூசுதற்கொப்பாகுமென்பதை உணர்வார்கள். கோட்டமனத்தார் மாறிக் கூறுவனபயனிலவென் றொதுக்கப்படும். அவர்க் கறையோ சொல்லொணாதே.

"தண்டா யுதமுந் திரிசூ லமும்விழத் தாக்கியுன்னைத்
திண்டா டவெட்டி விழவிடுவேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே."

"என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.

உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.

தீயவை செய்தார் கெடுத லொிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல்.

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.''

''உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே.''

''இங்ங னந்திரு நீங்கியே துயருழந் திறப்ப
ரங்ங னம்பெரி தாரிருண் மூழ்குவ ரதற்பி
னுங்ங் னம்பிறந் தயருவ ரென்றுமீ துலவா
ரெங்ங னுய்வரோ பிறர்தமக் கல்லல்செய் திடுவார்.

தீது நல்லன வாயிரு திறத்தவுந் தெரிந்தே
யேதி லார்க்கவை செய்வரேற் றமக்குட னெய்தும்''

''நீங்கள் குற்றஞ் சுமத்தப்படாமலிருக்கவேண்டில், பிறர்மேற் குற்றஞ்சுமத்தவேண்டாம். நீங்கள் குற்றஞ் சுமத்துவதுபோலக் குற்றஞ்சுமத்தப்படுவீர்கள். நீங்கள் அளக்கும் அளவினால், உங்களுக்கும் அளப்பார்கள். உன் கண்ணிலுள்ள உத்திரத்தை உணராமல் உன் சகோதரனுடைய கண்ணிலிருக்கிற சிராயைப்பார்க்கிறதென்? உத்திரம் உன் கண்ணிலிருக்க, நீ உன் சகோதரனைநோக்கி, உன் கண்ணிலுள்ள சிராயை எடுத்துவிடுகிறேன், இடங்கொடு என்று சொல்வதென்ன? கபடியே, முன்பு உன் கண்ணிலுள்ள உத்திரத்தை நீக்கிவிடு.

சுந்தரரே இவைகளைப் பதறாமல் பலமுறை ஆய்ந்து ''வில்லேருழவர் பகை கொளினுங் கொள்ளற்க—சொல்லே ருழவர் பகை.'' என்பதை ஓர்ந்து உய்திபெறுதிர்.

சூசனம்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்—கோடாமை" யையே இன்றியமையாத பேரணிகலனாக மேற்கொண்ட பெரியோரே!

ஸ்ரீலஸ்ரீ. நாவலரவர்கள், தமிழ்ப்பள்ளிக்கூடம் தாபித்தற்கென்று சொல்லிப் பலரிடத்தும் பணம் வாங்கி இங்கிலிஷ்பள்ளிக்கூடமுந் தாபித்து அதற்கும் அப்பொருளை உபயோகப்படுத்தலாமா என்று குறைகூறி உண்மையுணராத வொருசிலர் அக்காலத்து வெற்றாரவாரப்பேரொலி செய்தாற்போல, சுந்தரரென்பார், சுவாமிநாதபண்டிதர், சிதம்பரவித்தியாசாலைக்குக் கேடுவர நாவலரவர்கள் புத்தகங்களை அச்சிட்டுச் சுப்பிரமணியவித்தியாசாலைக்குபயோகப்படுத்தலாமா என்று இக்காலத்து வெற்றாரவாரப்பேரொலி செய்யக்கேட்டீர்கள். அவர் பண்டிதர்மீது எற்றித் தூற்றிய குற்றங்களின் நிராதாரத்தை நாங் காட்டிய அதிப்பிரபல நியாய ஒளியிற் கண்டீர்கள். பண்டிதர் கைக்கொண்ட தருமப்படைக்கலத்தால் மறுத்த தருமபரிபாலகர் பொய்மையாகிய பழம்பாம்புப்புற்று வெட்டுண்டு பிதிர்ந்தமையாலன்றோ, அப்புற்றைப்பற்றியபாம்பு சத்தியபுத்தியுடைய பண்டிதரைச் சீறிச்சினந்து கடிக்க வெளிப்பட்டது? ஆயினும் வெளிப்பட்டமை ஜெயமங்களத்திற்கோர் மகா அறிகுறியாதலால், தேவசேனாதிபதியாகிய திருச்செந்தூர்ச் சுப்பிரமணியக்கடவுள் திருவடிகளைச் சிந்தித்து யுத்தசன்னத்தரான "தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்—ரொண்டிறல் யோகிகளே பேரணியுந் தீர்க—டிண்டிறற்சித்தர்களே கடைக்கூழை சென்மின்க—ளண்டர்நா டாள்வோநா மல்லற் படைவாராமே." "ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்—மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமி—ஞனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்—வானவூர் கொள்வோநா மாயப்படை வாராமே."

நாவலரவர்கள் மாணாக்கர் என்று சொல்லிக்கொண்டு வந்த சிலர் பற்பலதருமஞ் செய்தற்கென்று சொல்லிப் பணம் வாங்கிக்கொண்டு அவற்றைச்செய்யாதுவிடுத்தனர் என்று இழித்துச்சொல்லுந்தொனிப்பிரவாகம் எங்கும்பரந்து சர்வதர்மநாசன காரணமாய் வைதிக மற்றச்சைவவித்துவான்களெல்லாருக்கு முண்டாக்கிய பெரிய தோரபவாதத்தை நிக்கிரகித்துப் பலர்க்கும் உறுதிபயக்குந் திருச்செந்தூர்ச் சுப்பிரமணியவித்தியாசாலையின் மெய்த்தருமத்தையும் சுவாமிநாதபண்டிதரையும் ஆவியிற் போற்றி அங்கீகரித் தின்புறுதல் சைவசமயிகள் யாவர்க்கும் நியாயமும் இன்றியமையாத கடப்பாடுமாம். ஆகலான், அவர்களுக்கும் மற்றெவர்களுக்கும் அகிதஞ்செய்யுங் காரணமாய் எழுந்த வித்தியாபிமானிகளுக்கு விக்யாபனத்தை நிராகரணஞ் செய்தோம். பேரிருளைப் போக்கவாரொளியாய் உதித்த சூரியப்பிரகாசத்தைச் சிறுதுரும்பொன்று கண்ணுக்கணித்தாய் நண்ணி மறைத்தாற்போல, பொய்யிருளை யோட்டி மெய்யொளியைப் பரப்பும் பண்டித சூரியப்பிரகாசத்தை மறைத்துக் கெடுக்க துவஜங்கட்டிப் புறப்பட்ட சுந்தரரைக் கடிந்தோம். அதனால்,

மண்ணில் வளர்சைவர்—கண்ணில் வருதிரு
வெண்ணில் பலவெமக்—கெண்ணில் மகிழ்ச்சியே.

வித்தியாபிமானிகளுக்கு விக்யாபனநிராசனப்பொழிப்பு

ஒருவாறு முற்றிற்று.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

தருமசிந்தனை.

சைவசமயிகளுக்கு விக்கியாபனம்.

நான் ஜயவருஷ முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலிஷ் வித்தியாசாலையிலே இங்கிலிஷ் கற்றேன். பிலவருஷ பார்சிவல் துரைக்குத் தமிழ்ப்பண்டிதனாயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை; என்னுடைய தமையமார்கள் நால்வரும் இயன்றமட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாயிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலகவருஷ புரட்டாதிமீ பரித்தியாகஞ்செய்தேன். பார்சிவல் துரை "நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்; தாங்கள் என்னை விடலாகாது" என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லியவழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலிஷிலே அற்பவிற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப் பின் இங்கிலிஷ்கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ப உத்தியோகம்பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என்சத்திக்கேற்ற உத்தியோகத்தின்பொருட்டு முயற்சிசெய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப்பார்த்தும், உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க்கல்வித் துணைமாத்திரங்கொண்டு செயப்படும் உத்தியோகம் வலியவாய்த்தபொழுதும், அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒருதுட்டாயினும் வாங்காது வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமே யுடையது என் சென்மதேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவசமயத்தையும் அதன்வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல்வேண்டும் என்னும் பேராசையேயாம்.

இப்பேராசையினால் இருபதுவருஷகாலம் நான் செய்த முயற்சிகள் பல; அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச்சில. சைவசமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தையுடையவர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவிசெய்தார்களாயின் நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறிவிடும்; நிறைவேறின், என்னைப் போலவே பிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச் செய்வர்கள்; செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்.

தன்னிம்மைப்பயன்களெல்லாம் இழந்தும் கைம்மாறு வேண்டாதும் இருபது வருஷகாலம் சுவசமயவிருத்தியின்பொருட்டு முயற்சிசெய்பவன் ஒருவன் மற்றைச் சமயத்தார்களுள் இருப்பானாயின், அவன் எடுத்தமுயற்சிகளுள் யாது சித்திபெறாது. நம்முடைய சைவசமயிகள், தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும்பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவிசெய்யாமைமாத்திரையின் அமையாது, பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்றார்கள். இதனால் எனக்கு யாதாயினும் ஓர்குறைவு உண்டு என்னுங் கவலை எனக்குச்சிறி

தும் இல்லை. எனக்குச் செயப்படுவனவற்றைக் காணுந்தோறும் கேட்குந்தோறும், பிறருக்குத் தமிழ் கற்றலின்கண்ணும் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின்கண்ணும் ஊக்கங்கிளராவண்ணம் தடை விளைகின்றதே என்னுங் கவலை எனக்குப்பெரிதுமுண்டு. பூர்வகாலத்திலே சைவசமயவிருத்திப்பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவசமயிகளாலே நன்குமதிப்பும் பரசமயிகளாலே இடையூறும் செயப்பட்டன. தற்காலத்திலே சைவசமயவிருத்திப்பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சுவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செயப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவுமில்லை, என்னை அவமதிக்கவுமில்லை. இஃதென்னையாச்சரியம்!!! சைவசமயவிருத்திப்பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களாலே அவமதிப்பும் இடையூறும் செயப்பட்டபோது, நான் தமிழ்க்கல்வியிலும் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளிலும் போக்குங்காலத்தை முன் பயின்ற இங்கிலிஷிலேயேபோக்கி உத்தியோகமும் செல்வமும் பெற்று நம்மவர்களாலே நன்குமதிக்கப்படல்வேண்டும் என்று விரும்பாவண்ணம் திருவருள் சுரந்த சிவபெருமானது பெருங்கருணைத் திறத்தை மறவாதிருத்தலே எனக்கு வாய்ப்புடைத்தாயதோர் பெருஞ்செல்வம். இஃதிங்ஙனமாக.

நிலையில்லாத என்சரீரம் உள்ளபொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னுங்கவலை என்னை இரவும் பகலும்வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க்கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கியஸ்தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின்பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும் வேண்டப்படுவர்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையறாமுயற்சியும் ஆரோக்கியமும் உடையர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து உயர்வாகிய இலக்கண விலக்கியங்களையும் சைவசாத்திரங்களையுங் கற்பித்தல்வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப்பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்.

இதன்பொருட்டு ஏறக்குறைய மாசம் ஒன்றுக்குச் செல்லத்தக்க செலவு வருமாறு:—

போசனம், விளக்கெண்ணெய், க்ஷௌரம், வஸ்திரம், புத்தகம் இவற்றின் பொருட்டுப் பிள்ளை—௧ க்கு ரூபா ௫ வீதம் பிள்ளைகள் ௧00 க்கு ரூபா ௫00.

முதற்றமிழுபாத்தியாயர் வேதனம்...........	,,	௫0
இரண்டாந்தமிழுபாத்தியாயர் வேதனம்......	,,	௩0
மூன்றாந்தமிழுபாத்தியாயர் வேதனம்........	,,	௨0
சமஸ்கிருத உபாத்தியாயர் வேதனம்..........	,,	௨0
சிவாகமபண்டிதர் வேதனம்....................	,,	௨0
ஓதுவார் வேதனம்..............................	,,	௧0
இலேககர் வேதனம்............................	,,	௭
கணக்கப்பிள்ளை வேதனம்.....................	,,	௫
சேவகன் வேதனம்..............................	,,	௫
தோட்டக்காரன் வேதனம்......................	,,	௩
புத்தகாதி சம்பாதனம்..........................	,,	௩0
	ஆ ரூபா	௭00

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090,

இவ்வுத்தமோத்தம தருமத்தின்பொருட்டு எண்பதினாயிரம் ரூபா வேண்டும். எழுபதினாயிரம் ரூபாவைக்கொண்டு நீர்ப்பாய்ச்சலுள்ள நல்ல கிராமம் வாங்கிவிடல்வேண்டும். பதினாயிரம் ரூபாவைக்கொண்டு வித்தியாசாலையும் மடமுங் கட்டுவித்தல்வேண்டும். நம்மவர்கள் பலர் சிறிது சிறிதாக உபகரிப்பினும், "ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை" என்றபடி இத்தொகைசேர்ந்துவிடும். இத்தொகை சேராதொழியினும், சேர்ந்த தொகைக்கிசையவாயினும் நடத்தலாமே. சைவசாத்திரங்களைக் கற்போரும், கற்பிப்போரும், அவர்களுக்கு அன்னம் வஸ்திரமுதலியவை கொடுப்போரும், சைவாகமவுணர்ச்சி நிலைபெறும்பொருட்டுத் தனராசிகளையும் பூமிகளையும் கொடுப்போரும் பெறும்பயன், சுப்பிரமணியக்கடவுள் அகத்தியமகாமுனிவருக்கு உபதேசித்தருளிய சிவதருமோத்தரம் என்னும் உபாகமத்திலே, சொல்லப்பட்டிருக்கின்றது.

இதுவே எல்லாத்தருமங்களுக்கும் மூலமாகிய உத்தமோத்தமதருமம் என்பது சாத்திரம் யுக்தி அநுபவம் என்னும் மூன்றுக்கும் ஒத்ததுணிவு. இது ஒருவராலும் மறுக்கப்படமாட்டாது. இது சத்தியமே எனக் கொள்ளினும், இத்தருமத்தை நடத்துதற்கு நான் யோக்கியனல்லேன் என்னுங் கருத்து அனேகருக்கு உண்டு. அக்கருத்துடையவர்கள் தாங்களே நடத்தக்கடவர்கள்; அது கூடாதவழி யோக்கியராகிய பிறரைக்கொண்டாயினும் நடத்துவிக்கக்கடவர்கள். இத்தருமத்தை நானே நடத்தல்வேண்டும் என்னுங் கருத்து எனக்கு இல்லை. "யாவர்குத்தினும் அரிசியானாற்போதும்" என்றபடி யாவர் நடத்தினும் இத்தருமம் நிறைவேறினாற்போதும் என்பதே என்கருத்து.

மேற்கூறியபடி ஒருவித்தியாசாலை நடத்தப்படுமாயின், அதிலே தேர்ச்சியடைந்தவர்களைத் திருக்கோயிலதிகாரிகளெல்லாரும் தங்களாலே நடத்தப்படுந் திருக்கோயில்களிலே சைவப்பிரசாரகர்களாக நியோகித்து, அவர்களைக்கொண்டு சனங்களுக்குச் சைவசமயத்தைப் போதிப்பிக்கலாமே. தேவாலயந்தோறும் சனங்களுக்குச் சைவசமயத்தைத் தேசபாஷைகளிலே போதித்தல்வேண்டும் என்று காமிகாகமத்திலே சிவபெருமானால் விதிக்கப்பட்டிருக்கின்றது. நம்முடைய சைவமடாதிபதிகள், இவ்வுண்மையை அறிந்திருந்தும், தங்களால் நடத்தப்படுந் திருக்கோயில்களிலாயினும் சைவப்பிரசாரணம் நடத்தியருளாததென்னையோ! அவர்கள் செய்தருளின், அதுகண்ட பிறரும் அவ்வாறு செய்வார்களே. இங்ஙனஞ் செயப்படிற் சற்சமயமாகிய சைவசமயம் எங்கும் தழைத்தோங்குமே. இதனை எட்டுணையும் சிந்திப்பார் இல்லையே! ஏழைசொல் அம்பலத்துக்கேறுமா!!!

இது அவசியஞ்செயற்பாலதாகிய பரமதருமம் என்பது தமது கருத்திற்பதியினும், என்வாயிற்பிறந்தமைபற்றி இதனை அவமதிப்பவர் பலர். ஐயையோ இதற்கு யாது செய்யலாம்!!! இராசாவுடைய ஆஞ்ஞை புலையன்வாயிற் பிறந்தமைபற்றி அதற்கு அமைந்தொழுகாது அதனை அவமதிப்பவர் இல்லையே. சருவலோகைகநாயகராகிய சிவபெருமானுடைய ஆஞ்ஞை புல்லனாகிய என்வாயிற் பிறந்தமைபற்றி அதற்கு அமைந்தொழுகாது அதனை அவமதிப்பதுதகுதியாமா, ஆகாதே.

"அடியவர் குறைவுதீர்த்தாண் டருள்வதே விரதம் பூண்ட" பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமான், நான் நல்லறிவும் நல்லொழுக்கமும் தம்மாட்டுமெய்யன்பும் சற்றுமுற்றறியாப் பரமசண்டாளனேயாயினும், தமது சமயங் குன்றுதலைக்காண்டலின்கண்ணே பெருங்கவலையும் அச்சமயத்தை வளர்த்தலின்கண்ணே பேராசையும் உடைமையினாற்றானே என்னிம்மைப்பயன்களெல்லாவற்றையும் இழந்தும் பலராலே பலவகையிடையூறுகளை அநுபவித்தும் வருத்தமுறும் உண்மை

யைத் திருவுளங்கொண்டிரங்கி, என் கருத்தை யான் எடுத்ததேகம் விழுமுன் நிறைவேற்றியருளும்பொருட்டு, அவருடைய திருவடிகளைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

சென்னபட்டணம் } இங்ஙனம்.
விபவ௵ சித்திரைமீ". } நல்லூர் - க. ஆறுமுகநாவலர்.

ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் கருத்தின்படி அவர்கள் மாணாக்கரும், * அவர்கள் மருகர் மாணாக்கருமாகிய என்னாலே திருச்செந்தூரில் தாபிக்கப்பட்ட சுப்பிரமணியவித்தியாசாலை, அவர்கள் சிதம்பர வித்தியாசாலைக்கு இடையூறுண்டாதற்கு ஏதுவாயிருக்கின்றதென ஒருவர் சொல்லிக்கொண்டிருக்கின்றார் என்று யான் கேள்விப்பட்டேன். அதனுண்மையை அறியாதவர்கள் அதனை மெய்யெனக்கருதி மயங்காமைப்பொருட்டும், அவர்கள் தருமத்தை இதுகாறும் நடாத்தினவர்களாலேயோ என்னாலேயோ யாழ்ப்பாணவித்தியாசாலை சிதம்பர வித்தியாசாலைகட்கு இடையூறுளதாயிற்றென்பதை அவ்வித்தியாசாலைகளின் ஆவேதனங்களாலும் நாவலரவர்கள் நல்லூர்க் கந்தசுவாமிகோயில் விஷயமாக வெளிப்படுத்திய சிறுபுத்தகங்களாலும், பிறபுத்தகங்களாலும் அவர்களுக்குப்பின் அவ்வித்தியாசாலைகளை நடாத்தினவர்கள் நிகழ்த்திய செயல்களாலும் ஆராய்ச்சிசெய்து உண்மையை யாவர்க்கும் வெளிப்படுத்தக் கருதியும், முக்கியஸ்தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணஞ்செய்வித்தலும் அவசியகர்த்தவ்விய சிவபுண்ணியமாமென்பது நாவலரவர்கள் கருத்தாமென்பதைப் பலருமறிதற்பொருட்டும் இவ்விக்கியாபனத்தைத் தாலிபுலாகநியாயம்பற்றி முதற்கண் வெளிப்படுத்தினேன்.

திருச்செந்தூர்ச்சுப்பிரமணியவித்தியாசாலை மாணாக்கர்கள், உற்சவகாலங்களிலே சுவாமிக்குப்பின் திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பாவும் தேவார திருவாசக முதலியனவும் ஓதிக்கொண்டுசெல்லும் முறைமையையும், வீதிகடோறும் நின்று சைவப்பிரசங்கஞ்செய்யும் முறைமையையும், ஊர்கள்தோறுஞ் சென்று புராணப் பிரசங்கஞ்செய்யும் முறைமையையும் அறிந்தவர்களுட் பாராட்டாதவர் ஒருவருமில்லையே. இப்புண்ணியச்செயல்களும், இவை நிகழ்தற்கு ஏதுவாகிய சுப்பிரமணியவித்தியாசாலையும் நாவலரவர்கள் கருத்துக்கு ஒத்தனவா ஒவ்வாதனவாவென்பதை விவேகிகள் பகுத்துணரக்கடவர்கள்.

திருச்செந்தூர்ச் சுப்பிரமணியவித்தியாசாலையை நாவலரவர்கள் தருமத்தை நடாத்துகின்றவராவது பிறராவது ஏற்றுத் தளராமல் நடாத்துதற்கு முன்வருவார்களாயின், அதற்குரிய மூலதனத்தோடு கொடுத்தற்குச் சித்தமாயிருக்கின்றேன். மூலதனம் ௬000 ரூபா. இதில் ௧000 ரூபாவுக்குக் கடைகளும் நிலமும் வாங்கப்பட்டன. ௫000 ரூபா செட்டியாரொருவரிடமிருக்கின்றது.

* * * இங்ஙனம்.

சுவாமிநாதபண்டிதர்.

---

* அவர்கள் மாணாக்கர் என்பது நல்லூர்க் கந்தசுவாமிகோயில்விஷயமாக அவர்கள் எழுதிய சிறுபுத்தகத்தாலினிது விளங்கும். * * * புத்தக விஷயம் இலௌகிகம்பற்றி இங்கே பதிப்பிக்கவில்லை.